## தோசை 10 காசு!

நம்ம ஊரில் 10 காசு நாணயங்களைப் பார்க்க முடியவில்லை. ஆந்திராவில் (கடப்பா) 10 காசுக்கு தோசை கிடைக்கிறது. அங்கு ஒரு குடும்பத்தினர் நீண்ட காலமாக உணவகம் நடத்தி வருகிறார்கள். தோசை விலை இப்போதும் 10 காசுதான்.

## 5½ லட்சம் பேருக்கு எயிட்ஸ்!

தமிழ்நாட்டில் 5 1/2 லட்சம் பேர் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

உடுமலை, அவினாசி, பொள்ளாச்சி பகுதியில் எயிட்ஸ் நோயாளிகள் எண்ணிக்கை அதிகம் எனப் புள்ளி விவரம் கூறுகிறது.

## பானைக்கு மாலையிட்ட மங்கை!

உத்திராஞ்சல் மாநிலத்தில் ஒரு திருமணம். மங்கல இசை முழங்கின. முகூர்த்த நேரம் நெருங்கியது. மணமகள் சவிதா, மணமேடையில் காத்திருந்தாள். ஆனால், மணமகன் தேவேந்திரசிங் வந்து சேர வில்லை.



ஒரே பரபரப்பு. மணமகன், பாதுகாப்புப் படைவீரர். பனி மழை பெய்ததால், அவரால் கல்யாணத்துக்கு வரமுடிய வில்லை. "திருமணத்தை தள்ளி வையுங்கள்" என்று தந்தி அனுப்பினார்.

இரு வீட்டாரும் சேர்ந்து புது முடிவு ஒன்றை எடுத்தனர். உடனடியாக திடீர் மாப்பிள்ளையை தயார் செய்தனர். அது மண்பானை. அதன் கழுத்தில் மணப்பெண் மாலை சூடினாள்.

சில நாட்களுக்குப்பின் புதுமாப்பிள்ளை ஊர் வந்தார். மணமகளுக்கு முறைப்படி தாலி கட்டினார்.



# ஊமை மனிதர்கள்

அனுராதா ரமணன்



## 1

வீடு பெரியதுதான். இந்தக் காலத்தில் இத்தனைப் பெரிய வீட்டை ஐயாயிரம் ரூபாய் வாடகைக்கு எந்தப் பைத்தியக்கார னும் தரமாட்டான்.

கதிர், சன்னல் வழியாக வெளியே பார்த்தான்.

தெருவே தெரிந்தது. வாசற்பக்கம் அடர்ந்து வளர்ந்திருந்த மாமரம், சன்னலின் விளிம்பை ஒரு பக்கம் தொட்டுக் கொண்டிருந்தது. சின்னதும், பெரிசுமாய் இப்பொழுதே காய்ப்பு தொடங்கிவிட்டது.

"கைக்குப் பக்கத்துல எட்டிப் பறிச்சிடலாம் போல இருக்கு இல்லே?"

கதிரின் முதுகுக்குப் பின்னால், கிச்சுகிச்சு மூட்டுகிற குரல்...

திரும்பிப் பார்க்கவேண்டிய அவசியமே இல்லை.

அமுதாதான்.

மற்ற நேரங்களில் எப்படியோ... கதிரிடம் பேசும்போது மட்டும், அமுதாவின் குரலில் தனி கிளர்ச்சி வந்துவிடும்.

கதிருக்கும் அது தெரியும். அதனாலேயே அவன், திரும்பிப் பார்ப்பதைத் தவிர்க்கிறான்.

அதுமட்டுமல்ல...

இப்பொழுது அவன் திரும்பினால், நிச்சயமாய் அமுதா

வுடன் எதிரும் புதிருமாய் மோதிக்கொள்ள வேண்டியதுதான்.

அதற்கு வசதியாகத்தானே அவன் நின்றுகொண்டிருக்கிறான்.

அவன், சன்னல் கம்பியில் முகவாயைப் பதித்துக் கொண்டான்.

உள்ளே, அண்ணி வசந்தா, தொண்டை கிழியக் கத்திக் கொண்டிருந்தாள்.

"மூணு படுக்கை அறை, ரெண்டு பெரிய அறை, ஒரு பூஜையறை, ரெண்டு வராந்தா... தவிர அறைக்கு அறை பால்கனி... இத்தனையையும் சேர்த்து ஒரு மனுசன், ஐயாயிரத்துக்கு வாடகைக்கு விடுறான்னா, ஏன் எதுக்குன்னு ஒரு வார்த்தை யாராச்சும் விசாரிச்சீங்களா?"

"........."

"அந்தப் பக்கம் தேனாம்பேட்டை, இந்தப் பக்கம் ஆழ்வார்பேட்டை. ஆபீசுக்குப் போக எனக்கும் தம்பிக்கும் வசதியா இருக்கும். கல்யாணக் கச்சேரிக்கெல்லாம் போயிட்டு வர இதைவிட வேறு வாய்ப்பு கிடைக்காதுன்னு சொல்லி..."

"இப்ப என்ன குறைஞ்சுபோச்சுங்கிறே, வசு? நிசமாவே சொல்லு. நாமும் பத்து வருடமா, பதினைஞ்சு வீட்டுல குடியிருந்துட்டோமே... இதைவிட உசத்தியா எந்த வீடாவது இருந்துச்சா?" –இது, கதிரின் அண்ணன் கணேசன்.

"அதுக்காக... பேய் உலாவுற வீடுதான் கிடைச்சுதா? புள்ள குட்டியோடு நாம நல்லா இருக்கவேணாமா? வீட்டுல கன்னிகழியாத என் தங்கச்சியும், முப்பத்தி அஞ்சு வயசிலும் கல்யாணமாகாத உங்க தம்பியும் இருக்கிறது மறந்து போச்சா?

இப்பத்தான் வேலைக்காரி சொல்றா... வீட்டுக்காரனோட முதல் சம்சாரம் பத்து ஆண்டுக்கு முன்னால் இங்கே தூக்கு போட்டு செத்துப்போயிட்டாளாம். இப்ப இருக்கிறது ரெண்டாவது சம்சாரமாம். செத்தவ, இங்கேதான் உசிரை விட்டிருக்கா. எங்கே தொங்கினாளோ... ஆவியா நடமாடுறாள்னா, எந்த இளிச்சவாயன் வாடகைக்கு



வருவான்?"

"உஷ்... கத்தாதே வசு. பேயும், பிசாசும் உன்னை என்ன பண்ணும்?"

"என்னது?"

"அவசரப்படாதே. முழுசாக கேளு. பேய், பிசாசு எல்லாமே சக்திவாய்ந்த அம்மன்கிட்ட தங்களோட வேலையைக் காட்டாது. உன்னைப் பார்த்தாலே கற்பகாம்பிகை மாதிரி இருக்கே. எது வந்தாலும் கையெடுத்துக் கும்பிட்டுட்டு ஒதுங்கிப் போயிடும்மா."

"களுக்!!" சிரித்த அமுதா, வாயைப் பொத்திக்கொண்டு நகர்ந்தாள். அப்படி அவள் நகரும்போது, சேலையின் விசிறல், கதிரின் புறங்கழுத்தை மிக நாசூக்காக பட்டும்படாமலும் தொட்டுச் சென்றது.

அவள் நகர்ந்துவிட்டாள் என்பது உறுதியானபின்தான் திரும்பினான், கதிர்.

வசந்தா, கணவனின் சமாதானத்தில் கொஞ்சம் வேகம் தணிந்தாலும், பெருமூச்செறிந்தபடி பேச்சைத் தொடர்ந்தாள்.

"என்னவோ... எத்தனையோ வீட்டுல இருந்தாச்சு. ஒவ்வொரு வீட்டுலேயும் பால்காய்ச்சிக் குடிக்கிறப்ப எல்லாம் நான், நம்ம குலதெய்வத்தை மனசார வேண்டிக்கிறதுல ஒண்ணும் குறைச்சல் இல்லே... 'கருப்பண்ணசாமி... இந்த வீட்டுக்கு வந்த நேரமாவது, அடுத்தாப்பல என் தங்கச்சி அமுதா கழுத்துல, இந்தக் கதிர் தாலி கட்டணும்'னு மன்றாடுறேன். சாமி இன்னும் மனசு இறங்கலே... இந்த வீட்டு ஆவியாவது அதை நடத்திக் கொடுக்குதான்னு பார்ப்போம்."

இப்பொழுது கதிரின் உதட்டோரத்தில் புன்னகை.

வசந்தா புத்திசாலி. மனதில் என்ன இருக்கிறதோ, வெளியில் சர்க்கரையாகப் பேசுவாள். அதுவும், கதிரின் காதில் விழவேண்டுமென்றே எதையாவது கூறி, தன் ஆற்றாமையை வெளிப்படுத்துவாள்.

இன்று, நேற்றா... அமுதா பூப்படைந்த நாள் முதல் அவள் இதை சொல்லிக்கொண்டுதான் இருக்கிறாள்.

யார் அவளிடம், கதிர் திருமணம் பற்றிப் பேச்செடுத்தாலும் 'நறுக்'கெனப் பேசி கத்தரித்துவிடுவாள்.

"யாரு... என் மச்சினன் கதிரையாச் சொல்றீங்க... அவனுக்குன்னுதான் ஒரு பொண்ணு வீட்டுலேயே வளர்றாளே..."

அதுலப் பாருங்க... என் கல்யாணத்தின்போது, இவ அஞ்சு வயசுக் குழந்தை... கதிருக்கு பத்தோ, பன்னிரண்டோ. அப்பவே எங்க மாமனார் தீர்மானமாச் சொல்லிட்டாரே... அமுதாதான் என் ரெண்டாவது மருமகள்ன்னு."

பெரியவங்க இன்னிக்கு உசிரோடு இல்லை என்றாலும், அவங்க சொல்லிட்டுப்போன வார்த்தை முக்கியமில்லையா?

அவளுக்கென்ன... அழகில்லையா, படிப்பில்லையா? இன்னொரு சேதி தெரியமா? கதிர், ஆபீசு நேரம் போக, இசை நிகழ்ச்சி நடத்துறானில்லையா? அபி இசைக் குழுன்னு. அதுல கதிரோடு பாடுறதும் அமுதாதான். அவங்க ரெண்டு பேரும் ஜோடியா 'மைக்' பிடிச்சு, மேடையில வந்து நின்னாங்கன்னா... சனம் அம்புட்டும் வச்ச கண்ணு வாங்காது."

ஒரு சில நேரங்களில் அமுதாவுக்கேகூட ஆத்திரம் பீறிடும்.

பின்னே என்ன... கல்லூரி படிப்பை முடித்ததிலிருந்து அவள், அக்கா வீட்டோடுதான் இருக்கிறாள்.

வசந்தா, தன் பெற்றோரிடம் சொல்லிவிட்டாள்.

"நீங்க இப்ப இருக்கிற நிலையில அமுதாவுக்கு நல்ல மாப்பிள்ளை பார்த்து, கரை சேர்க்கிறதெல்லாம் கனவுலகூட முடியாத காரியம். அவளாகப் பார்த்து, எவன்கூடவாவது ஓடிப்போனாத்தான் உண்டு. அதுக்கான சாமர்த்தியமும் நம்ம குடும்பத்துல யாருக்கும் கிடையாது.

பேசாம அவளை என்கூட அனுப்பி வையுங்க... புத்தியுள்ள பொண்ணா இருந்தா, என் மச்சினனை வளைச்சுப் போடட்டும்... எனக்கே ஓரகத்தியா வரட்டும்... என்ன அப்படிப் பார்க்கிறீங்க? சல்லடை போட்டு சலிச்சாலும் இப்படி மாப்பிள்ளை கிடைக்காது.



என் விதி பெட்ரோல் பங்க் மானேஜரை கட்டிக்க வேண்டியதாப்போச்சு. இவன் அப்படியில்லே, இரண்டு பட்டம் பெற்றவன், நல்ல சம்பளம். போதாக் குறைக்கு இசைக் குழு வேறு வச்சிருக்கான்."

"........."

"நிசத்தைச் சொல்லப் போனா— அவனோட வருமானத்துலதான் குடும்பத்தை நடத்தமுடியுது. உங்க மாப்பிள்ளை கொண்டு வர்ற சம்பளம் மளிகைக் கடைக்குக் கூடப் பத்தாது."

"........."

"எவளோ ஒருத்தி இந்த வீட்டுக்கு வந்து, குடும்பம் ரெண்டா உடையுறதைவிட, தங்கச்சியே வந்தா, ஒண்ணுக்குள் ஒண்ணு— அட, இன்னிக்கு சண்டை போட்டுட்டாலும், நாளைக்கு நாங்க சேர்ந்துப்போமில்லே?"

அன்றைக்கு வசந்தா சொன்னதும், அதற்கு அவள் அப்பா பதில் கேட்டதும் மறக்கவில்லை, அமுதாவுக்கு.

"கேட்க நல்லாத்தான் இருக்கு வசந்தா. ஆனா, உன் மச்சினனுக்கும் இவளுக்கும் வயசு வித்தியாசம் ரொம்ப இருக்கே?"

"என்ன... அவன் எட்டு வயசுப் பெரியவன். உங்க நிலையில இதைவிடவும் சின்னப் பையனா, கைநிறைய சம்பாதிக்கிறவனாகக் கொண்டுவர முடியுமா? எவனாவது ரெண்டாந்தாரம், மூணாந்தாரம்ன்னு கேட்டு வந்தா, தள்ளிவிட்டுடுவீங்க."

மகளின் பதில் சவுக்கடி மாதிரி விழ, பெற்றவர் தலைகுனிந்து


ராணி முத்து

## சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

**வெளிநாடுகள்**

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 825 |
| ஆறு மாதம் | ரூ. 475 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை-600 007.

உட்கார்ந்துவிட்டார்.

ஒருவிதத்தில் பார்க்கப்போனால், வசந்தா சொல்வதும் நியாயம்தான்.

பெரியவருக்கு நாலு பெண்பிள்ளை. வசந்தா மூன்றாவது. அமுதா கடைக்குட்டி. மூத்தவள் திலகாவை ஒரு மளிகைக் கடைக்காரருக்கு இரண்டாம்தாரமாகத்தான் கட்டிக் கொடுத்திருக்கிறார், மனிதர். இரண்டாமவள் சங்கரியைக் கொடுத்த இடம் சரியில்லை. தினமும் அழுத கண்ணும், சிந்திய மூக்குமாய் பிறந்த வீட்டுக்கு வந்து நிற்கிறாள்.

பிறந்த வீடும் அப்படியொன்றும் 'கிளுகிளு'வெனக் கொழிக்கவில்லை. ஒருவேளை சோற்றை சாப்பிட்டால், அடுத்த வேளைக்கு கரைத்துத்தான் குடிக்க வேண்டும்.

வசந்தாவின் அதிருஷ்டம். வாய்த்த கணவன் சண்முகத்துக்கு இழுபறியான சம்பளம் என்றாலும், கொஞ்சம் வசதியான குடும்பம். அவள் இந்த வீட்டுக்கு மருமகளாக வந்தபோது, மாமனார் சிவமூர்த்தி மட்டும் உயிரோடு இருந்தார். கொஞ்சம் நிலபுலன்.

சொந்த வீடு இல்லாவிட்டாலும், மாமியாரின் நகைகள், கல்லு கல்லாக— வரப்போகும் இரண்டு மருமகளுக்காகவும் காத்துக்கிடந்தன.

'தலைமை ஆசிரியர் சிவமூர்த்தி வீட்டு மருமக' —ஊருக்குள் இந்த மரியாதை போதாதா?

ஒரு பள்ளிக்கூடத்தையே தன் மேற்பார்வையில் வைத்திருந்த, கண்டிப்புக்குப் பேர்போன அந்த தலைமை ஆசிரியர், வீட்டில் எதைச் செய்வதாக இருந்தாலும், கடைசிவரை மருமகளைக் கேட்டுத்தான் செய்தார்.

அவரைச் சொல்லிக் குற்றமில்லை. அவர் வளர்ந்தவிதம் அப்படி!

சிறுவயதில் அம்மா சொன்னது வேதவாக்கு. பிறகு, மனைவி வைத்ததே சட்டம். அவள், இவரது நெற்றியைத் தொட்டுப் பார்த்து, 'அடடா... காய்ச்சல் போல இருக்கே?' என்றால், 'அப்படியா?' என்று கேட்கிற அளவுக்கு



பெண்டாட்டி தாசன்.

இப்போது கணேசன் மட்டும் என்ன... அப்பாவைப் போலத்தான்.

ஆனாலும் சிவமூர்த்திக்கு, மனைவி இறந்தபின், மருமகள் வசந்தா வந்ததும், 'அப்பாடா' என்று இருக்க— கொத்துச் சாவியை அவள் கையில் கொடுத்துவிட்டு, அவள் தரும் தயிர் சோறும் குடையுமாக, பள்ளிக்கும் வீட்டுக்கும் நடந்து நடந்தே, போய் சேர்ந்தும்விட்டார்.

கதிருக்கு அப்பா இறந்தபோது வயது இருபத்திமூன்று.

இன்றைக்குக்கூட ஏதாவது பேச்சு வந்தால்... வசந்தா, வேண்டுமென்றே அவனைக் குத்திக் காட்டுவாள்:

"ம்... மாமாவுக்கு என்ன... சாகிற வயசா? நல்லாத்தானே இருந்தாரு. வசந்தா, வசந்தான்னு சின்னக் குழந்தை மாதிரி என் காலைச் சுத்திச் சுத்தி வருவாரு... அன்னிக்கு மட்டும் கதிர் அப்படியொரு காரியத்தைச் செய்யாம இருந்திருந்தா... பாவம்... போட்டதைத் தின்னுட்டு, பேரப்பிள்ளைங்கக்கூட விளையாடிட்டு... ம்... அவருக்கு கொடுத்து வச்சது அவ்வளவுதான்."

அவள் இப்படிப் பேசும்போது கதிர், முகம் சுருங்கி, அப்படியே குறுகிப்போய்விடுவான்.

அமுதாவே இதை நேரில் பார்த்திருக்கிறாள்.

அக்காவின் சாமர்த்தியமும், சாதுரியமும் அவளுக்கு ஆச்சரியத்தை ஊட்டுகிற அதேநேரத்தில், கொஞ்சம்கூட மனிதாபிமானமே இல்லாமல், இப்படிப் பேசுவது எரிச்சலையும் உண்டுபண்ணும்.

எத்தனையோ தடவை இதற்காக சண்டை போட்டிருக்கிறாள், அவள்.

"நீ செய்யுறது கொஞ்சம்கூட நல்லாயில்லே, அக்கா. ஏதோ நடந்தது நடந்துபோச்சுன்னு விடாம, வாய்ப்பு கிடைக்கிறப்ப எல்லாம் சொல்லிக் காட்டிட்டா இருக்கிறது? உனக்கு நாகரிகமே தெரியலே!"

"ஆமாம்டீயம்மா... நான் வெறும் எட்டாம் வகுப்பு-

என் அறிவும், நாகரிகமும் அவ்வளவுதான். நீதான் மெத்தப் படிச்சவளாச்சே... இங்கே நீ வந்து இத்தனை நாளாச்சே... அவனை உன் வழிக்குக் கொண்டுவர ஏதாச்சும் முயற்சி செஞ்சியா?"

"ச்சீ... நீ பேசறதே எனக்குப் பிடிக்கலே... யாரையும் நான் வழிக்குக் கொண்டுவரணும்ன்னு எனக்கு ஒண்ணும் தலையெழுத்தில்லை. அந்தாளு மனசு ஏற்கனவே சிக்கிய இடத்தில் இருந்து இன்னும் மீளலே... நீதான் அதையும் கெடுத்தே. இப்ப, எனக்கும் ஏதோ நல்லது செய்யுறதா நினைச்சிட்டு..."

"உன் வாழ்க்கையையும் கெடுக்கிறேன், இல்லையா? எனக்கு இதுவும் வேணும்; இன்னமும் வேணும். எதைச் செஞ்சாலும் இப்படி கழுநீர் தொட்டியில் கையை விட்டக் கதையாகவே போகும். நான் வாங்கிட்டு வந்த வரம் அப்படி."

வசந்தா பேசத் தொடங்கினால், முற்றுப்புள்ளி என ஒன்று இருப்பதையே மறந்துவிடுவாள்.

அதுமட்டுமில்லை!

அழுது, ஊரைக் கூட்டி, ரணகளப்படுத்திவிடுவாள். அப்புறம், கணசேன் வந்து, மைத்துனியைக் கடிந்து கொள்வான்.

"அமுதா... அக்கா பாவம். உன் நல்லதுக்காகத்தானே இத்தனையும் செய்யுறா! அவளைப் போய் இப்படிப் பேசிட்டியே? பாரு... பச்சை தண்ணி பல்லுல படாமக் குப்புற விழுந்து கிடக்கா. ஏற்கனவே பூஞ்சை உடம்புக்காரி. போய் மன்னிப்பு கேட்டு, சாப்பிட அழைச்சிட்டு வா."

அவன் கவலை அவனுக்கு! காரணம்— இப்படியே வசந்தாவின் கோபம் நீடித்தால்— இராத்திரி சிவராத்திரிதான்.

எத்தனை நாள்... எத்தனை முறை... இந்தத் திருமண விசயமாய் அக்காவுக்கும் தங்கைக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு, கடைசியில் வேறு வழியின்றி அமுதாவே போய் கெஞ்சி இருக்கிறாள்?

"வாக்கா... சாப்பிடலாம். பாவம், அத்தான் வேறு



உனக்காக சாப்பிடாமக் காத்துட்டிருக்காரு."

"என்னை அத்தனைக் கேவலமாய்ப் பேசிட்டியே... உனக்காக நான் என்னவெல்லாம் செய்யுறேன்னு தெரியுமா? கடைசியில எனக்கு இந்தப் பக்கமும் கெட்ட பேரு... உன்கிட்டேயும் அசிங்கப்பட வேண்டியிருக்கு."

"அய்யோ அக்கா... இனிமே நான் பேசலே... வா."

"உண்மையைச் சொல்லு... கதிர் மேல உனக்கு ஆசையில்லே?"

"........."

கடைசியாக இப்படியொரு கொக்கியை வசந்தா போடும் போது அமுதா ஆடிப்போவாள்.

அது என்னவோ... அவன் பெயரைச் சொன்னாலே— சொல்லக் கேட்டாலே ஐம்புலன்களும் ஒருமித்துவிடுகிறது... மயிர்கால்கள் சிலிர்த்துக்கொள்கின்றன...

'ஐயோ பாவம்...'

இப்படியொரு பரிவும், பாசமும் ஏன்... எதற்காக?

இத்தனைக்கும் இவன், தன்னைத் திரும்பிக்கூட பார்ப்பதில்லை என்பது அவளுக்குத் தெரியாதா?

அவ்வளவு ஏன்... இவள் நிற்கும் இடத்தில் நிற்கமாட்டான்.

ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும், 'என்னை நெருங்காதே' என்கிற சிவப்பு விளக்கு எரியும். அப்பொழுதெல்லாம்தான் அமுதாவுக்கு, அக்கா மீது எரிச்சல் மண்டும்.

'அவன்தான் வேறு எவளையோ நினைச்சிட்டு உருகுறானில்லே? பேசாம அந்தப் பொண்ணையே கட்டி வைக்காம, என்னை அழைச்சிட்டு வந்து ஏன் மாட்டி விட்டே?"

கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோது, அக்காவின் மைத்துனன், மெல்லிசை நிகழ்ச்சிகள் நடத்துகிறான் என்பதை, பெருமையாகத் தன் சிநேகிதிகளிடம் சொல்லியிருக்கிறாள், அமுதா.

அப்பொழுதெல்லாம், தானும் அவனோடு சேர்ந்து

ஒரே மேடையில் பாடுவோம் என அவள் கனவிலும் நினைக்கவில்லை.

அதுவும் வசந்தாவின் ஏற்பாடுதான்.

"ஏதோ எங்க அப்பா அவளை கல்லூரியில் படிக்க வச்சதே அதிகம், கதிர். ரெண்டு, மூணு பட்டம் வாங்கினவங்கக்கூட வேலை கிடைக்காம சிங்கியடிக்கிற காலத்துல இவளுக்கு எவன் வேலை தரப்போறான்... பேசாம, உன் இசைக்குழுவில் சேர்த்துக்க.

வெளியில இருந்து வர்றப் பொண்ணுங்க வராம இருந்து, கடைசி நேரத்தில் கழுத்தை அறுக்கிற மாதிரியெல்லாம் இவ செய்யமாட்டா. என் தங்கச்சியைப் பற்றி நானே பெருமை சொல்லக்கூடாது... நம்ம வீட்டுலேயே ஒருத்தியா இருக்க தகுதி உள்ளவ... கூப்பிட்ட குரலுக்கு வந்து நிற்பா."

"அண்ணி... கூப்பிட்ட குரலுக்கு வந்து நின்னா மட்டும் போதாது. பாடணும்... குரல் நல்லா இருக்கணும்... நாலு பேருக்கு நடுவுல கூச்சமில்லாமப் பாடணும்... சும்மா பொழுது போக்குக்காக மேடையேற முடியாது. பேச்சும், மூச்சும் அந்த ஞாபகமாகவே இருக்கணும். பாவம் அவ... எதுக்காக அவளை சிரமப்படுத்துறீங்க?"

"சிரமமா... அவளுக்கு நல்ல குரல் இருக்கு. எங்க வீட்டு குளியலறைக்கு கதவு கிடையாது. அங்கே பாடிப் பாடிப் பழக்கம். சித்ரா, ஜானகி மாதிரியெல்லாம் பாடுவா."

"அக்கா..."

குரல் கேட்டு இந்தப் பக்கம் திரும்பினால், அமுதா. அவள் எத்தனைத் தடுத்தும் அக்காள் கேட்கவில்லையே!

"இதோ பாரு கதிர்... எத்தனையோ ஏழைங்களுக்கு வாய்ப்பு தர்றே... அதுமாதிரி நினைச்சுக்க. அம்பதோ, நூறோ இவ பாடி சம்பாதிச்சா, எங்களைப் பெத்த மகராசர்களுக்குத் தருவேன். நாலையும் பொண்ணா பெத்துப்போட்ட கிழங்கள்... வயசான காலத்துல ஏதோ ஒரு வாய் சோத்துக்குக் கஷ்டப்படாம... உம்... அதெல்லாம் உனக்கெதுக்கு? நான் சொல்லுறதைச் சொல்லிட்டேன். அப்புறம் உன் விருப்பம்."



காரியம் ஆகவேண்டுமென்றால் அக்கா எந்த அளவுக்கு இறங்குவாள் என்பதை கண்கூடாகப் பார்த்திருக்கிறாள், அமுதா.

நாலைந்து ஆண்டாக அபி இசைக் குழுவில் தட்டுத் தடுமாறிப் பாடிக்கொண்டிருக்கிறாள் என்றாலும், கதிர் ஒரு புதிர்தான்– அவளைப் பொறுத்தவரையில்.

கீழ் வீட்டு முற்றத்தை வெறித்துக்கொண்டிருப்பவனைப் பார்த்துப் பெருமூச்செறிந்தவள், அவன் யாரையோ அழைப்பது கேட்டுத் திரும்பினாள்.

## 2

அந்தச் சிறுமி, மாமரத்தடியில் உட்கார்ந்திருந்தாள். உற்றுப் பார்த்தால் முகத்தின் வாடலும், விழிகளின் ஈரமும் தெரியும்.

மாமரத்தை ஒட்டிய திண்ணையில் அமர்ந்து தன் ஒன்றரை வயது குழந்தைக்கு பருப்பு சோறைப் பிசைந்து ஊட்டிக் கொண்டிருந்தாள், அருந்ததி.

வாய், சிறுமியை வசைபாடிக்கொண்டிருந்தது.

"செக்கு உலக்கை... எத்தனை தரம் சொல்லுறது... மார்க்கெட்டுக்கு போயிட்டு வந்து, சோறு போடுற வரைக்கும் சும்மா இருன்னு சொன்னேனே? அதுக்குள்ளே போய் சோத்துப் பானையைக் கிண்டணுமா? காலையில காப்பி குடிச்சேயில்லே? மணி என்ன இப்ப... பகல் ரெண்டுதானே ஆவுது? வயித்துக்குள் என்ன வச்சிருக்கே... ஆத்தாளை முழுங்கியும் பசி அடங்கலையாக்கும்?"

பாப்பு– அதுதான் அந்தச் சிறுமி. எதற்குமே அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

அவளுக்குத் தெரியும்; அந்த வீட்டில் தன் பக்கம் பேச ஆள் இல்லை என்பது.

'பேசாமல் இந்த அப்பா, மதுராந்தகத்துக்காவது தன்னை அனுப்பி வைக்கலாம்...'

இப்படித்தான் நினைத்தாள், குழந்தை.

இது என்ன வறட்டுப் பிடிவாதமோ?

தாயில்லாப் பெண்ணை, தன்னுடன் வைத்துக்கொள்ளவும் முடியவில்லை. தாய்வழிப் பாட்டி ஒருத்தி எப்போதாவது ஒரு சீப்பு பூவன்பழமும், ஏழெட்டு படி அரிசியுமாய் வந்து போகிறாளே... அவளிடம் ஒப்படைக்கவும் மனமில்லை.

பாப்பு...

இவளுடையப் பெயர் என்ன என்று யாராவது இவளைக் கேட்டாலும், 'பாப்பு' என்றுதான் சொல்வாள்.

இன்றும் இவளது தகப்பன் சுந்தரமோ, சித்தி அருந்ததியோ இவளுக்கென்று ஒரு பெயரை வைக்கவில்லை.

பள்ளிக்கூடத்துக்குப் போவதே, மதிய உணவு கிடைக்கும் என்பதற்காகத்தான்.

சுந்தரம் ஒன்றும் அன்றாடங்காய்ச்சி இல்லை. இதோ, இந்த மாமரத்தோடு கூடிய மாடி வீடு அவனுடையதுதான். தவிர, வாசல் பக்கம் ஒரு மெக்கானிக் கடை வைத்திருக்கிறான். வாடகைக்கு பத்து, பதினைந்து ஆட்டோ ஓடுகிறது. தவிர, வட்டிக்குப் பணம்விட்டும் சம்பாதிக்கிறான்.

'வீட்டில் எந்தக் குறையும் இல்லை; பாப்புவைத் தவிர.

என்ன செய்வது... மூத்தாள் குழந்தையை இளையாளுக்குப் பிடிக்காமல் போவது வழக்கமான ஒன்றுதானே!

ஆனால், அருந்ததிக்கு அதைவிடவும் ஆத்திரமூட்டக் கூடிய விசயம்: 'செத்துப்போன மூத்தாள், ஏதாவது குளம், குட்டையைத் தேடிப்போய் விழுந்து செத்திருக்கக்கூடாதா? அட, இப்படி வீட்டையே போர்த்திக்கொண்டு வளர்ந்திருக்கிற இந்த மாமரத்தின் கிளைகளில் ஒன்றில் தொங்கியிருக்கக் கூடாதா?'

'போயும் போயும் வீட்டுக்குள், மாடியில வக்கணையாகத்



தான் தொங்கணுமா?'

'இவளுக்கென்ன, போய்ச்சேர்ந்துட்டா... மாடியை குடித்தனக்காரங்களுக்கு விடவும் முடியாம, பூட்டி வைக்கவும் மனமில்லாம இப்படி ஆயுசுக்கும் அவதிப்பட வச்சிட்டாளே.'

இந்த ஆத்திரமெல்லாம் கணவன், சுந்தரத்தைப் பார்க்கும் போது பெருகும்.

"யோவ், மெத்தை வூடு இருக்கு, இருக்குன்னு சொன்னியே... அந்த மெத்தை வீட்டுலேதான் நாண்டுகிட்டு செத்தா என் மூத்த சம்சாரம்ன்னு நீ சொன்னியாய்யா?"

"........."

"உன் கடையையும், ஆட்டோக்களையும் தூக்கி உடைப்பிலே போடு. அதெல்லாம் நிரந்தரமான வருமானமா? வீடு இருக்கு... மாசா மாசம் வாடகையே ஆறாயிரம், ஏழாயிரம் வரும்ன்னு தரகர் சொன்னதால்தானே நான் உனக்குக் கழுத்தை நீட்டினேன்... உம்மூத்தப் பெண்டாட்டிக்கு சாக வேறு எடமா கிடைக்கலே?"

"........."

"போதாக்குறைக்கு ஆந்தைக்குஞ்சு மாதிரி மூத்தவ கொடுத்திட்டுப்போயிருக்கிற சொத்து வேறு. அதான், அதோடப் பாட்டி, மாசம் பொறந்தா புழுத்த அரிசியையும், புளிச்சப் பழத்தையும் தூக்கிட்டு வந்து, மாப்பிள்ளையையும், பேத்தியையும் சீராட்டிட்டுப் போறாளே... அவகிட்டயே சனியனைத் தூக்கிக் கொடுக்கவேண்டியதுதானே?"

அதென்னவோ, அருந்ததி காலால் இட்ட வேலையைத் தலையால் செய்து முடிக்கிற சுந்தரம், மகளை மட்டும் அவள் சொல்வது போல மாமியாரிடம் தள்ளிவிடாமல் தன் கூடவே வைத்திருந்தான்.

அதற்காக பாப்புவிடம் அவனுக்கு அன்போ, பாசமோ கிடையாது. வீடு, மெக்கானிக் கடை, ஆட்டோக்கள் மாதிரி பாப்புவும் இவனது அடையாளச் சின்னங்களில் ஒன்று.

எப்போதாவது அளவுக்கு அதிகமாக அருந்ததி கத்தும்

போது மட்டும் அடங்கிய குரலில் கூறுவான்–

"அவளைக் இத்தனைக் கத்துறதைவிட, மார்க்கெட்டுக்கு போறதுக்கு முந்தி, கொஞ்சம் சோத்தைப் போட்டுட்டு போயிருக்கலாம் இல்லையா அருந்ததி? எப்படியும் பழைய சோறுதான் போடப்போறே... அதை எப்பப் போட்டாத்தான் என்ன?"

"சொல்லுவியே... ஏன் சொல்லமாட்டே? காலையில மார்க்கெட்டுக்கு நானே போகணும். உனக்கு இட்லியோ இடியாப்பமோ வக்கணையா செஞ்சு வைக்கணும். அதுக்குள் உன் சின்னப் பையன் எழுந்து குரல் கொடுப்பான். அவனுக்குப் பாலைக் கரைச்சுக் கொடுக்கணும்... 'கிடக்கிறதெல்லாம் கிடக்கடும்; கிழவியைத் தூக்கி பந்தல்லே வையி'ங்கிற கதையா– இவளை கவனிச்சாகணுமா நான்? ஏன், நீதான் இருக்கியே... உன் அருமை மகளுக்கு சோத்தைப் பிசைஞ்சு வாயில ஊட்ட வேண்டியதுதானே?"

"உஷ்... அருந்ததி. இப்பத்தான் மாடியில புதுசா குடிவந்திருக்காங்க. பேய், பிசாசுக்குப் பயப்படுறாங்களோ, இல்லையோ... உன்னோடக் கத்தலைக் கேட்டு பயந்துட்டுப் போறாங்க... இவங்களாவது நிலைச்சு நிற்கட்டும்ன்னு நான் வேண்டாத தெய்வமில்லை."

இந்த ஒரு வார்த்தைகள்தான் அருந்ததியின் வாயைக் கட்டிப்போடச் செய்தது.

பணம்... எத்தனை அவசியமானது?

பத்து மாச முன்பணம், ஏழாயிரம் ரூபாய் வாடகை என்று அமர்க்களமாய் வாங்கி, இரும்பு பீரோவில் அடுக்கி இருக்க லாமே அவள்.

ஐயாயிரம் ரூபாய் வாடகைக்கு, கடல் மாதிரி வீடு இருக்கிறது என்று வாய் பிளந்து வந்தவர்கள் எல்லாரும் அறுபது நாளுக்கு மேல் தாக்குப்பிடிக்க முடியாமல் ஓடிவிட்டார்களே...

"ஏன் சார், இந்த மாதிரி வீடுன்னு சொல்லவே இல்லையே?"



"அட, அதெல்லாம் ஒண்ணுமே இல்லீங்க. நீங்க வர்றதுக்கு முந்தி, நானே அங்கேதானே படுத்திருந்தேன்?"

"அதுசரி... செத்துப்போனது உங்க சம்சாரம். அதனால உங்களுக்குப் பழக்கமான பேயாக இருக்கலாம். மேலும், கணவனை ஒண்ணும் செய்யவேண்டாம்ன்னு இருந்திருக்கும். செய்தியைக் கேட்டதுல இருந்து, எங்களுக்கு ஒண்ணுமே ஓடலீங்க. நாங்க வேறு வீடு பார்த்துட்டோம். அட்வான்சை திருப்பித் தந்துடுறீங்களா?"

"அவ இங்கே சாகலே சார். சுருக்கு மட்டும்தான் இங்கே போட்டுகிட்டா. ஆஸ்பத்திரியிலதான் உசிரு போச்சு."

சுந்தரம், வந்தவர்களிடமெல்லாம் கரடியாய்க் கத்தியது தான் மிச்சம்.

அவன் மனைவி அபிராமி, அவள்தான் பாப்புவைப் பெற்ற மகராசி– ஒருமுறைதான் தற்கொலை செய்துகொண்டாள். ஆனால், இவனோ மனதுக்குள் தினமும் செத்துக்கொண்டிருக் கிறான்.

இன்றைக்கு, 'மெத்தை வீட்டைப் பார்த்துத்தான் கழுத்தை நீட்டினேனாக்கும்' என்று புலம்பும் அருந்ததிக்குக்கூடத் தெரியும்– இந்த வீடும், வாசலும் மூத்தவளின் பிறந்த வீட்டுச் சீர் என்பது.

இத்தனை பெரிய வீட்டையும், ஐந்தாறு ஆட்டோக்களை யும், ஐம்பது பவுன் நகைகளையும் மகளுக்குச் சீராய் கொடுத்த கிழவிதான்– இப்போது அருந்ததியின் வாயில் விழுந்து புறட்டப்பட்டுக்கொண்டிருககிறாள்.

கிழவியும் எத்தனையோ முறை, தன் மருமகனிடம் கேட்டு விட்டாள்:

"உங்களுக்கு எதுக்கு சிரமம் மாப்பிள்ளே... பாப்புவை என்கிட்ட விட்டுடுங்க... நான் பார்த்து வளர்க்கிறேன். அவளைக் கண்ணாரப் பார்த்துட்டு இருந்தாலாவது என் வயிறு எரிச்சல் தணியும்."

"அதெல்லாம் வேணாம் அத்தை. இங்கே அவளுக்கு என்ன

குறைச்சல்? அருந்ததிக்கு அவளை விட்டுட்டு அரை நிமிசம் இருக்கமுடியாது. எல்லார்கிட்டேயும் பாப்புவை தன் மூத்த பொண்ணுன்னுதான் சொல்லிக்கிறா."

"அருந்ததியைப் பற்றி எனக்குத் தெரியாதா? என் மக இருந்தப்ப, அவ மனசை நோகடிச்ச பாவத்துக்கு பேத்தியை வளர்த்தாலாவது நிம்மதி கிடைக்கும். அவளை ரொம்பவும் கொடுமைபடுத்திட்டேன் மாப்பிள்ளே... பெத்த தகப்பனும், அண்ணன்களும்தான் புரியாம வீம்புக்கு ஏதேதோ செஞ்சாங்கன்னா பெத்தவ நான்... மகளோட மனசைப் புரிஞ்சுக்காம..."

"இதோ பாருங்க... அதையெல்லாம் இங்கே வந்து சொல்லாதீங்க. உங்க மக, அவ கல்யாணத்துக்கு முன்னால் எப்படி இருந்தாளோ... நீங்க எல்லாரும் எதுக்காக அவளைத் துன்புறுத்தினீங்களோ எனக்குத் தெரியாது. என்கிட்ட வந்தப்ப, அவளை நான் நல்லாத்தான் வச்சிருந்தேன். அப்படியும், என் மேலப் பழியைச் சுமத்திட்டுப் போயிட்டா... நானே, அவ நினைப்புல இருந்து விடுபட படாதப் பாடுபட்டுட்டிருக்கேன்."

"........."

"ஏதோ வந்தீங்களா... உங்க பேத்தியைப் பார்த்தீங்களா... போயிட்டே இருங்க. பெண்டாட்டி செத்துப்போன பிறகும், மாமியாருக்கு மரியாதை கொடுக்கிறேனே... அதுக்காக திருப்திபட்டுக்குங்க."

சுந்தரம் நறுக்குத்தெறித்தாற்போலப் பேசுவான். கிழவி பாவம்... இரண்டு நாள் பேத்தியின் கன்னத்தைத் தடவி, உச்சி முகர்ந்து மகிழ்ந்துவிட்டுப் போய்ச்சேருவாள்.

அவள் போய் பல நாளுக்கு அருந்ததி விடாமல் சொல்லிக் கொண்டிருப்பாள்:

"பேத்தி, பேத்தின்னு உருகுதே இந்தக் கிழவி... நாக்குக்கு சுவையா ஒரு முறுக்கு, அதிரசம்ன்னு செஞ்சுக்கொண்டு வருதா? எப்பவும் அரிசியும், வாழப்பழமும்தான். அமாவாசை



யில் அய்யருக்குக் கொடுக்கிறாப்பல..."

"சும்மா இரு. அவ கொடுத்துத்தான் இங்கே ஆகணுமா? இந்த வீடு, பணம், பவிசு எல்லாமே, அந்தக் கிழவி தன் மகளுக்காகக் கொடுத்ததுதானே?"

"என்ன நீங்க... கொடுத்தா, கொடுத்தாள்ன்னு அதையே சொல்லிட்டிருக்கீங்க? சும்மாவா கொடுத்தா? குழந்தைக்கு மிட்டாயைக் காட்டி ஏமாத்துறாப்பல இதையெல்லாம் காட்டி, ஏற்கனவே ஒருத்தனோடு ஓடிப்போய், மூணு மாசம் குடித்தனம் நடத்தின பொண்ணைத்தானே உன் தலையில கட்டிவச்சா... நீ ஒரு லூசு... சரிதான்னு தாலி கட்டி..."

அருந்ததி வேண்டுமென்றே, சுந்தரத்தைச் சீண்டுவாள்.

அவளுக்குள் ஆயிரம் ஏமாற்றங்கள். அதையெல்லாம் முழுக்க முழுக்க வாய்திறந்து சொல்ல முடியாவிட்டாலும், எரிச்சலை இப்படியெல்லாம் தீர்த்துக்கொள்வாள்.

"வெள்ளையும் சொள்ளையுமா உடுத்தினா மட்டும் ஆம்பிளைன்னு சொல்லிட முடியுமா? அதை, அவன் பெண்டாட்டியில்லே சொல்லணும்?

"என் புருஷனுக்கு சட்டைத் துணி வாங்கித் தச்சுப் பழக்கமில்லே. ரெடிமேடுதான் ஒத்துவரும். வீட்டுலகூடப் பாருங்க... ஒரு கல்லு– இவர் சொந்தப் பணத்துல வாங்கிக் கட்டினது இல்லே... ரெடிமேடு வீடு... ரெடிமேடு மாமரம்... ரெடிமேடு பெண்டாட்டி... ரெடிமேடு குழந்தை... இல்லீங்க?

"மூத்தாளாவது எவனோடோ போய் வாழ்க்கையை ஒரு மாதிரி தெரிஞ்சிட்டு வந்தா. 'அதுவே போதும்'ன்னு போய்ச் சேர்ந்தா. என்னை மாதிரி– வெள்ளந்தியா வாழ்க்கைப்பட்டு, சாகவும் முடியாம, வாழவும்முடியாம... அட எஞ்சாமீ..."

இவள் குரலை உயர்த்தத் தொடங்கினாலே கடைக்கு ஓடிவிடுவான், சுந்தரம்.

பாப்பு பாடுதான் திண்டாட்டம். பள்ளிக்கூட நாளிலாவது பரவாயில்லை. பொழுதும் போய்விடும்; வயிற்றுக்கும் கிடைக்கும். விடுமுறை நாளில்தான் தெருவுக்கும்,

மாமரத்துக்குமாய் அல்லாடுவாள்.

சுந்தரத்தின் கடையில் எப்போதும் வானொலி அலறிக் கொண்டே இருக்கும்.

கடைப் பையன்களுக்கு பாட்டு இருந்தால்தான் வேலை நடக்கும். சுந்தரமும் இதையெல்லாம் பொருட்படுத்த மாட்டான். இன்னும் சொல்லப்போனால், வீட்டுக்குள் அருந்ததியின் வசைப்பாட்டைக் கேட்பதைவிட, சினிமா பாட்டு கேட்பது எத்தனையோ நல்லது என நினைப்பவன், அவன்.

ஒரு ஓரமாய் அமர்ந்து பாப்புவும் இந்தப் பாட்டுக்களை ரசிப்பதோ, யாருமில்லாதபோது மாமரத்தடியில் விளையாடுவதோ, இரைந்து பாடுவதோ சுந்தரத்தின் பார்வையில் பட்டதில்லை. மகளின் குரலில் தொனிக்கும் அற்புதமான இனிமையைக் கேட்டதுமில்லை.

இதற்கெல்லாம் அவனுக்கு ஏது நேரம்?

எப்பொழுதாவது நேரம் கிடைக்கும்போது, செத்துப்போன அபிராமியைப் பற்றி நினைத்துப் பார்ப்பான்.

'பாவி... எத்தனை சொன்னேன்... என்னால் உனக்கு ஒரு பிரச்சினையும் வராது. கவுரவமா வாழுறதை விட்டுட்டு, எவனையோ நினைச்சு அழுது புலம்பாதேன்னு எத்தனை சொன்னேன்... கேட்கலையே?"

இன்றைக்கு நிலைகுலைந்து, தள்ளாடியபடி வந்து போகிறாளே அபிராமியின் தாய்... அவள்கூட, இதே வீட்டின் கூடத்தில் உட்கார்ந்து, மகளுக்குப் படித்துப் படித்துச் சொன்னாள்.

'இதோ பாரு... கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தாலும் ஒருத்தன் தொட்ட பொண்ணை, இன்னொருத்தன் ஏறெடுத்துக்கூடப் பார்க்கமாட்டான். உன்னோட கெட்ட நேரத்துலேயும் ஒரு நல்ல நேரம்... தங்கமான மனுசன் உனக்குப புருசனா வந்திருக்கான். பார்த்து நடந்துக்க தாயீ... இனிமே இதுதான் உன் வீடு. பொறந்த



வீட்டுக்கு நீ வர்றதா இருந்தா– மாப்பிள்ளையோடுதான் வரணும்.'

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, கடைசியில் பாப்புவையும் பெற்றெடுத்துவிட்டு, ஒன்றரை ஆண்டு போல, பித்து பிடித்தாற்போல இருந்துவிட்டு, ஒரு நாள் போய்ச் சேர்ந்தாள்.

அப்பொழுதுகூட பதறிக்கொண்டு ஓடிவந்து, வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அழுதது மாமியார் கிழவி தான்.

சுந்தரத்தின் மாமனாரும், மைத்துனர்களும் வந்தார்கள். 'மளமள'வெனக் காரியத்தைப் பார்த்தார்கள். போய்க் கொண்டே இருந்தார்கள்.

திருமணமான ஒன்றரை ஆண்டுக்குள் இந்த அசம்பாவிதம் நேர்ந்ததால், போலீஸ் வழக்கு ஆகிவிடாதபடி மைத்துனர்கள் பார்த்துக்கொண்டார்களே, அதுவே பெரிய விசயம்.

கடைசி மைத்துனன் மட்டும் காரியம் முடிந்து, திரும்பும்முன் ஒரு வார்த்தை கூறினான்:

"மாமா, நடந்தது நடந்துபோச்சு. இதுக்காக வருத்தப்பட்டு இடிஞ்சுபோய் உட்கார்ந்துட வேண்டாம். 'சட்டுபுட்டு'ன்னு நல்ல பொண்ணாகப் பார்த்து, தாலி கட்டுங்க."

"அதெல்லாம் ஒண்ணும் வேணாம்."

சுந்தரம் சுரத்தே இல்லாமல் இழுக்க, அவன் 'பட்'டெனச் சொன்னான்:

"வேணாமா? அப்ப இந்தக் குழந்தையை யார் பார்த்துப் பாங்க? மாமா, எங்களுக்கெல்லாம் பெண்டாட்டி, பிள்ளை குட்டிங்க இருக்கு. ஏதோ, ஒரே தங்கச்சியை ஆசையா... செல்லமா வளர்த்துட்டோம். அவ மட்டும், எங்க பேச்சைக் கேட்டுட்டு, இருக்கிறபடி இருந்திருந்தா– ஒரு டாக்டர் மாப்பிள்ளைக்கோ, என்ஜினீயர் மாப்பிள்ளைக்கோ அவளைக கட்டிக்கொடுத்திருப்போம். ஆனா, அவ அவசரப்பட்டுட்டா. அவளுக்கு எல்லாமே அவசரம்தான்."

"ஒரு வயசே ஆன குழந்தையை வச்சிட்டு நான் மாத்திரம் எப்படி?" சுந்தரம் தயங்க, அவன் சிடுசிடுத்தான்.

"அதுக்குத்தான் அவசரமா ஒருத்தியைப் பார்த்து தாலி கட்டுங்கங்கிறேன். இந்த வீட்டை சீதனமாகக் கொடுத்தோம். கடை வச்சுக் கொடுத்தோம். பத்து ஆட்டோ வாங்கிக் கொடுத்தோம். அம்பது பவுன் நகை, கட்டில், பீரோ அத்தனையையும் வாங்கிக் கொடுத்தோம். எதுக்காக?

எங்க வீட்டுப் பொண்ணு நல்லா இருக்கணுமேங்கிறதுக்காக. இப்ப அவ போயிட்டா. கொடுத்ததை எல்லாம் திருப்பிக் கேட்கிறோமா நாங்க? கேட்கலே! அதுமாதிரிதான் இதுவும். குழந்தையையும் கேட்கமாட்டோம். நீங்களே வச்சுக்குங்க. பெருந்தன்மைதான் முக்கியம். என்ன, நான் சொல்றது புரிஞ்சுதா?"

நன்றாக– விளக்கமாகவே புரிந்துவிட்டது, சுந்தரத்துக்கு.

குழந்தையை வளர்ப்பதற்குக் கூலியாகத்தான் இந்த வீடும், ஆட்டோக்களும்.

இதை உதறினால்– சகலத்தையும் இழக்கவேண்டி இருக்கும்.

ஆதலால், குழந்தையை வளர்ப்பதற்காகவாவது ஒருத்தி வேண்டும். அதுமட்டுமல்ல; என்னமோ, கணவன் சரியில்லாததால்தான் பெண்டாட்டி போய்ச் சேர்ந்தாள் என்கிற அபவாதம் வேறு வந்து சேர்ந்திருக்கிறதே...

அதை மாற்றுவதற்காகவும் இன்னொருத்தி தேவையாக இருந்தது.

அங்கே இங்கே தேடி, கடைசியில் அருந்ததி வந்து சேர்ந்தாள்.

அவளும் வரும்போது நெஞ்சு நிறைந்த கனவுகளோடுதான் வந்தாள். சில காலம், கணவனையும், மூத்தாளின் குழந்தையையும் தலைமேல் தூக்கி வைத்துக்கொள்ளாதக் குறையாகத்தான் கொண்டாடினாள்.

ஆனால், போகப் போக கணவனின் குறை தெரியத்



தொடங்கியது.

சுந்தரம், இரவு வெகுநேரம் கழித்துத்தான் கடையை மூடிவிட்டு வீடு திரும்புவான்.

மனைவி கண் அயர்ந்திருந்தால் எழுப்பாமல், தானே சோறை அள்ளிப் போட்டுத் தின்றுவிட்டு, மாமரத்தடியில் கயிற்றுக் கட்டிலைப் போட்டுப் படுப்பான். அப்படியே வெட்கத்தைவிட்டு, அருந்ததி கணவனை எழுப்பினாலும் தூங்குவது போல நடிப்பான். வேறு வழியில்லை என்றால், 'மூத்தாள் போன துக்கமே ஆறவில்லை' என்று கண்ணைத் தேய்த்துக்கொள்வான்.

வெகு நாட்களுக்குப் பிறகுதான் சுந்தரத்தின் இயலாமை அருந்ததிக்குப் புரிந்தது.

அப்போதுதான் இன்னொன்றும் புரிந்தது– அது, பாப்புவுக்கு சுந்தரம் தகப்பனாக இருக்கமுடியாது என்பது.

## 3

அமுதாவுக்கு வியப்பாக இருந்தது. கீழ் வீட்டு வாசலில் விளையாடிக்கொண்டிருந்த சிறுமியைத்தான் மேலே வரச் சொல்லி அழைத்தான், கதிர்.

மருண்ட மான் போல விழிகளை உருட்டினாள், அந்தச் சிறுமி.

"உன்னைத்தான்... இங்கே வாயேன்."

மாடி சன்னல் வழியே கையசைத்து கதிர் கூப்பிட, சிறுமி 'என்னையா?' என்பது போல்த் தயங்க...

அதற்குள் உள்ளிருந்து அருந்ததியின் குரல்...

"ஏய்... துடைப்பக்கட்டை... வந்துகொட்டிட்டுப்போயேன். அங்கே நின்னுட்டு மாடியை என்னா பார்வை?""

அவ்வளவுதான். சிட்டாய் பறந்துவிட்டாள், அவள்.

அமுதா, கதிரிடம் மிருதுவாய்க் கேட்டாள்: "அந்தப் பொண்ணோடு பேசணுமா?"

"உம்... இல்லே... ஆமா... என்னையே ஏன் சுத்திச் சுத்தி வர்றே? வேறு வேலை இருந்தாப் பாரேன்."

அமுதாவின் விழிகளில் நீர் திரண்டது.

இன்று, நேற்றில்லை... இத்தனை ஆண்டுகளில் அன்பாய், அரவணைப்பாய் ஒரு சொல் சொல்லியிருக்கிறானா, இவன்?

'நெருங்காதே... தள்ளிப் போ... வேறு வேலை இல்லையா உனக்கு? பொம்பிளையா லட்சணமா இரு' இவைகளைத் தவிர– சாதாரணமாய், ஒரே வீட்டில் ஒன்றாக வசிக்கும் காரணத்துக்காகக்கூட அனுசரணையாகப் பேசியதில்லை.

வசந்தாவின் வற்புறுத்தல் தாங்காமல்தான் அமுதா அவனது இசைக்குழுவில் பாடுகிறாள்.

மற்றபடி சங்கீதத்தில் பெரிய ஈடுபாடு எதுவுமில்லை. கச்சேரியிலும் திட்டுவான்.

"என்ன பாடுறே நீ... சுருதின்னு ஒண்ணு இருக்கு; அதோடு பாடணும்கிற நினைப்பெல்லாம் கிடையாது. ஞானசூனியம்... என் தலையெழுத்து. உன்னையெல்லாம் கட்டிட்டு மாரடிக்கணும்னு..."

நாலு பேர் நடுவில் 'சுருக்'கென இவன் பேசும்போதெல்லாம் அவள் நொறுங்கிப்போவாள்.

அதனால், இப்பொழுதெல்லாம் அதிக சிரமமில்லாதப் பாட்டுகளையும், கூட்டாளியோடு குரல் இசைப்பதற்கும் மட்டுமே முன்வருகிறாள்.

இதற்காகக்கூட வசந்தா, தங்கையை ஒரு பிடி பிடித்தாள்.

"அவனா ஒதுக்கினானா... இல்லே, நீயே ஒதுங்கிட்டியா?"

"நானேதான். என்னைப் போய் ஜானகி மாதிரி, சித்ரா மாதிரி பாடச் சொன்னா எப்படிக்கா? குருடனை ராஜபார்வை பார்க்கச் சொல்ற மாதிரி. நம்ம குடும்பத்துல யாராவது வாயைத் திறந்து ஒரு தேவாரம், திருவாசகமாவது





சொல்லி இருக்காங்களா?"

"அதுக்காக? அவன் உனக்கு வேணும்னா நீ கச்சேரியும் செய்யணும்; நாட்டியமாடச் சொன்னாலும் ஆடணும்."

"அவன் வேணும்னு நான் சொன்னேனா? அக்கா, எனக்கு இது கொஞ்சம்கூடப் பிடிக்கலே... நீ சொல்றேங்கிறதுக் காகத்தான் போயிட்டு வர்றேன். நல்லாப் பாடுற பொண்ணுங்க எவ்வளவோ பேரு, அவரோட குழுவுல இருக்காங்க. அண்ணியோட தங்கச்சிங்கிறதுக்காக காக்கா, குயில் ஆகிடாது."

"அப்ப?"

"போறேன். அவர் விரட்டினாலும் போறேன். முன்னே எல்லாம் வெளி ஆளுங்க ஒரு சொல் சொன்னாலும் பொறுக்காது, எனக்கு. இப்ப அந்த ரோஷம், மானம் எல்லாத்தையும் உன்கிட்ட கழட்டிக் கொடுத்திட்டுப் போறேன். ஏதோ சுமாராகப் பாடத் தெரிஞ்ச ஒண்ணு, ரெண்டு பாட்டு இருக்கு.

இல்லேன்னா கும்பலோடு சேர்ந்து லலலா—லிலிலீயின்னு பாடிட்டு வர்றேன். இதுக்கு அவர் தர்ற காசு ரொம்ப அதிகம்தான். என்ன செய்யுறது... பிச்சைக்காரி மாதிரி கை நீட்டிட்டு வர்றேன்."

வசந்தாவுக்கு மட்டும் தங்கையின் உணர்வுகள் புரியாதா என்ன?

இத்தனை சொல்கிறாளே... தாலி கட்டிய கணவன் ஒருநாள்— ஒரேயொரு நாள்— 'என்ன, சோறு வேகலையா?' என்று கேட்டுவிட்டால், என்னமாய் குதிப்பாள் இந்த வசந்தா?

அவளுக்கே தெரியும்; தன்னைவிட அமுதா பொறுமையின் சிகரம் என்பது.

கதிரின் பார்வை, தன் தங்கையின் பக்கம் திரும்பவே திரும்பாது என்ற எண்ணம் ஏற்பட்டபோது, அவளேகூட ஓரிரு முறை அமுதாவிடம் தழுதழுக்கச் சொல்லி இருக்கிறாள்:

"இந்தா அமுதா... அது கல்லு. அதுங்கிட்டேயிருந்து



பிரியத்தையோ, பாசத்தையோ எதிர்பார்க்க முடியாதுன்னு தோணுது. நீ, பெத்தவங்களோடு இருந்திருந்தாலும், பத்துக்கு அஞ்சு பழுதில்லாம ஏதோ ஒரு மாப்பிள்ளை கிடைச்சிருப்பான். என்னோடப் பேராசை உன் வாழ்க்கையை யும் கெடுத்துடுச்சு. இப்பவும் ஒண்ணு மோசமாயிடலை. அப்பாகிட்டே சொல்லி..."

"புலம்பாதேக்கா. மனசு என்ன, இஷ்டத்துக்கு எழுதி எழுதி அழிக்கிற சிலேட்டுப் பலகையா? நீ கூப்பிட்டுதான் வந்தேன். ஒண்ணும் சுகப்படலைதான். ஆனா, அதுக்காக வேறு ஒண்ணைத் தேடிக்கவும் இனிமே முடியாது. இப்ப என்ன... மாமாவோட தம்பி இருக்காப்பல— உன்னோட, தங்கச்சி நானும் இதே வீட்டுல இருந்துட்டுப்போறேன்."

அழுத்தமாக அவள் சொன்னபோது வசந்தாவே அசந்து போய்விட்டாள்.

அமுதாவுக்கு ஒழுங்காகப் பாடத்தான் வரவில்லையே தவிர, கதிரின் கச்சேரிகளுக்கான நாட்களை குறிப்பதும், அது கல்யாணமோ, பூப்புனிதநீராட்டோ, மாரியம்மன் கோவில் திருவிழாவோ— அதற்கேற்றபடி பாடல்களைத் தேர்ந்தெடுப்பதிலிருந்து, முன்பணம் வாங்குவது வரை...

குழுவினரை குட்டி பேருந்து வைத்து அழைத்துப் போவதிலிருந்து, சாப்பிட வைத்து, நடுவில் சண்டை— சச்சரவு எதுவும் வராதபடி கவனித்து, விழா முடிந்து அவரவர் பணத்தைப் பிரித்துக் கொடுத்து, வீடு வந்துசேரும் வரையில் சகலப் பொறுப்புகளையும் தானே வலிய இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யத் தொடங்கினாள்.

முதலில் அதை ஆட்சேபித்தாலும் போகப்போக— கதிரும் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டான்.

காரணம்— இந்தக் குழுவை தொடங்கிய புதிதில் அவனுக்கு இருந்த ஊக்கமும், உற்சாகமும் போகப் போகக் குறைந்து விட்டதுதான்.

யாருக்காக ஓடி ஓடி கச்சேரி செய்ய வேண்டும்?

மனசே பாலைவனமாய் வறண்டு கிடக்கும் நேரத்தில், எப்படி காதல் பாட்டுகளை துள்ளிக் குதித்துப் பாடமுடியும்?

அவனது குழுவில் தொடக்க காலம் முதல் இருந்துவரும் டிரம்ஸ் பிரேமும், கிதார் முருகேசும்கூடச் சொன்னார்கள்:

"கதிரு... கல்யாணக் கச்சேரின்னா நம்மளிதுதான் 'கும்'முனு இருக்கும். இப்ப சுருதி இறங்கிப்போச்சு... நேத்து வந்தவனெல்லாம் மேலே போயிட்டான்."

"போகட்டும் அண்ணே... எல்லாரும் பிழைக்க வேண்டியது தானே. மேலும், கச்சேரி செஞ்சுதான் பிழைக்கணும்ன்னு எனக்கு அவசியமில்லே பாருங்க. என் வேலையைப் பார்த்தாலே போதும். மாசம் இருபதாயிரம் வருது."

"அது உனக்கு. ஆனா எங்களைக் கொஞ்சம் நினைச்சுப் பாரு... உன்கூடவே இருந்துட்டோம். இன்னிக்கு நாம வளர்த்துவிட்ட பசங்க எல்லாம் முன்னுக்கு வந்துட்டானுங்க. இத்தனை வயசுக்கு மேல, சின்னப் பசங்ககிட்டப் போய் வாய்ப்பு கேட்டு கை கட்டி நிற்க கூச்சமா இருக்கு. உனக்கு வாழ்க்கையில காதல் மட்டும்தாம்பா கையைவிட்டுப் போச்சு. ஆனா, எங்களுக்கு வாழ்க்கையே போகுதுப்பா."

"என்ன செய்யச் சொல்றீங்கண்ணே... நான் வேணுமானா ஒதுங்கிக்கிறேன். குழுவை நீங்க நடத்துங்க."

"ஏம்பா, எங்களை என்ன நெஞ்சுல ஈவு இரக்கமில்லாத அரக்கங்கன்னு நினைச்சிட்டியா... ஏதோ, எங்க கஷ்டத்தைச் சொன்னா, யோசிச்சு ஒரு முடிவு சொல்லுவேன்னு பார்த்தா, இதுவா பேச்சு?"

இந்த நேரத்தில்தான் அமுதா கை கொடுத்தாள்.

"முருகேசண்ணே... பாட்டுதான் தகராறு எனக்கு. மத்தபடி, குழுவை நடத்த என்னென்ன செய்யணுமோ, அத்தனையையும் செய்வேன். நீங்க கவலையை விடுங்க."

"நீயா?"

"என்ன அப்படி கேட்டுட்டீங்க? நானும் படிச்சு, 'டிகிரி' வாங்கினவள்தான். வெறுமே மேடையேறி தொண்டை



தண்ணி வத்தப் பாடிட்டு இறங்கினாப்பல ஆச்சா? நாம எடுத்துகிட்ட துறையில என்னிக்கும் நாமதான் முதல்லே நின்னு காட்டணும். புதுசா ஆயிரம் பேர் வரட்டும். நாம தடுக்கப்போறதில்லே. அதேநேரம்– எத்தனைப்பேர் வந்தாலும் நமக்குப் பின்னாடிதான் இருக்கணும். அதுக்கு நான் தயார்."

கதிர், அவளைப் பார்த்து அலட்சியமாய் புருவம் உயர்த்தினான்.

ஆனால், ஆறே மாதத்தில் தான் சொன்னதை அவள் செயல்படுத்திவிட்டாள்.

"கச்சேரிக்கு தேதி கேட்டு வந்தீங்களா... அதோ, மஞ்சள் சேலை கட்டிட்டு, காதுல லோலாக்கு மாட்டிட்டு நிக்குதே... அந்தப் பொண்ணுகிட்டப் போய்ப் பேசுங்க."

"தொகை எல்லாம் நமக்குத் தெரியாதுங்க. அவங்க சொல்றதுதான். சொன்னா 'அட்ஜஸ்ட்' பண்ணிப்பாங்க. பார்க்கத்தான் விறைப்பும், முறைப்புமா இருப்பாங்க. நீங்க உங்க வசதியைச் சொன்னா, அதுக்கேத்தபடி ஆளுங்களைக் கூட்டி, குறைச்சு... அவங்க பார்த்துப்பாங்க."

அமுதாவுக்கு அந்த இசைக்குழுவில் பிரதான இடம் கிடைத்தது இப்படித்தான்.

ஆனால், கதிரின் மனதில்தான் இன்னும் அவளுக்கு ஓரிடம், ஏன் சிறு இடம்கூட கிடைக்கவில்லை.

வீட்டில் அவனுக்கே தெரியாமல், அவனது தேவைகளை அறிந்து, காதும் காதும் வைத்தாற்போலச் செய்து முடிப்பாள்.

"ஏன்க்கா... இட்லிக்கு தேங்காய்ச் சட்னி அரைக்கலியா?"

"ஆமா போ, அதான் மதிய சாப்பாட்டுக்கும் சேர்த்து முள்ளங்கி சாம்பார் வச்சிருக்கேனே... அதுலேயே ரெண்டு கரண்டி இட்லிக்கு எடுத்துகிட்டா ஒண்ணும் குறைஞ்ச போயிடாது. அதெல்லாம் உன் மாமா தவடுக்கமாட்டாரு. போட்டதைச் சாப்பிட்டுட்டுப் போயிட்டே இருப்பாரு."

"அதுசரி... அவருக்குத்தான் தலையெழுத்து. நீ போட்ட தைத் தின்னுட்டுப் போயிட்டே இருக்கணும்னு. அவ

3

தம்பிக்கு என்ன... காலையில டிபனுக்கு சாம்பாரை ஊத்திட்டு, மதியமும் இதே சாம்பாரை கொடுத்தேன்னா நல்லாவா இருக்கும்... மூஞ்சியில அடிச்சாப்பல இருக்காது... சட்னி அரைச்சா என்னவாம்? என்கிட்ட சொல்லி இருந்தாக்கூட நானே அரைச்சிருப்பேனே?"

"அடியம்மா... ஓரகத்தி ஆகாமலேயே என்னை இந்த ஆட்டு ஆட்டுறியே... உன்னைவிட கதிரை எனக்கு நல்லாத் தெரியும். அவனுக்கு இதுதான் வேணும்; அதுதான் வேணும்ன்னு எதுவுமே இல்லே. போட்டதைத் தின்னுட்டுப்போற தங்கமானப் பையன்."

"ஏன் சொல்லமாட்டே... நீ கவனிச்ச லட்சணம் அவ்வளவுதான். வெறும் சாம்பாரைத் தொட்டுட்டு மூணு இட்லி சாப்பிடுற உன் கொழுந்தன்– சட்னியும் இருந்தா அஞ்சு இட்லி அழுத்தமா அமுக்குவாரு."

இப்படி சகலத்திலும் கதிரின் பின்னாலேயே இருந்தாள், அமுதா. அலுவலக நேரத்தில் மட்டும்தான் அவளது தலையீடு இல்லையே தவிர, மற்ற எல்லாவற்றிலும்...

இதனாலேயே வசந்தா, பிறந்த வீட்டுக்கு தன் குழந்தைகளுடன் விடுமுறைக்குக் கிளம்பினாலும், இவள் பிடிவாதமாய் இங்கேயே உட்கார்ந்தாள்.

"அடி வாடீ... எப்பப் பாரு அடுப்பங்கரையும், குழந்தைங்களுமா அலுத்து சலித்துப்போகுது. நேத்திக்கே அப்பா போன் பண்ணினாரு. நம்ம சங்கரியும் திலகாவும்கூட லீவுக்கு வர்றாங்களாம். அம்மா, கறிக்கோழி செஞ்சு, நாம எல்லாருமா சாப்பிட்டு எத்தனை நாளாச்சு?

பாழும் வீட்டுல ஒரு முட்டை அவிக்க விடுகிறாரா, உங்க மாமா. தாலியை கையில எடுக்கிறதுக்கு முந்தியே கேட்காம விட்டுட்டேன் கவுச்சி சாப்பிடுவீங்களான்னு. அது என்னமோ ஜீவ இம்சைன்னு இவரோட அப்பா ஒதுக்கிட்டாராம். இவருக்கு என்னாச்சு... இவர்பாட்டுக்கு சாப்பிடலாமில்லே? நான்கூடத்தான் ஜீவன். என்னை இப்படி இம்சை செய்கிறாரே... இப்ப நீ வர்றியா, இல்லையா?"



அமுதா அழகாய் சிரிப்பாள்.

"நீ போக்கா. எனக்கு இங்கே கொஞ்சம் வேலை இருக்கு. இந்த சனி, ஞாயிறு கச்சேரி இல்லைன்னாலும், கணக்கு வழக்கைப் பார்க்கணும். முருகேசண்ணே மகளுக்கு பூ வச்சிட்டுப்போயிருக்காங்க. கல்யாணத்துக்கு அம்பதாயிரம் வேணுமாம். அதுக்கு என்ன ஏற்பாடு செய்யணும்ன்னு பார்க்கணும்."

"உம்... முருகேசன் பெண்ணுக்கு பூவச்சாச்சா... உனக்கு நினைவிருக்கா? பத்து வருடத்துக்கு முந்தி, கச்சேரியில மூக்கொழுக 'யப்பா...'ன்னு ராகம் பாடிட்டு நின்னுட்டிருக்கும். அதுக்கு பூ வச்சிட்டுப்போயிட்டாங்க. இதை நீ வேறு சொல்றே."

வசந்தாவை அடக்கி அனுப்புவதற்குள் அமுதா படாதபாடு பட்டுவிடுவாள்.

ஒரு காலத்தில் அவளுக்குள்ளும் இதுபோன்ற ஆசை எல்லாம் நிறைய இருந்தது.

காலம் கரையக் கரைய– 'பூவும் வேண்டாம்; காயும் வேண்டாம்; கைபிடித்தால் போதும்' என்று மனசுகிடந்து தவியாய்த் தவித்தது.

இப்பொழுதோ– கல்யாணக் கனவுகள் ஏதுமில்லை. வெறுமே அவனைப் பார்த்துக்கொண்டிருந்தாலே போதும் என்கிற நிலைக்கு வந்துவிட்டாள்.

இத்தனை ஆண்டுக்குப் பிறகு, பிரிந்துபோய் வேறு ஒருவனை மணந்து, அவனுக்கு சமைத்துப்போட்டு, அவனுக் காகப் படுக்கையை உதறிப் போடுவதாவது...

மனசு இடம்தருமா?

அதனால்தான் இவனையே சுற்றிச் சுற்றி வருகிறாள்.

அதனால்தான் இவனையே சுற்றிச் சுற்றி வருகிறாள்.

அக்காள் கணவன் சண்முகம்கூ

சில நேரங்களில் அவளுக்காக, தம்பியிடம் பரிந்து பேசுவான்.

"டேய்... வர்றதே தாமதம். ஒரு வாய் சாப்பிட்டுட

படுக்கவேண்டியதுதானே?"

"வேணாம்... எனக்குப் பசிக்கலே."

"அண்ணி இருந்தா உன்னைக் கிழிச்சு தோரணம் கட்டி இருப்பா."

"அண்ணி இங்கே இல்லேல்லே... ஆளைவிடு."

"அவ இல்லைன்னா என்னடா? அமுதா இருக்கா. உனக்காக சப்பாத்தி, குருமா செஞ்சி வச்சிட்டு..."

"அவளை யாரு இதையெல்லாம் செய்யச் சொன்னது? வேணாம்ன்னா விடவேண்டியதுதானே? சரியான ரோதனைப்பா உங்கக்கூட."

"நியாயம்தான். ஒருத்தி, தாலிகூட வேண்டாம்; காதல்கூட வேண்டாம்; அட, மூஞ்சியைப் பார்த்து ஒரு சிரிப்புகூட வேண்டாம்... சமைச்சு வச்சதை சாப்பிட்டுட்டுப்போனால் சரிங்கிறா பாரு... அவ ரோதனை பிடிச்சவதான்."

"........."

"என்னிக்கோ, எவகூடவோ மூணு மாசம் ஊர் ஊராச் சுத்தி, ஓட்டல் ஓட்டலா தங்கி, கும்மாளம் அடிச்சதையே நினைச்சிட்டு, நிகழ்காலத்தை எல்லாம் நீ நாசமாக்கிக்கிறே கதிர். உனக்கு எப்படிப் புரியவைக்கிறதுன்னு தெரியலை. கடற்கரையிலேயும், பூங்காவிலேயும், சினிமா தியேட்டரிலேயும் சந்திக்கிறப்ப காதலி அழகியாக– ஏன், உலகத்தைவிட அழகாகத்தான் தோணும். அதே பொம்பளையை சமையற்கட்டுல நிறுத்தி வச்சுப் பார்க்கணும்; பசிக்குதுன்னு வந்து நீ உட்காருகிறப்ப, சோறு கொண்டுவந்து போடுவா பாரு... அப்பப் பார்க்கணும். உனக்காக, உன் பிள்ளையைச் சுமந்து, வலியில் துடிக்கிறா பாரு... அப்ப பார்க்கணும் ராசா..."

"இப்ப என்ன, நான் சாப்பிடணும். அவ்வளவுதானே? தட்டு எடுத்து போடச்சொல்லு."

சண்முகம் பரிவுடன் மைத்தினியைப்பார்ப்பான். அவளோ, புன்சிரிப்பு மாறாமல், பரிமாறத் தயாராக நிற்பாள்.

கதிர் இல்லாத நேரங்களில்– அக்காவிடம் மட்டுமின்றி,



அக்கா கணவன் சண்முகத்திடமும் மல்லுக்கு நிற்பாள், அமுதா.

"அவருதான் அந்தப் பொண்ணு மேல இத்தனை ஆசை வச்சிருக்காரு இல்லே... பேசாம, அவளையே இவருக்குக் கட்டி வச்சிருக்கவேண்டியதுதானே?"

"அதெல்லாம் நடக்கிற காரியமில்லேம்மா... பொண்ணைப் பெத்தவங்க, இவன் கட்டின தாலியையே அவுத்தெறிஞ்சிட்டு அழைச்சிட்டுப் போயிட்டாங்க. நீ வேற..." –இது சண்முகம்.

"நல்லாச் சொல்லுவியே... நாம என்ன, மைசூர் மகாராசா பரம்பரையா? இல்லே, ஏராளமாத் தோப்பும் துரவும், நஞ்சையும் புஞ்சையுமாகச் சொத்துதான் இருக்கா? என்னமோ, இளவயசு... மேல் சாதி, கீழ் சாதி பார்க்கலே. தெலுங்கா, தமிழான்னு தெரிஞ்சுக்கலே! பெருமாள் சாமியா, அய்யனார் சாமியான்னு யோசிக்கலே... இழுத்துட்டுப்போய், தாலியைக் கட்டி, ஊர் ஊராச் சுத்தினாப்பல ஆயிடுச்சா? எங்கே சுத்தினாலும் ரங்கனைத்தான் கும்பிடணும்ன்னு அம்மா சொல்லுவாளே... மறந்துட்டியா?

அதுமாதிரி– எங்கெங்கேயோ சுத்திட்டு, பட்டணத்தைப் பார்க்கத் திரும்பி வந்தாங்க... சென்டிரல் ஸ்டேஷனிலேயே கோழியை அமுக்குகிற மாதிரி அமுக்கி அவளை இழுத்துட்டுப் போயிட்டாங்க, அவளோட சாதி சனங்க. இங்கே, இவங்க அப்பா, தன்னோட கவுரவம்– பேரு எல்லாத்தையும் காத்துலப் பறக்கவிட்ட மகனைப் பார்க்காமலேயே போய்ச் சேர்ந்தாரு."

"........."

"இவன்தான் ரோஷம், சொரணைகெட்டு அவங்க வீடு தேடி, போய்ப் போய் நின்னான். நாயை அடிச்சு விரட்டினாப்பல விரட்டினாங்க. கடைசியில அவங்க சாதியில ஒரு பையனைப் பார்த்து, கல்யாணமும் செஞ்சு வச்சிட்டாங்க. இவன் கட்டின தாலியை இவன் கையிலேயே கொடுத்து அனுப்பிட்டாங்க."

"........."

"நல்ல மாட்டுக்கு ஒரு சூடு. நல்ல மனுசனுக்கு ஒரு சொல்லு... பொம்பிளை, மறுகல்யாணம் செஞ்சிட்டு மஞ்சளும், பூவுமா வாழுறா. இவனுக்கு எங்கே போச்சு புத்தி? அவளுக்கு மேல வாழ்ந்து காட்ட வேண்டாமா? அவ காரில் போனா— இவன் விமானத்தில் பறக்க வேண்டாமா?

அவ ஒரு பிள்ளை பெத்தா, இவன், ரெட்டை ரெட்டையாகப் பெத்து, அவங்களை தலைகுனியச் செய்ய வேண்டாமா? அதுக்கெல்லாம் துப்பில்லே. இங்கே, உன்கிட்டத்தான் எகிறுவான்."

அக்கா, பிறந்த வீட்டுக்குப் போயிருந்தாலும், அவளது வார்த்தைகள் இங்குதான்— கூடம் முழுக்க இரைந்து கிடப்பது போல.

புன்னகைத்தபடி சன்னல் வழியே பார்க்கிறாள், அமுதா. அந்தச் சின்னப் பெண் இரைந்து பாடிக்கொண்டிருந்தாள்.

## 4

Tப்பொழுதுமே சுந்தரம், தனது 'மெக்கானிக்' கடையை விட்டு அடிக்கடி எழுந்து வீட்டுப் பக்கம் போகமாட்டான். மூத்தவள் இருந்தபோதும் சரி; இளையவள் வந்தபிறகும் சரி.

பதியம் இரண்டு மணியளவில் சாப்பிடப் போய்விட்டு உடனே திரும்பினால், பிறகு இரவு பத்து மணிக்குக் கடையைக் கட்டிவிட்டுத்தான் நகர்வான்.

நடுவில் காப்பியோ, தண்ணீரோ ஒரு சொம்பில் கடைக்கே வந்துவிடும்.

கடையில் வேலை செய்யும் பையன்களுக்குக்கூட இதுதான் பேச்சு.

"ஏன்டா, சாப்பிடப்போனா அரை மணி நேரம், ஒரு மணி நேரம் போலத் தூங்கிட்டு வரமாட்டானா ஒரு மனுசன்?"

"அங்கே அம்மணியைப் பார்க்க, வாரத்துல நாலு நாள்



மேடவாக்கம் மாமன் வர்றாரு இல்லே... அதான் நம்ம
அண்ணன் பக்குவமா நகர்ந்துடுறாரு."
"நானே கேட்கணும்ன்னு இருந்தேன். அது யாருடா
மேடவாக்கம் மாமா? அவருக்கு இங்கே என்னா வேலை?"
"அம்மணிக்கு அவரு தாய்மாமன்னு சொல்லக் கேள்வி.
இன்னொரு நேரம் ஒண்ணுவிட்ட அத்தை மவன்னு
சொன்னாங்க... பெரியப்பாவோட சுவீகாரப் பையன்னாங்க...
அதைவிடு. அண்ணன் இப்படி மெக்கானிக் கடையே கதின்னு
கிடந்தா— அம்மிணிக்குப் பொழுதுபோக வேணாமா?"
சுந்தரத்திடம் வேலை பார்க்கும் கபாலியைத் தவிர, மற்ற
இருவருமே இளைஞர்கள்தான். மீசைகூட அரும்பாதவர்கள்.
ஆனாலும் கபாலியுடன் சேர்ந்து, முதலாளியின் குடும்பத்தைப்
பற்றி கலாய்ப்பதென்றால் வயது பேதம் இருக்காது.
வேலைக்குப் புதியவன் என்றோ, பழகிய அனுபவசாலி என்றோ
அவர்களுக்குள் வித்தியாசம் கிடையாது.
சுந்தரம் சாப்பிடப்போய் திரும்புவதற்குள், அவனது
சரித்திரமே அலசப்படும்.
பண விசயத்தில் சுந்தரம் கெட்டி. தொழிலாளர்களுக்கு
மாதம் பிறந்து பத்து தேதி வரையில் சம்பளம் தரமாட்டான்.
பதினொரம்தேதி பணத்தை எண்ணும்போதே, திட்டத்
தொடங்கிவிடுவான்.
யாரும் விடுப்பு போடக்கூடாது. அப்படிப் போட்டால்
சம்பளப் பணத்தில் கத்திரி போட்டுவிடுவான்.
இவனது ஆட்டோக்களை வாடகைக்கு எடுக்கும்
ஆட்களும் தினமும் அதற்கானப் பணத்தை இரவு பத்து
மணிக்கு, எந்த ராஜா— எந்த பட்டணத்துக்குப் போனாலும்
கொண்டுவந்து சேர்த்துவிட வேண்டும்.
வட்டிக்குக்கடன் வாங்கியவர்கள்கூட, கடைக்கு வந்துதான்
வட்டி கட்டுவார்கள்.
எப்பொழுதாவது இவனில்லாத வேளையில் கடைக்கு
வரும் கடனாளிகள், கபாலியிடம் பொருமுவது உண்டு.
"ஏம்பா, இத்தனை சம்பாதிக்கிறாரே உங்க முதலாளி...

உத்தேசமா எத்தனை சின்ன வீடு வச்சிருப்பாரு?"

"நீ வேறு... இந்த ஒரு வீட்டுக்கே 'ஸ்பா ன்சர்' யாரோ!
நீ வந்த வேலையைப் பார்த்துகினு போயிட்டே இரு."

"அப்படீங்கிறே?"

"அப்படித்தான். அய்யா சம்பாதிப்பாரு. பெண்சாதிக்கு
நகை நகையா செஞ்சு போடுவாரு. அம்மனை அலங்கரிக்கிற
மாதிரி அலங்கரிச்சு, ஆட்டோவுல வச்சு, அவங்க அம்மா
வீட்டுக்கு அனுப்புவாரு. இல்லே, மாங்காடு, திருவேற்காடுன்னு
பதினைஞ்சு நாளைக்கு ஒரு தடவை அழைச்சிட்டுப்போய்
வருவாரு. மத்தபடி கடை உண்டு; காசு உண்டு."

"சம்சாரம் கடை பக்கம் வராதா?"

"வருமே... அவங்க மாமா வந்தாருன்னா, டீக்கடைக்கு
போய் பஜ்ஜி, பக்கோடா வாங்கிட்டுவர சொல்றதுக்காக
வரும். இல்லே, பாப்புவைப் பத்தி புகார் படிக்கிறதுக்காக
வருவாங்க."

கபாலி, வேண்டுமென்றே அருந்ததி மாதிரி நடந்தும்
காட்டுவான். அப்போது அங்கு 'கொல்'லெனச் சிரிப்பலை
பரவும்.

"அந்தப் பொண்ணு பாவம்லே."

"ரொம்பவும் பரிதாபப்பட்டேன்னா, பாப்புவை அந்தம்மா
உன்கூட அனுப்பிடும். வச்சு வளர்க்கிறியா?"

"அத்தனைக்கு மனசு எறிஞ்சு கிடக்குன்னா—அதோட ஆயா
ஒரு கிழம் வந்துட்டுப்போறதே... அதுகூட அனுப்பிட
வேண்டியதுதானே?"

"நல்லாச் சொன்னியே... அதை ஆயாவோடு அனுப்பிட்டா,
அண்ணனும் ஏதாவது பட்டறையில 'டிங்கரிங்' எடுக்க
வேண்டியதுதான். வீடு, வாசல், ஆட்டோ எல்லாம்
பாப்புவோட அம்மா கொண்டுவந்த சொத்தில்லே... பாப்புவே
போயிடுச்சுன்னா, இங்கே அருந்ததி அண்ணி சிங்கியடிக்க
வேண்டியதுதான்."

"கெக்...கெக்...கெக்..."

சிரிப்பும், பேச்சும், சுந்தரம் வரும்வரையில்தான். அவன்



அனைத்தும் அடங்கிவிடும்.
தலையைக் கண்டால், அனைத்தும் அடங்கிவிடும்.

உடனே கபாலி, தனக்குக் கீழ் வேலை செய்யும் பொடியன்
களை இப்படி விரட்டுவான்:

"எலேய்... என்னடா பராக்கு... பஞ்சர் ஒட்டி
முடிச்சாச்சா? டியூப்பை தண்ணியில அமுக்கிப் பார்த்தியா?
நான் வந்து பார்ப்பேன். காத்து நிக்கலைன்னா, படவா,
பின்னிப்புடுவேன்; பின்னி."

இதெல்லாம் சுந்தரத்துக்குத் தெரியாதா என்ன?
அத்தனையும் தெரியும். ஆனால், தெரிந்ததாகக் காட்டிக்
கொள்ளமாட்டான்.

பல நேரங்களில் இப்படியொரு ஊமை நாடகம் ஆடுவது
சலிப்பாகத்தான் இருக்கிறது.

ஆனாலும் வேடத்தைக் கலைக்கமுடியாத நிலை.

வீட்டுக்குப் போனால், அருந்ததி நடிக்கிறாள். அவளைப்
பார்க்க வரும் மாமன்காரன் ரத்தினமா, முத்துவா? அவன்
நடிக்கிறான். மாதம் ஒருமுறை பையும் வாழைப்பழமுமாய்
வந்து, வந்து, போகிறாளே... அவன் மாமியாரும், பாப்புவின்
பாட்டியுமானக் கிழவி... அவள் நடிக்கிறாள்.

இன்னும் பாப்புவுக்கும், ராசுக்குட்டிக்கும்தான் இந்த
நடிப்பு பழகவில்லை. வளர வளர அவர்களுக்கும் பழகிவிடும்.

**அ**வனுக்கு மட்டும் ஒரு மணிக்கே வீட்டுக்குப் போய்
சாப்பிட்டு, பாய் விரித்து படுத்து, ராசுக்குட்டியை தன்
மார்பின் மீது தவழவிட்டு, அருந்ததி மடித்துத் தரும் வெற்றிலை
யைச் சுவைக்க வேண்டும் என்கிற ஆசையில்லையா?

ஆசையிருந்து என்ன பண்ண... அதிருஷ்டம் வேண்டாமா?

இந்த சுகத்தை எல்லாம் அனுபவிப்பதற்காகவே
மேடவாக்கத்திலிருந்து வருகிறானே ஒருவன்... அவன்
கொடுத்து வைத்தவன்.

சுந்தரத்துக்குள் சில நேரம் துக்கம் பொங்கிவரும்.
ஆற்றாமையுடன் கடையில் அமர்ந்தபடியே வீட்டு வாசலில்
கிடக்கும் செருப்பைப் பார்த்துப் பல்லைக் கடிப்பான்.

'மனுசங்க போடுற செருப்பு மாதிரியா இருக்கு. ராட்சசி போடுறது. 'ஊரான் வீட்டு நெய்யே, என் பெண்டாட்டி கையே'ங்கிற மாதிரி– இவ கையால் தின்னு தின்னே கொழுத்துப்போயிருக்கான் சண்டாளன்.'

ஒரு நேரம் யோசித்துப் பார்த்தால், 'முதல் கல்யாணமே வீண் என்கிறபோது, இரண்டாம் கல்யாணம் என்ற விஷப் பரீட்சை எதற்காக செய்தோம்?' என்றுகூடத் தோன்றும் அவனுக்கு.

அபிராமியின் தாய்– அவள்தான் பாப்புவின் பாட்டி மாத்திரம், பேத்தியைப் பார்த்துக்கொள்வதற்காக இங்கேயே இருக்கச் சம்மதித்திருந்தால், பல விதங்களிலும் நிம்மதியாகப் போயிருக்கும்!

எங்கே... அபிராமியின் அப்பாவும், அண்ணன்களும்தான், அவளை இங்கே வரவிடாமல் தடுத்தார்களே...

“என்னம்மா நீ... பொண்ணு போனதோடு மாப்பிள்ளை உறவும் அத்துப்போச்சு... நீ கிளம்பு, சொல்றேன்.”

“அடேய், பச்சைப் புள்ளையை வச்சிட்டு அவர் என்ன செய்வாரு? இல்லே, குழந்தையையாவது நாம எடுத்துட்டுப் போய் வளர்க்கலாம். என்னங்க... நீங்களாவது இவனுங் களுக்குச் சொல்லுங்களேன்.”

கிழவி, கணவனைப் பிடித்து உலுக்கினாள். வயது எழுபதுக்கு மேலானாலும், கிழவருக்குப் பிடிவாதம் தளர வில்லை.

“உனக்கு என்ன பைத்தியமாப் பிடிச்சிருக்கு? ஒண்ணரை வயசுக் குழந்தையைப் பார்த்துக்கிற வயசா நமக்கு? எத்தனை நாளைக்கு முடியும்? மாப்பிள்ளைக்கு வயசு இருக்கு. நாம, நம்ம பொண்ணுக்காகக் கொடுத்திருக்கிற சீதனம் இருக்கு. நல்ல பொண்ணா ஒருத்தியைப் பார்த்து கட்டிக்கட்டும். குழந்தையைக் கவனிக்க ஆள் வேணும்கிறதுக்காகவாவது அவர் மறுகல்யாணத்துக்கு சம்மதிப்பாரு... அதைவிட்டுட்டு... பேசுறா பேச்சு. நீ புறப்படு.”

இப்படி வடம் கட்டி இழுத்துப்போய்விட்டார்கள்.



சுந்தரத்துக்கு அருந்ததியைத் தேடிப் பிடித்து, திருமணம் செய்து வைத்தது அவனுடைய அக்காள்தான். அதுவரையில் குழந்தை அந்த அக்காளிடமும், மெக்கானிக் கடையிலுமாய் மிதிபட்டது.

ஷாப்பிலும், மற்ற எடுபிடிகளும் டீத்தண்ணி குடிக்கும்போது, பாப்புவுக்கும் சிறிது கொடுப்பார்கள். பன்னும், பஜ்ஜியும், நாயர் கடை இட்லியும், வடையுமாய் யார் யார் எதைக் கொடுக்கிறார்களோ அதையெல்லாம் சாப்பிட்டு வளர்ந்தவன் தான் அவன்.

அருந்ததியின் மீதும் சுந்தரத்தால் தவறு சொல்ல முடிய வில்லை.

குறை அவனிடம் இருக்கும்போது யாரை நொந்து என்ன பயன்?

அவன், அப்பொழுதே தன் அக்காவிடம் சொன்னான்.

“அக்கா, அந்தப் பொண்ணு அபிராமிக்கு என்ன கஷ்டமோ, அதுபாட்டுக்கு மூலையில உட்கார்ந்து அழுதுகிட்டே இருந்து, போய்ச்சேர்ந்துட்டுது. இவளைப் பார்த்தா பயமா இருக்குக்கா.”

“என்னடா பயம்... அவ, அழுதாளோ– சிரிச்சாளோ, உன்கிட்ட படுத்து, குழந்தையைப் பெத்துக் கொடுத்தா இல்லையா? அந்தக் குழந்தையால்தானேடா! உனக்கு இத்தனை வாழ்வு வந்திருக்கு.”

“சும்மா அதையே சொல்லாதே. அந்தப் பொண்ணு சாதிவிட்டுச் சாதி காதலிச்சதாம். அதனால, பெத்தவங்க சம்மதிக்காம, நான் கிடைச்சதும் என் தலையிலக் கட்டி வச்சிட்டுப் போயிட்டாங்க. அதுக்கு பழைய காதலை மறக்க முடியலே.”

“மறந்தாளோ இல்லையோ... செப்புச் சிலை மாதிரி ஒரு குழந்தையைக் கொடுத்துட்டுப் போயிருக்கா இல்லே. அதுக்காகவாவது நீ வேறு கல்யாணம் கட்டித்தான் ஆகணும். போறவ போயிட்டா. அதுக்காக, இருக்கிறவங்க வெறுட் அரிசியாகத் தின்ன முடியுமா? உனக்கென்னடா ராசா!”

இந்த வார்த்தைகளில்தான் அவன் அப்படியே குன்றிப் போனான்.

அக்காக்காரி, பாப்புவை அவனுடைய குழந்தை என்று நம்பியிருக்கிறாள். அவளென்ன... எல்லாருமே அப்படித்தான் நம்பிக்கொண்டு இருக்கிறார்கள்.

அபிராமியின் தாய், தகப்பனுக்கு இந்த உண்மை தெரியுமோ தெரியாதோ?

ஒருவேளை தெரிந்துதான், அவசரமாய் மெய்யோ பொய்யோவென்றிருக்கும் நேரத்திலே அவளை தன் கழுத்தில் கட்டிவிட்டார்களோ?

பெண் பார்க்கப் போனபோது, இதே அக்காள் முன்னிலையில்தான் தேங்காயைப் போட்டு உடைப்பது போலப் பேசினார், அபிராமியின் தந்தை.

"ஒரே பொண்ணு. நல்ல எடத்துல மாப்பிள்ளை பார்த்து, ஊரே மெச்சும்படியாகக் கல்யாணம் செய்யணும்கிறது என் ஆசை. ஏன்... வெறின்னுகூடச் சொல்லலாம். என் மூணு பையன்களுக்கும் தங்கச்சி மேல உசிரு. அவளை உள்ளங் கையில வச்சு தாங்கினாங்க. ஆனா.. இவளுக்கு பொறுக்கலே. காலேசுல படிக்கிற பையன்கூட காதல், ஊதல்னு அலைய ஆரம்பிச்சா. அவன்கூட நாலு எடம் சுத்தியிருக்கா. நான் எதையும் மறைக்க விரும்பலே."

அதற்குள் அபிராமியின் பெரிய அண்ணன் குறுக்கிட்டுச் சொன்னான்:

"ஏம்பா பேச்சை வளர்க்குறீங்க? நறுக்காகச் சொல்லி முடியுங்க. இதோ பாருங்க சுந்தரம்... எங்க தங்கச்சி ஒண்ணும் பத்தரை மாத்துத் தங்கமில்லே. அப்படியே விட்டுட்டா, எங்கக் குடும்பம், பரம்பரை மானமெல்லாம் காத்துலப் பறக்கும். அதனால்தான் பொண்ணு பார்க்க உங்களை வரச் சொன்னோம்... இஷ்டமிருந்தா சொல்லுங்க. முடிச்சிடுறோம். பொண்ணுதான் மாத்து குறைச்சலே தவிர, சீரு, செனத்தி எதுவும் குறை இருக்காது. வேண்டியது வேண்டியபடி



செய்வோம்."

சுந்தரம் மென்று விழுங்கியபடியே அக்காவைப் பார்த்தான். அவளோ, கல்யாணத்தை முடிப்பதிலேயே கருத்தாக இருந்தாள்.

"அட என்னங்க நீங்க... இதைப்போய் பெரிசுபண்ணிட்டு. ஒரு ஆம்பிளையைப் பார்த்து, மனசுக்குள் வெட்கம் வர்றதுக் குள்ளேயே கல்யாணத்தைச் செஞ்ச எங்க காலமெல்லாம் மலையேறிடுச்சு. ஆம்பிளைக்குச் சமமாகப் படிக்க வைக் கிறோம். போற இடத்துல நாலு பேரைப் பார்க்கும்தான், பழகும்தான். இதையெல்லாம் பெரிசா எடுத்துக்கலாமா? அதுசரி, முகூர்த்தத்தை எப்ப வச்சுக்கலாம்?"

அழுதுச் சிவந்த அபிராமியின் முகத்தை மறுபடியும் பார்க்கிற துணிவில்லை, அவனுக்கு.

ஆனாலும் நெஞ்சில் ஓர் ஓரமாய் கொஞ்சம் நிம்மதி இருந்தது.

'பரவாயில்லே. வந்ததும் வராததுமா என்னைத் தொந்தரவு செய்யமாட்டா. பழையக் காதலை மறக்கிறது என்ன அத்தனை சுலபமா?'

ஆனால், அபிராமியின் தாய், மகளைக் கொண்டுவந்து, மருமகனிடம் ஒப்படைத்தபோது, தழுதழுத்தக் குரலில் சொன்னாள்:

"மாப்பிள்ளை... வானத்துல அமாவாசையும் வருது. பவுர்ணமியும் வருது. அதுபோல, அவ வாழ்க்கையிலேயும் ஒருத்தர் போய் ஒருத்தர் வந்திருக்கீங்க. அவளை நீங்கதான் சந்தோசமா வாழவைக்கணும். பழசை எல்லாம் மறந்துட்டு, உங்ககூட ஆனந்தமாகக் குடித்தனம் செஞ்சு, அடுத்த வருடமே என் கை கனக்க ஒரு பிள்ளையும் பெத்துத் தரணும்."

சுந்தரத்தால் அபிராமியைச் சிரிக்க வைக்க முடியவில்லை; ஆனால், அவனது மாமியார் விரும்பியபடி, ஒரு குழந்தையை மட்டும்– திருமணமாகி வந்த எட்டாம் மாதமே அபிராமி பெற்றுக் கொடுத்துவிட்டாள்.

எல்லாரும் குறை பிரசவம் என்றார்கள். ஆனால், மருத்துவர்,

அவனை அழைத்துச் சொல்லிவிட்டார்—

"அதெல்லாம் குறை பிரசவமே இல்லே மிஸ்டர் சுந்தரம். நல்ல முழு வளர்ச்சியோடுதான் பிறந்திருக்கு. கல்யாணம் எப்ப நடந்துச்சு?"

அவன் சொல்ல... மருத்துவர் புருவத்தை உயர்த்தினார். அபிராமி, அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொண்டாள்.

அவன் உடனே சொன்னான்: "கல்யாணம்தான் அந்தத் தேதியில நடந்துச்சு. மத்ததெல்லாம் அதுக்கு முந்தியே... நாங்க காதலிச்சுக் கல்யாணம் செஞ்சுகிட்டோம்."

மருத்துவரம்மாவின் முகத்தில் தெளிவு. "குட்... காதலிச்ச பொண்ணு கர்ப்பமானதும் விட்டுட்டு ஓடிடாம, துணிஞ்சு கல்யாணம் செஞ்சுட்டீங்களே... உங்களைப் பாராட்டுறேன்."

இப்பொழுது அவன் தலைகுனிந்து நின்றான். மருத்துவர் சென்றபிறகுகூட, அவன் இப்படித் தன்னைக் காப்பாற்றியதற்காக அபிராமி ஒரு வார்த்தை நன்றி சொல்லவில்லை.

அவனாகத்தான் கேட்டான்: "அபிராமி... இது யாருடைய குழந்தையோ... ஆனா, இனிமே என் குழந்தைதான். உன்னை வெளியில எங்கேயும் விட்டுக்கொடுக்கமாட்டேன். ஆமா, இது உங்க அம்மாவுக்குத் தெரியுமா?"

"எது?"

"குழந்தை... கல்யாணத்துக்கு முந்தியே..."

"தெரியாது. நான் சொல்லலே."

"நல்லது. நானும் சொல்லமாட்டேன். கவலைப்படாதே. நான், உன் பக்கத்துலேயே வரமாட்டேன்."

அவன் இப்படிச் சொன்னபோது, அவள் சிரித்தாள்.

"என்ன சிரிக்கிறே?"

"ஒண்ணுமில்லே. முதல்லே இந்தக் கல்யாணத்துக்கு நான் சம்மதிக்கலே. ஆனா, அப்புறம் உங்க அக்கா கணவர்தான் என்கிட்ட வந்து சொன்னார்..."

"என்ன சொன்னார்?"



பதறினான் அவன். அவளோ மென்மையாய் கூறினாள்:

"உங்களாலே எந்தத் தொந்தரவும் இருக்காதுன்னு."

அந்தக் கணத்தில் அப்படியே ஓடிப்போய் அக்காள் கணவரின் கழுத்தை முறித்துவிட்டு வந்தால் தேவலை போல அவன் பரபரத்துப்போனான்.

'கூட இருந்தே குழிபறிக்கிற நாயி... இவனை அழைச்சிட்டு நான் டாக்டர், டாக்டரா தேடிப்போனேனில்ல... அதுக்கு அவன் புத்தியைக் காட்டிட்டான். கேடுகெட்ட பய...'

மனசுக்குள்தான் அவனால் கறுவ முடிந்ததே தவிர, வேறெதுவும் புரட்ட முடியவில்லை.

அவன் எத்தனையோ பத்திரமாய், ஒரு புதையலை பாதுகாப்பதுபோலத்தான் அவளைப் பார்த்துக்கொண்டான்.

ஆனால், அவளால் இப்படி இரட்டை வாழ்க்கை வாழ முடியவில்லை. அடிக்கடி, பிள்ளையைத் தூக்கிக்கொண்டு பிறந்த வீட்டுக்கு ஓடிவிடுவாள். அவர்களோ, மறுநாளே இவனிடம் கொண்டுவந்துவிடுவார்கள்.

"மாப்பிள்ளை, என்ன நீங்க... இப்படி சுத்தக் கோழையா இருக்கீங்க. கட்டினவனை சோத்துக்கு அலையவிட்டுட்டு, பிறந்த வீட்டுக்கா போறேன்னு கேட்டு 'பளீர்'ன்னு ஒண்ணு கொடுங்க."

மைத்துனரில் ஒருவன், இவனுக்கே புத்தி சொன்னான்.

அடிக்கிறதாவது... முதலில் இவளை அவன் நுனி விரலால் கூடத் தொட்டதே இல்லையே...

அவளை மட்டுமல்ல... இதோ, இத்தனை அட்டூழியம் செய்துகொண்டிருக்கிறாளே... அவளைக்கூட கடிந்து ஒரு வார்த்தை சொன்னதில்லை, சுந்தரம்.

எல்லா ஆத்திரத்தையும் சேர்த்து வைத்து பாப்புவைத் தாக்குவான்.

"அய்யய்யோ... அடிக்காதீங்கப்பா... வலிக்குதுப்பா..."

பாப்புவின் குரல், மெக்கானிக் கடை வரை ஒலித்து, காப்பாற்ற கபாலியோ, அங்கு வேலை செய்யும் மற்ற

பையன்களோ ஓடிவருவார்கள்.

அருந்ததி, வீட்டு வாசற்படி நிலையிலேயே ஒயிலாகச் சாய்ந்து நின்று, பின்னலை இழுத்து மார்பில் தவழவிட்டபடி வேடிக்கை பார்ப்பாள்.

இவனை அதட்ட, கபாலிதான் சரி. "அட என்னாங்க... பச்சைப் புள்ளையைப் போட்டு அடிச்சிட்டு... அதுதான் நம்ம லட்சுமிங்கிறதை மறந்துடாதீங்க."

கடைசி வார்த்தையில்தான் அடங்குவான், சுந்தரம்.

## 5

"அட..." வியப்பில் விழிகளை மலர்த்தினான், கதிர். அமுதாவின் சேலைத் தலைப்போடு ஒட்டியபடி, மருண்ட மான் போல பாப்பு... அதுவும் கச்சேரியில்...

அவன் குனிந்து, பாப்புவின் கன்னக் கதுப்பைத் தட்டினான். அந்தப் பார்வையும், சற்றே நுனி தூக்கிய மூக்கும் அவனுள் இன்னதென்று சொல்லத் தெரியாத பரவசத்தைத் தோற்றுவித்தன.

"நான் மாடியில இருந்து உன்னை கூப்பிடுவேன். நீ ஒரே ஓட்டமா ஓடிடுவியே... ஏன்?"

அந்த சிறு பெண் உடனே பதிலளிக்கவில்லை. கொஞ்சம் நெளிந்து, ஒளிந்து, பிறகு மெல்லியக் குரலில் சொன்னாள்:

"சித்திக்குப் பிடிக்காது. நான் யார்கூடவும் பேசக் கூடாதுன்னு சொல்லி இருக்காங்க."

"இப்ப எப்படி வந்தே?"

அவன் கேட்க, அமுதாவின் பக்கம் திரும்பிப் பார்த்துவிட்டு, வெட்கத்துடன் சிரித்தாள், பாப்பு.

"அக்கா வந்து, சித்தியைக் கேட்டாங்களா... அதான் வந்தேன்."

கதிர், அமுதாவைப் பார்த்துப் புன்னகைத்தான். ஆம்...



முதல்முறையாக அவளிடம் சிநேக பாவனையுடன் அவன் சிரித்தது அப்போதுதான்.

அமுதா, தன் சிரிப்பை கைக்குட்டையில் ஒற்றிக் கொண்டாள்.

பாட்டு வராத அமுதாவுக்கு, கதிரின் அன்பு கிடைக்காத அமுதாவுக்கு, மற்றதெல்லாம் மிகச் சுலபமாக இருந்தது.

பாப்புவிடம் பேச கதிர் முயற்சிப்பதும், அந்த முயற்சிகள் தோல்வியடைவதும் அமுதா கண்களில் படாமல் இல்லை.

இவன் விரும்பி, எதைச் செய்யாமல் இருந்திருக்கிறாள் அவள்.

மேடையில் பாடுகிற பாடகிகளில்கூட சிலர், சொன்னபடி வராமல் முரண்டுபிடிப்பார்கள். இதைவிடவும், அடுத்த குழுவினர் ஐம்பது ரூபாய் அதிகமாகத் தருகிறார்கள் என்றால், சொல்லாமல் கொள்ளாமல் அங்கே போய்விடுகிற பாடகர்களும் உண்டு.

கல்யாணக் கச்சேரிக்குப் பாட வந்துட்டு, சக பாடகரிடம் சண்டை போட்டு, அழுது– அமர்க்களம் செய்து, கிடைத்த பேருந்தில் ஏறிப் போய்விடுகிற ரகங்களும் இருக்கிறார்கள்.

எத்தனையோ பார்த்திருக்கிறாள், அவள்? சிலரை அவளுக்கே பிடிக்காமல்போனாலும், இசைக்குழுவின் கவுரவத்துக்காக விட்டுப்பிடிப்பாள். அவர்கள் எத்தனை அலட்சியம் செய்தாலும் வெளியில் சொல்லமாட்டாள். யாரிடம் சொல்வாள்?

கதிரிடம்தானே சொல்ல வேண்டும்? அதைவிடவும் குட்டிச் சுவரில் முட்டிக்கொள்ளலாம்.

இப்படியே தன்னைப் பழக்கிக்கொண்டவளுக்கு– அடுத்தவரின் குணமறிந்து நடப்பது ஒன்றும் பெரிய காரியமாகத் தோன்றவில்லை.

கதிருடன் பாப்பு பேசிப் பழக வேண்டுமானால் அவளது சித்தி அருந்ததியின் அனுமதி வேண்டும்.

அருந்ததியின் அனுமதி வேண்டுமெனில், அவள் குழந்தை ராசுக்குட்டியின் அபிமானத்தைப் பெறவேண்டும்.

அமுதா அடுத்த கணமே இழே வந்து நின்றாள். அருந்தி
அப்போதுதான் தன் மேடவாக்கம் மாமாவை வழியனுப்பி
விட்டு, நெஞ்சு கொள்ளாத ஏக்கத்துடன் திரும்பி வந்து
கொண்டிருந்தாள். அவளது இடுப்பில் ராசுகுட்டி கால்களை
விறைத்து அழுதுகொண்டிருக்க, அவளுக்கு இருந்த எரிச்சலில்,
மகனுக்கும் நாலு வசவு விழுந்தது.

"ஏன்டா, ஏன்டா கொள்ளை போற மாதிரி கத்துறே?
உன்னை வச்சிட்டு, நாலு வார்த்தை பேசமுடியுதா? எப்பப்
பார்த்தாலும் அழுகை... மூதேவி..."

அமுதா, அவள் எதிர்பாராதவிதமாய், வலிய முன்வந்து,
குழந்தையைப் பிடுங்காதக் குறையாய் வாங்கிக்கொண்டாள்.

"ஏங்க... பச்சப்புள்ளையைப் போய் திட்டுறீங்க?
பசிக்குதோ என்னவோ,,, நான் பார்த்துக்கிறேன். பாலோ,
சாப்பாடோ கொண்டாங்க."

அருந்ததி இவளை ஏற இறங்கப் பார்த்தாள்.

இதே வார்த்தையை வேறு யார் சொல்லி இருந்தாலும்
முகத்தின் மேலேயே இடித்திருப்பாள், அருந்ததி.

இவள் மாடி வீட்டுக்குப் புதுசாய் குடிவந்துள்ள பெண்.
எரிந்து விழுந்தால் முதலுக்கே ஆபத்தாகிவிடும். இதையே
சாக்காக வைத்துக்கொண்டு, வீட்டைக் காலி செய்துவிட்டால்
என்ன. செய்வது?

அதனால் அசடுவழியச் சிரித்தாள்.

"அவன் எப்பவுமே இப்படித்தான். ஓயாம அழுதே உசிரை
எடுப்பான். நான் யார்கூடவும் பேசக்கூடாது. எப்பவும் அவன்
மூஞ்சியையே பார்த்துட்டிருக்கணும்."

"குழந்தைங்கன்னா அப்படித்தான்."

அமுதா, ராசுகுட்டியை உயரத் தூக்கிப்பிடித்து,
விளையாட்டாய் குலுக்கி, கன்னத்தில் முத்தமிட்டாள்.
இதுபோதும் அருந்ததிக்கு. வாயெல்லாம் பல்லாகிவிட்டது.

"வாங்க... உள்ளே வாங்க. வெளியிலேயே நிக்கிறீங்களே?"

இப்படித்தான் தொடங்கியது அருந்ததி வீட்டில்



அமுதாவின் நுழைவு.

ஒரு வாரத்துக்குள் மிகவும் நெருக்கமாகிவிட்டனர்.
என்றாவது அமுதாவைக் காணாவிட்டால், 'என்ன ஆச்சு,
நேத்து முழுக்கக் கண்ணுலேயே காணோம்' என்று அருந்ததி
விசாரிக்கிற அளவுக்கு ஆகிவிட்டது.

அமுதாவின் இலக்கு என்னவோ பாப்புதான். ஆனாலும்,
எடுத்த எடுப்பில் அவளோடு நெருங்கிப் பழகாமல்—
அருந்ததியிடமும் ராசுகுட்டியிடமும் மட்டுமே பேச்சை
வளர்த்தாள். அவ்வப்போது பாப்புவை சாடையாகப் பார்த்து,
சின்னதாய் சிரித்து வைப்பாள். அவ்வளவுதான்.

அவளுக்குத் தெரியும்; குழுவில் நன்றாகப் பாடுபவர்களை
வளைத்துப்போட வேண்டுமென்றால், முதலில் அவர்களுடன்
துணையாக வரும் பெரிசுகளை கவனிக்க வேண்டும்.

"அருந்ததி அக்கா... பாப்பு உங்கக் குழந்தை இல்லையா?
மூத்தாளோடக் குழந்தையா? நான் அப்பவே நினைச்சேன்..."


"என்ன நினைச்சே? நான், அவளை வயித்துல பொறந்த
பொறப்பாகத்தான் நினைக்கிறேன். அதுதான் முசுடு.
யார்கிட்டேயும் ஒட்டாது."

"அதில்லேக்கா. பாப்புவுக்கு ஒம்பது வயசுங்கிறீங்க.
உங்களைப் பார்த்தா, 'ச்சின்னப் பொண்ணா' இருக்கீங்க.
என்னடா இது, பாப்புவுக்கு இவங்க அக்காவா, அம்மாவான்னு
நினைப்பேன். இப்பத்தானே தெரியுது; சித்தின்னு."

"என்னைப் பார்த்தா அப்படியா தோணுது?"

"பின்னே, பொய்யா சொல்றேன்? ஏன்க்கா, கேட்
கிறேன்னு தப்பா நினைக்காதீங்க. அழகா, அம்சமா
சிம்ரனுக்கு தங்கச்சி மாதிரி இருக்கீங்க... உங்களைப் போய்,
உங்க வீட்டுல ரெண்டாந்தாரமா எப்படிக் கொடுத்தாங்க...
ஏன் கொடுத்தாங்க? நீங்க எதுக்காக சம்மதிச்சீங்க?"

"அய்யோ... அதை ஏன் கேட்கிறே? வீடு இருக்கு,
மெக்கானிக் கடை இருக்கு, பத்து ஆட்டோ ஓடுது, சைக்கிள்
கடை வேறு வச்சிருக்காரு... அப்படி இப்படின்னு
சொல்லியில்லே எங்கப்பாவை தரகன் ஏமாத்திட்டான்.



சொன்னாங்க.
மதல்தாரம் செத்துப்போச்சுன்னுதான் சொன்னாங்க. ...ரி, பாவம். நாம போய் வீட்டை விளங்க வைப்போம்ன்னு ...ந்தா... இங்கே தேவாங்கு மாதிரி இது உட்கார்ந்திருக்கு. ...துசா வந்தவளுக்கு எப்படி இருக்கும்?"

"அதானே."

"பத்தாக்குறைக்கு இதோடப் பாட்டி, மாசம் பொறந்தா– ...ரேத்தியைப் பார்க்க வந்துட்டு, ரெண்டு நாள் உட்கார்ந்து, ...அது ஏன் அப்படி இருக்கு? இதை ஏன் வெயிலில் காயப் ...போடலே?'ன்னு அதிகாரம் செய்யும். எனக்கு தேவையா ...சொல்லு."

"அதானே..."

"அதன் அப்பனுக்கும் ஒரு எழவும் தெரியாது. நாள் ...முழுக்க வாசக் கடையே கதின்னு கிடப்பாரு. இது, தீனியே ...குறின்னு என் வயித்தெரிச்சலைக் கொட்டிக்கும். ஒரு சினிமா, ...கடற்கரை எதுவும் பேசப்படாது நான்..."

"அதானே... இந்த வயசுல அனுபவிக்காம எப்ப அனுபவிக்கிறது?"

"அதைவிடு. என்னைப் பார்க்க வந்தா நான் எதையாவது சொல்லி அழுறேன்னு என்னைப் பெத்த புண்ணியவான் வர்றதேயில்லே."

"அப்ப வாரத்துல ரெண்டு, மூணு தடவை குடை பிடிச்சிட்டு வர்றாரே... அது யாரு?"

"அதுவா... என் தாய்மாமன். அக்கா மகளை இப்படியொரு எடத்துலக் கொடுத்துட்டோமேன்னு அக்கறையா வந்து வந்து பார்த்துட்டுப் போறாப்பல. ஏதோ ஒரு சீவன்... எனக்காகவும் கவலைப்பட..."

"ஏன்க்கா அப்படி சொல்றீங்க? இப்ப நானில்லே? எதுவானாலும் 'அமுதா'ன்னு கீழேயிருந்து ஒரு குரல் கொடுங்க... ஓடி வாரேன்."

இப்படி வேகமாய் வளர்ந்த நட்பு, அருந்ததிக்கு பல வசதிகளைச் செய்து தந்தது.

"அக்கா, பாப்புவுக்குப் பாட்டு சொல்லித் தர்றீங்க
என்ன?"

"ம்... இதை நான் வேறு கத்துக்கொடுக்கணுமாக்கு
படிப்பு வரமாட்டேங்குது. பள்ளிக்கூடம்விட்டு வந்
மாமரத்தடியே கதின்னு கிடப்பா. மெக்கானிக் கடை
பாட்டு போட்டுட்டே இருக்கானில்லே... கண்ட சினி
பாட்டையும்கேட்டுக்கேட்டு கிறுக்குபுடிச்சுப்போய்க்கிடக்
'படி'ன்னு சொல்லிடக்கூடாது. உடனே அவ அப்
பரிஞ்சிட்டு வந்துடுவாரு. 'என் புள்ளையை ஏன் கொடு
படுத்துறே'ன்னு கேட்பாரு."

"நல்லா இருக்கே நியாயம்? நீங்கதானே புள்ளை
வளர்த்து ஆளாக்கணும். எவ்வளவு பெரிய பொறுப்
உங்களோடது... அவருக்கென்ன... சொல்லுவாரு. பாப்பு
அப்பப்ப என்கிட்ட அனுப்புங்கக்கா... இவளை மாதி
சின்னப் பசங்க எல்லாம் எங்க இசைக்குழுவுல என்னமா
பாடுவாங்க தெரியுமா? சாயந்திரம் பள்ளிக்கூடம்விட்
வந்தாக்க, சனி– ஞாயிறு விடுப்புன்னாக்க... பசங்க கச்சேரிக்
வந்துடுவாங்க... ஒரு கச்சேரிக்கு நூறு, நூத்தம்பது ரூப
தருவோம். மாசத்துல பதினைஞ்சு, இருபது கச்சேரி கிடைக்கு
அப்ப கணக்கு போட்டுப் பாருங்க."

"ஆங்..."

வாயைப் பிளந்தாள், அருந்ததி.

திறந்த வாயில் ஈக்கள் நுழையாமல் விசிறியபடியே அடுத்
அம்பையும் எய்தாள், அமுதா.

"அக்கா... இது ரெண்டுங்கெட்டான் வயசு. சும்மா
பொழுதைக் கழிக்கக்கூடாது. அதுமட்டுமல்ல... உங்களைப்
பார்க்க மேடவாக்கம் மாமா வேறு அடிக்கடி வந்து போறாரு
இது இங்கேயே உட்கார்ந்து, நீங்க ரெண்டு பேரும் பேசுறதை
எல்லாம் கேட்காதுன்னு என்ன நிச்சயம்?"

".........."

"நீங்க பாவம்... அவர்கிட்ட, உங்க மனசுல இருக்கிற குறை
எல்லாத்தையும் சொல்லுவீங்க. உங்களுக்குன்னு வேறு யார்



இருக்காங்க. எது இருக்கோ இல்லையோ, மனசுக்கு நிம்மதி இருக்கணும்க்கா. எல்லாம் உங்க நல்லதுக்காகத்தான் சொல்றேன்."

அருந்ததி அப்படியே அமுதாவின் தோளில் சாய்ந்து விசும்பத் தொடங்கிவிட்டாள்.

"அமுதா... நீ என்கூடப் பொறக்காதப் பொறப்பு... என் மேல எவ்வளவு அக்கறை உனக்கு?"

"அதெல்லாம் அப்புறம். வர்ற சனிக்கிழமை போரூரில் ஒரு கச்சேரி இருக்கு. நான் இவளை மதியம் மூணு மணிக்கே அழைச்சிட்டுப்போயிடுறேன். ராத்திரி திரும்ப தாமதமாகும். கவலைப்படாதீங்க. அதான் நான் இருக்கேனில்லே?"

"அதுசரி... இவ அப்பா கேட்டா நான் என்னா சொல்லுவேன்?"

"என்கூட அனுப்பினதாகச் சொல்லுங்க. ஆனா, பணத்துக்குப் பாடப்போறதாச் சொல்லாதீங்க."

"ஏன்?"

"ஐய்யோ... பச்சைப் புள்ளை மாதிரி 'ஏன்'னு கேட்கிறீங்களே... ஏதோ உங்க கைச்செலவுக்கு நூறு, இருநூறுன்னு இருந்தா நல்லா இருக்குமேங்கிறதுக்காகத்தான் நான், பாப்புவை அழைச்சிட்டுப்போறேன். இல்லைன்னா ஊரு உலகத்துல பாட்டுப் பாட பொண்ணுங்களா இல்லே? அதுவும் சினிமா பாட்டு... எங்கக் குழுவுல அஞ்சு வயசுப் பொண்ணு ஒண்ணு... 'மன்மத ராசா'ன்னு பாடும் பாருங்க... கல்யாண மண்டபமே அதிர்ந்துபோகும்."

"ஆங்..."

அருந்ததி கண்ணீர் பெருக, அப்படியே அவளை இறுகக் கட்டிக்கொண்டாள்.

இப்படித்தான் பாப்புவை தன் வசமாக்கிக்கொண்டாள், அமுதா.

அவள் அக்கா வசந்தாகூட, தங்கையைத் தனியே அழைத்து, இரகசியமாகக் கண்டித்தாள்.

"ஏய்... உனக்கு கொழுப்பெடுத்துப்போச்சா? வீட்டுக் காரரோடப் பொண்ணை எதுக்காக கச்சேரிக்கு இழுத்துட்டுப் போறே... கொஞ்சம் இடம் கொடுத்தா— மடத்தைப் பிடுங்குவியே... அப்புறம் அந்தாள் கத்துறதுக்கா? நேத்து பார்த்தேனே... அந்தப் பொம்பளை, மீன்காரிகிட்ட பாய்ஞ்சுப் பாய்ஞ்சு சண்டை போட்டுட்டிருந்தா...

இப்பத்தான் ஒரு நல்ல இடம் கிடைச்சு குடிவந்திருக்கோம். இன்னும் கட்டிட்டு வந்த மூட்டைங்களைக்கூட பிரிக்கலே தாயே... மறுபடியும் மூட்டை கட்ட வச்சிடாதே."

"நீ சும்மா இருக்கா. பாப்பு, காக்கா கூட்டுல குயில் இட்ட முட்டை. அவளை நான் பெரிய ஆளாக்கிக் காட்டுறேன் பாரு" இப்படிச் சொல்ல...

பாப்பு முதலில் மிரண்டாள். வாயைத் திறக்கவே பயந்தாள்.

சனிக்கிழமை கச்சேரிக்கு, நாலு நாள் முன்னதாகவே, அந்தச் சிறுமியைத் தயார்படுத்தத் தொடங்கிவிட்டாள், அமுதா.

கதிருக்கு இது எதுவும் தெரியாது. காலையில் வேலைக்குப் போனால் இரவு ஏழு மணி சுமாருக்குத்தானே வருகிறான்.

இப்படி அலுவலகத்தில் உழைத்தால்தான், கச்சேரி இருக்கும் நாட்களில் இவன் இரண்டு மணி நேரம் முன்னதாகக் கிளம்ப அனுமதி கிடைக்கும்.

மேலும்... சீக்கிரமே வீட்டுக்கு வந்து என்ன செய்யப் போகிறான்? வீட்டில், அவனை வரவேற்க மனைவியா, குழந்தைங்களா?

வசந்தா, இவன் தலையைப் பார்த்தாலே தன் புலம்பலைத் தொடங்கிவிடுவாள்.

அமுதாவோ, பெரிய விழிகளில் பெருங்கடலை தேக்கி வைத்துக்கொண்டு, பார்வையிலேயே இவனைப் படாதபாடு படுத்துவாள். தேவையா அவனுக்கு?

சனிக்கிழமை குழுவினரை வேனில் ஏற்றிக்கொண்டு கிளம்பிப் போய்விட்டாள், அமுதா.

இவன், கச்சேரி தொடங்குவதற்கு சில மணித் துளிகளுக்கு முன்னால்தான் வந்தான்.

அப்போதுதான் பாப்புவைப் பார்த்தான். புருவம் உயர்த்தினான்.

"அட..."

வியப்பில், விழிகளை மலர்த்தினான். என்னவோ அவளைக் கண்டதும் மனசு 'குப்'பென மகிழ்ச்சியாய்ப் பூத்துப்போனது.

"உன் பெயரே பாப்புவா?"

"உம்..."

"பள்ளிக்கூடத்துல என்னன்னு கூப்பிடுவாங்க?"

"பாப்புன்னுதான்."

"ஏன்டா... அம்மா உனக்கு வேறு பேரு வைக்கலையா?"

"அம்... அம்மாவே இல்லே."

பாப்பு, மிக அழகாகக் கையை விரித்தாள். அமுதாதான் பதறிப்போனாள். 'சட்'டென, கதிரைப் பார்த்து சாடை காட்டி, தனியே அழைத்துப்போனாள்.

"இப்ப என்ன... பாப்புவுக்கு பேர் சூட்டுற விழாவா இது? என்னமோ... குழந்தைக்குப் பேர் வைக்கக்கூட நேரமில்லாம, பெத்தவள் கண்ணை மூடிட்டா... இப்ப இருக்கிறது சின்னம்மா."

"அ...ப்படியா?"

"ஆமா. ஆனா பொண்ணு பாடி கேட்கணும், நீங்க. பின்னணி இசையோடு பாடுறது எப்படின்னு சொல்லிக் கொடுத்து அழைச்சிட்டு வந்திருக்கேன்."

கதிர் பிரமித்தான்.

"என்கிட்ட சொல்லவே இல்லையே, நீ?"

"எதைச் சொல்லி இருக்கேன், இதைச் சொல்ல."

அமுதா 'விருட்'டெனத் திரும்பிய வேகத்தில் அவளது பின்னல், அவனது முகத்தில் சாட்டையாய் அடித்தது.

மேடையிலிருந்த பாப்புவின் கண்களில் புதியதோர் உலகத்தைப் பார்க்கும் உற்சாகம்... கூடவே பயம்.

முதல் பாட்டில் இருந்த தயக்கம், அடுத்த பாட்டில் பறந்துபோயிற்று. ரசிகர்களின் கைதட்டலும், வரவேற்பும் பாப்புவின் கூச்சத்தை கொஞ்சம் கொஞ்சமாக தெறடித்தது.

"என்னமா பாடுறா... எங்கேம்மா புடிச்சே இவளை?"

முருகேசு அமுதாவைக் கேட்க, அவளோ— கதிரி காதிலும் விழும்படியாகவே கூறினாள்:

"எல்லாம், இப்ப நாங்க குடியிருக்கிற வீட்டுக்கா அம்மாவின் பொண்ணுதான். காலடியில இருக்கிற மூலிகை கண்ணுக்குத் தெரியாதும்பாங்களே..."

கதிர் அவளைத் திரும்பிப் பார்த்தான். மெலிதா புன்னகைத்தான்.

அதைக் கண்ட அமுதாவுக்கு தன் கண்களையே நம் முடியவில்லை.

'அடடா... இவருக்குச் சிரிக்கக்கூடத் தெரியுமா?"

'எல்லாம் பாப்புவாலேதான். அவளோட அதிருஷ்ட தான்.'

அவள், பாப்புவை இழுத்தணைத்து முத்தமிட்டாள்.

வீடு திரும்பும் வழி நெடுக சிரிப்பும், கொண்டாட்டமு தான்.

முருகேசும், பிரேமும் கண்கலங்க அமுதாவிட கிசுகிசுத்தனர்:

"எப்படி சிரிக்கிறான் பாரு... இப்படித்தாம்மா பத்து வருடத்துக்கு முன்னாலேயும் இருந்தான். கச்சேரிக்குப் போறதுன்னு கிளம்பினா சிரிப்பும் கும்மாளமும்தான். அப் எல்லாம் அந்தப் பொண்ணு— அதுதாம்மா அபி... அதுவும் வரும். 'போவோமா... ஊர்கோலம்'னு எடுத்துவிடும் பாரு..."

அமுதா பெருமூச்செறிந்தபடியே கதிரைப் பார்த்தாள்.

அவன், பாப்புவைக் கெஞ்சிக்கொண்டிருந்தான்.

"பாப்பு... இன்னும் ஒரேயொரு பாட்டு பாடேன்."

"நீங்களும் பாடணும்..."

"சரி."

அந்தச் சிறுமி கணீரெனக் குரலெடுத்துப் பாடினாள்:

"போவோமா... ஊர்கோலம்..."





"என் தொப்புளுக்கு ஒரு பெருமை இருக்கு..."

"என்ன...?"

"ஆபீசில் இருக்கிறவங்க, பைல்களைவிட அதைத்தான் அதிக நேரம் பார்க்கிறாங்க!"

—தனலட்சுமி, கோவை.



"மாப்பிள்ளை நடத்தை எப்படி?"

"அதென்ன அப்படி கேட்டுட்டீங்க? சிறை வார்டனிடம் நன்னடத்தை சான்றிதழ் வாங்கி இருக்கார்!"

—அ. ராதா, பொன்னன்திட்டு.



"எனக்கு என் மனைவி வீட்ல இல்லேன்னா கை ஒடைஞ்ச மாதிரி இருக்கும்..."

"அப்படியா... என் மனைவி வீட்ல இருந்தால்... என் கை, கால் ரெண்டுமே உடையும்!"

—அர்ச்சனா பிரடரிக்.

# இதயம் பேசுகிறது!

நாவலைப் படித்துவிட்டு, உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள்.
முகவரி: இதயம் பேசுகிறது, "ராணி முத்து", சென்னை-600 007.

## விறுவிறுப்பு! விழிப்புணர்வு!!

"கோவில் மாடு" நாவல் அருமை. அமுதா கணேசன், கதைக்காக அலையாமல், அண்மைக்கால நிகழ்ச்சிகளைக் களமாகக் கொண்டு தூள்பரத்தி விட்டார்.

*மாத்யூ, விளந்திடசமுத்திரம்.*

கருத்துள்ள கதை. நன்கு சிந்திக்க வைத்துவிட்டார். [illegible]தோல் போர்த்தியவர்களின் [illegible]லை உரிக்க, ஊருக்கொரு [illegible]லை வேண்டும்.

*செ. வெற்றிவேல், குருநாதபுரம்.*

அக்கிரமத்தை ஒழிக்க, நல்ல எடுத்துக்காட்டான கதை.

*முத்தையா ஆனந்தன், வெற்றியாலங்குளம்.*

இன்றைய ஆன்மீகவாதிகளைப் படம்பிடித்து காட்டிவிட்டது. முல்லையும், சிவராமனும் எங்கள் நெஞ்சில் இடம் பிடித்தனர்.

*இராஜேஷ்குமார், களியக்காவிளை.*

மூடநம்பிக்கைகளையும், சமுதாய அவலங்களையும் முட்டித் தள்ளியது, 'கோவில் மாடு.' நாவல் கம்பீரம்.

*பொன். ராஜ்குமார், ஊத்தங்கால்.*

போலிச்சாமியார்களின்

பெண்கள் கற்புடன் வாழ வழிவகுக்கும் முயற்சி, இது.

*காளீசுவரி காளிதாசன், நீர்விளங்குளம்.*

கதை, இன்றைய சூழ்நிலையை அப்படியே பிரதிபலிப்பதாக இருந்தது.

*ஐசுவரியா, கோமதிபுரம்.*

வித்தியாசமான சிந்தனை யோட்டத்தில் கதை நகர்ந்தது. விழிப்புணர்வான படைப்பு.

*சற்குரு, முத்தம்மன்நகர்.*

முல்லை, அனைவரது நெஞ்சிலும் பூத்து, புதுமணம் பரப்பினாள்.

*காயத்திரி, திசையன்விளை.*

ஏதோ புதுமையாய் முடிவை சொல்லப் போகிறார் என்று பார்த்தால்...'புஸ்'சென்று முடித்து விட்டார். இருந்தாலும் ஒரே மூச்சில் படித்து முடித்துவிட்டேன். அவ்வளவு விறுவிறுப்பு.

*கிருஷ்ணாபுரம் கிருஷ்ணன்.*

'கோவில் மாடு', கொண்டாட்டமான மாடு. யாராவது திருந்தினால் சரி.

*மு. தண்டபாணி, வேலூர்.*

கதை வேகம்தான்! ஆமாம்... அறிவுப்போட்டி முடிவுகளை சீக்கிரம் வெளியிடக்கூடாதா?

*விசுவநாத், பெங்களூர்.*

## 6

கதிர் மனசுக்குள் பச்சை கடிதார், துப்பட்டா காற்றில் அலைய அபிராமி...

"போவோமா... ஊர்கோலம்..."

அனைத்துக் கல்லூரி இசைப் போட்டியில் அவளோடு சேர்ந்துப் பாடிய குயில்...

இருவரும் ஒரே கல்லூரிதான். ஆனால், அறிமுகம் கிடையாது.

போட்டியில் பல கட்டங்களைத் தாண்டிவிட்ட கதிருக்கு—காதல் பாடலின்போது மட்டும், அவனுடன் சேர்ந்துப் பாட வந்த பெண்ணுக்கு தொண்டை 'மக்கர்' செய்துவிட்டது.

"தண்டம்... கிடைச்ச சர்பத், கூல்டிரிங்ஸ், ஐஸ்கிரீம் எல்லாத்தையும் ஒரே முட்டாகச் சேர்த்து அமுக்காதேன்னு எத்தனை தடவை சொல்லி இருக்கேன்... இந்த பாட்டுலேயும் வெற்றி பெற்றால்தான் நம்ம கல்லூரிக்கு பரிசு கிடைக்கும். இல்லாட்டி, தலையில் துணியைப் போட்டுட்டுப் போயிட்டே. இருக்க வேண்டியதுதான்..."

அவன், அந்தத் தொண்டைக்கட்டுக்காரியிடம் கத்திக் கொண்டிருந்தான்...

"இப்படியே பாடட்டும்பா... போகப் போகச் சரியாயிடும்."

நண்பன் ஒருவன் சமாதானம் செய்ய, கதிர் மூர்க்கமாய் மறுத்தான்.

"அசிங்கம்டா... நம்ம காலேஜ் பொண்ணுங்களில் வேறு யாராவது... சுமாராகப் பாடத் தெரிஞ்சாலும் போதும். நான் சமாளிச்சிடுவேன்..."

அப்போதுதான் தொண்டைக் கட்டுக்காரி தன் கரகரத்த குரலில் கதிருக்கு அபிராமியை அறிமுகம் செய்தாள்.

"நம்ம கல்லூரி மாணவிதான்... மேடையில் பாடியெல்லாம் பழக்கமில்லே... ஆனா, நல்லாப் பாடுவா..."

அந்தப் பெண், கூச்சமும் வெட்கமும் பிடுங்கித் தின்
தலையைக்கூட உயர்த்தாமல் முனகினாள்.
"ஏய்... என்னடீ, என்னை மாட்டிவிடுறே..."
கதிர், வேகமாய் கையை வீசினான்...
"இதோபாரு... இந்த பிசுக்காரமெல்லாம் வேண்டா
நான் உன்னைக் கெஞ்சமாட்டேன். பாடுவியா, மாட்டியா
'சட்'டுனு சொல்லு... இல்லேன்னா பொம்பளைக் குரலி
பாடுற பாட்சாவைக் கூப்பிட்டுப் பாடச் சொல்லிட்டு
போறேன்..."
கதிருக்கு எப்போதுமே வேகம், பரபரப்புதான். அதுவு
பாட்டு என்றால், உயிரை விடுகிற அளவுக்கு ஆசை
ஒவ்வொரு ஆண்டும் அனைத்துக் கல்லூரி இசைப் போட்டி
யில் இவன்தான் பரிசைத் தட்டிக்கொண்டு வருவான்.
அந்த வெற்றி வேறு யார் கைக்கும் போய்விடக்கூடாது
என்கிற பதைப்பு.
"அபி... எனக்காகப் பாடுடீ... ப்ளீஸ்..."
கரகரத் தொண்டைக்காரி கெஞ்ச, மற்றவர்கள் அவளை
இம்சிக்க...
"சுமாராகத்தான் இருக்கும். அப்புறம் என்னைக் கோவிக்கக்
கூடாது..."
இப்படியொரு மனுவை முன்கூட்டியே வைத்தபடிதான்
மேடையேறினாள், அபிராமி.
"போவோமா.... ஊர்கோலம்..."
பொங்கி வழியும் பின்னணி இசைக்கேற்ப, அவளது குரல்
ஒலித்தபோது...
அலட்சியமாய் 'மைக்'கை பிடித்திருந்த கதிர், 'சடா'ரென
அவள் பக்கம் திரும்பினான்...
அவளோ, இவனைப் பார்க்கவேயில்லை. ஏன், யாரையும்
பார்க்கவில்லை.
கண்களை மூடி, இசைக்குள்ளேயே போய்விட்டாள்.
கல்லூரி விழா மண்டபத்தில் எழுந்த கரவொலி அடங்க



சற்று நேரம் பிடித்தது.
அன்றைய நாள்– கதிர் வாழ்க்கையில் பொன்னெழுத்தில்
பொறிக்கப்பட வேண்டிய நாள்!
இப்படியொரு பாடகி, அதே கல்லூரியிலேயே படிக்கிறாள்
என்பதையே இத்தனை நாளும் அறியாமல்...
"ச்சே... முன்னாலேயே தெரியாமப் போச்சே..."
வாய்விட்டு அங்கலாய்த்தான், அவன். அவள் மீது
திடீரென மதிப்பும் மரியாதையும் ஏற்பட, எதிரில் போய்
கை கட்டி நின்றான்.
"சாரி..."
"எதுக்கு..."
"அவசரத்துல பேசிட்டேன்..."
"அதனால என்ன... உங்க நிலையில யார் இருந்தாலும்
இப்படித்தான் பேசி இருப்பாங்க..."
அவள், அழகாய் புன்னகைத்துவிட்டுப் போய்விட்டாள்.
கல்லூரி நாட்களிலேயே தனக்கென்று ஒரு இசைக்குழுவை
நடத்தி வந்த கதிருக்கு, எப்படியாவது அபிராமியை, அதில்
பாடவைத்துவிட வேண்டும் என்று ஆசை. ஏன், வெறி
என்றுகூடச் சொல்லலாம்.
இன்றைக்கு இவன் குழுவில் உள்ள கிதார் பிரேம்,
இவனுடன் படித்தவன்தான். அந்த நாளிலேயே, கல்லூரி
செலவுகளுக்கென்று பெற்றோரை அதிகம் துன்புறுத்தக்
கூடாது என்பதுதான் கதிரின் நோக்கம். அதுவும் பிரேமுக்கு
எப்போதும் பணப்பற்றாக்குறைதான். பல நேரங்களில்
கச்சேரியில் வரும் காசுதான் அவனது குடும்பத்தின் பசியைத்
தீர்க்க உதவியிருக்கிறது.
ஆனால், அந்த ஏழ்மை– அவனது பேச்சிலும், சிரிப்பிலும்
தெரியாது...
அவனைத்தான் அபிராமியிடம் தூதுவிட்டான், கதிர்.
"ஏன்டா, அவகிட்ட காதலையா சொல்லப் போறே...
இப்படி நடுங்கிச் சாகிறே?'இதோ பாரும்மா... எங்கக் குழுவில்

பாட முடியுமா?'ன்னு 'பட்'டுன்னு தேங்காயைப் போட்டு உடைச்சாப்பல கேட்க வேண்டியதுதானே?"

"அவ ஒத்துக்கலைன்னா...?"

"விட்டுடு... நமக்குத்தான் கோகில வாணி இருக்காளே. அந்த நாள் சுசீலாவையும், இந்த நாள் சித்ராவையும் சேர்த்துப் போட்டு, மிக்சியில அரைச்ச மாதிரி– புவனா இருக்கா... போதும்..."

"இல்லேடா... அவ, அதான் அபிராமி மட்டும் பாடினா... நாமதான் இன்னிக்கு முதலிடத்தில் இருப்போம்."

"மவனே... ரொம்ப கனா காணாதே... புவனா, அவளோட உயிர் தோழி... அவளையே தூது அனுப்பு..."

"புவனாவுக்கு கோபம் வராதா?"

**க**திர் கவலைப்பட்டான்.

ஆனால், புவனாவோ சிரித்தாள்.

"ஏய், அவளை மேடையில் பாட வைக்கணும்னு உங்க எல்லாரையும்விட எனக்குத்தான் பயங்கர ஆசை... உங்களுக்கு எல்லாம் தெரியாது... அன்னிக்கு பாட்டுப் போட்டிக்கு நடுவரா வந்து, பரிசளித்தாரே... இசையமைப்பாளர், அவரோட உதவியாளர்கூட இவகிட்ட் கேட்டுட்டாரு... 'சினிமாவுக்கு பாடுறியா?'ன்னு. இவ 'மாட்டேன்'னு சொல்லிட்டா."

"ஏன்... ஏன்..."

"ஏன்னா... அவளுக்கு அதில்லே லட்சியம்... அப்படியே அவ ஆசைப்பட்டாலும், குடும்பத்துல யாரும் ஒத்துக்க மாட்டாங்க. பெரிய இடத்துப் பொண்ணு... ஆண்களுடன் படிக்க வைக்கவே யோசிக்கிற அப்பா... ரொம்பக் கண்டிப்பு! அதே நேரம் ரொம்ப ரொம்பப் பாசம்...

கல்லூரி விட்டால் நேரே வீடுதான்... வகுப்பு முடிந்ததும் வாசலில் பார்த்திருப்பியே... அவ அண்ணன்களில் எவனாவது, காரை வச்சிட்டு காத்துட்டிருப்பான்..."

புவனாவின் பதிலில் கதிர் அப்படியே முடங்கிப் போய்



விட்டான்.

ஓரிருமுறை அவனைத் தாண்டி அபிராமி சென்றபோது கூட, பேச்சு வராமல் திகைத்து நின்றிருக்கிறான்.

ஆனால்–

இதோ, இப்போது பாப்புவை அழைத்து வந்து, இவனுக்கு ஆனந்த அதிர்ச்சி தந்தாளே அமுதா.

அதுபோல, புவனாவும் ஓர் இசை நிகழ்ச்சிக்கு அபிராமியை சொல்லாமல், கொள்ளாமல் அழைத்து வந்தாள்.

எதிர்பாராத இந்த வருகையில் திக்குமுக்காடிப் போய் விட்டான், கதிர். பேச்சு வரவில்லை. உளறிக்கொட்டினான்.

"நீ... நீ... எங்கே இங்கே?"

"ஏன்... வரக்கூடாதா? புவனா கூப்பிட்டா... வந்தேன். தப்புன்னா... போயிடுறேன்ப்பா..."

அமைதியான ஆற்றின் அடியில் சுழலும் இருப்பது போல... சாதுவானப் பெண்ணுக்குள் சாதுரியமும் இருந்தது.

புவனாதான் சொன்னாள்: "இவ வீட்டுல இப்படியெல்லாம் தனியா அனுப்பமாட்டாங்க..."

"பின்னே இப்பமாத்திரம்... எப்படி?"

"அதுவா... இவளோடப் பெரிய அண்ணன் எனக்கு 'லைன்' போடுறாரு... ஆனா, அதெல்லாம் ஒத்துவராது. அவங்க அப்பா ஒத்துக்கமாட்டாரு... சாதியை விடு; அந்தஸ்து, பரம்பரைன்னு உச்சாணிக் கொம்புல ஏறி உட்கார்ந்திருக்கிற ஆளு..."

"அப்படின்னா...?"

"சும்மா பொழுதுபோக்குக்கு கிடைப்பேனான்னு பார்க்கிறாரு... நான் அதுக்கு சரிப்படமாட்டேன். கழுவுற மீனில் நழுவுகிற மீன் நான்... சரி, அப்படியே இவளையும் சேர்த்துக் கூட்டிட்டு நழுவலாம்னு நினைக்க... அவர் என் முகத்தைப் பார்த்து இளிச்சிட்டே, தங்கச்சியை அனுப்ப தன் அப்பாகிட்ட அனுமதி வாங்கித் தந்தாரு. எப்பவும் இதே முயற்சி சரிவராதுடா..."

அன்றைய இசை நிகழ்ச்சி, தேன் மழைதான்! புவனாவுக்குப் பதிலாக, முழுக்க முழுக்க அபிராமிதான் பாடினாள். புவனா, கைகளைக் கட்டிக்கொண்டு, முன்வரிசையில் அமர்ந்து ரசித்தாள்.

தயங்கித் தயங்கி கதிர் கொடுத்த இருநூறு ரூபாயை வாங்கி, அப்படியே புவனாவிடம் கொடுத்தாள், அபிராமி.

"ஏய், நீதானே பாடினே... இது உன் பணம்..."

"இல்லே... உன்னதுதான். நான், சும்மா கச்சேரி கேட்கத் தான் வந்தேன்..."

அபிராமியை வைத்த கண் வாங்காமல் பார்த்தான், கதிர். அவர்களைச் சுற்றி முருகேசு, பிரேம், இன்னும் இசைக் குழுவே...

"அசத்திட்டேம்மா..."

முருகேசு சொல்ல, வெட்கத்துடன் சிரித்தாள், அவள்.

"பணம் வாங்கமாட்டேங்கிறா அண்ணே... நீங்க சொல்லுங்க. பணம் வாங்கிட்டா— எனக்கும் திருப்தியா இருக்கும்."

"பணம் வாங்கலைன்னாத்தான் எனக்கு திருப்தியா இருக்கும். இந்த ரூபாய்க்காக நான் இங்கே வரலே..."

"வேறு... வேறு என்ன வேணும்... எவ்வளவு கொடுத்தா பாட வருவாளாம்... கேளுங்களேன் முருகேசு..."

பதறிய கதிரை ஓரக்கண்ணால் பார்த்து சிரித்துவிட்டு கூறினாள், அபிராமி.

"நான் கேட்கிறதை எல்லாம் இவராலே தரமுடியாது..."

"என்னடீ வேணும்... சொல்லித் தொலையேன். அடிக்கடி இல்லைன்னாலும்,எப்பவாவது முக்கியமான நிகழ்ச்சிக்காவது கூப்பிடுவோமில்லே?"

**அ**ன்றைக்கு அவள் சிரித்து மழுப்பிவிட்டுப் போய் விட்டாள்.

ஆனால், அடுத்த ஒரு வாரத்தில் கதிரைத் தேடிவந்து, அபிராமியின் மனசிலிருப்பதை புவனா சொன்னபோது—



'விருட்'டெனத் தலையை உயர்த்தினான் அவன். பிரேம், முருகேசு இருவரும்கூட இதை எதிர்பார்க்கவில்லை.

"இப்ப நாம ரோஜா இசைக்குழுன்னு பேரு போட்டிருக்கோம் இல்லையா?"

"ஆமா... நம்ம குழு பேரு அதானே?"

"அதை 'அபி இசைக்குழு'ன்னு மாத்தணுமாம்..."

"எங்கே அவ... ரெண்டா வகுந்து, தோரணம் கட்டிடுறேன்..."

கதிர் சீறி எழுந்தான்.

"குரல் நல்லா இருக்கேன்னு பாடக் கூப்பிட்டா, குழுவுக்கே இவ பேரை வைக்கணுமா... ச்சீ, இவ ரொம்ப திமிர் பிடிச்சவ அண்ணே... வேண்டாம், ஒதுக்கிடுவோம்."

புவனா, கதிரின் முதுகில் அறைந்தாள்.

"ஏய்... படிப்பையும் பாட்டையும் தவிர அறிவே வளரலைடா உனக்கு..."

"ஏன்... ஏன்?"

"அவ, தன்னையே உனக்குத் தர்றதுக்குக் காத் திருக்கா... அவ கழுத்துல ஒரு மஞ்சக்கயிறை கட்டு... உன் குழு பெயரை மாத்து... ரெண்டு பேரும், மேடை மேடையாகப் பாடுங்க... ஏதோ, எனக்கும் கொஞ்சம் இடம் கொடுத்தீங்கன்னா, ஓரமா நின்னுட்டு, தெரிஞ்சதைப் பாடிட்டுப் போயிடுறேன்..."

"அடிச்சான்டா பம்பர்..."

முருகேசு கத்த, பிரேம் அப்படியே உற்சாகத்தில் புவனாவின் கையைப் பிடித்துக் குலுக்க...

கதிர், அடித்து வைத்த சிலை மாதிரி உட்கார்ந்திருந்தான்.

'இவ என்ன சொல்றா...?'

'என்னையா... என்னையா அவ விரும்புறா...'

'அய்யோ, இன்னும் என்னை, என் குடும்பத்துல முழு மனிதனாகவே நினைக்கலையே...!'

'இரண்டு பட்டம்... இதோ, அடுத்த மாசம் வாங்கிடுவேன் ஆனா, வேலை? எவன் கொடுப்பான்? ஏதோ, கச்சேரியி

வர்ற காசு இருக்கு. வீட்டுல தட்டைப் போட்டுட் உட்கார்ந்தா, கவுரவமா சாப்பிட்டுட்டு எழுந்திருக்க முடியுது.

'அப்பா இதுக்கு ஒத்துக்குவாரா?'

'அவர் ஒத்துக்கிறது இருக்கட்டும். இவ வீட் ஆம்பிள்ளைங்க செருப்பைத் தூக்கிட்டு வந்துடமாட்டாங் களா?'

இத்தனை மனச் சலனங்களுக்கு நடுவிலும் அலை நடுவே பாய்மரக் கப்பல் பயணிப்பது போன்ற மகிழ்ச்சி...

அபிராமி தன்னைக் காதலிக்கிறாள் என்பதே அவனுக் 'ஜில்'லென்ற காற்றாய் படர்ந்தது...

'பாவி... எட்டாதக் கிளையில உட்கார்ந்துகிட்டு, என்னை இப்படிப் படுத்தறாளே!'

இடையில், சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், பெற்றோரையும், சகோதரர்களையும் ஏய்த்துவிட்டு, இவள் புவனாவோடு பாட வருவதும்... இவன், உயிரை குரலில் குழைத்து—

"மாளிகையே அவள் வீடு... மரக்கிளையே என் கூடு..."

எனப் பாடுவதும்...

அவள் பதிலுக்கு, 'உன்னை நான் சந்தித்தேன், நீ ஆயிரத்தில் ஒருவன்...' இப்படி காதலைக் கரைத்து, கல்யாணக் கச்சேரிகளை கலகலக்க வைத்ததும்... மலரும் நினைவுகள்.

தனக்கு ஒரு வேலை கிடைக்கும் வரையில் அவளைக் காத்திருக்கச் சொன்னான், கதிர்...

தொடக்கக் காலத்தில், இவள் 'தன் கச்சேரியில் பாட வருவாளா, வருவாளா' என்று அவன் ஏங்கியது போக, இப்போது 'வராதே... உன் வீட்டுக்குத் தெரிந்து, பெரிய ரகளையாகிவிடப் போகிறது' எனத் தவித்தான்.

அவள் கேட்கவில்லை!

வீட்டில், ஏதேதோ சாக்குபோக்கு சொல்லிவிட்டு, புவனாவுடன் வரத் தொடங்கினாள். பின், புவனா சொல்லாவிட்டாலும், எப்படியோ தெரிந்து, இடத்தைத்



தேடிக் கண்டுபிடித்து வந்துவிடுவாள்.

ஒரு முறை, இவளது அண்ணன்களின் நண்பன் ஒருவன், இவளை இசைக் குழுவில் பார்த்துவிட்டு, வத்தி வைத்து விட்டான்.

அன்றைக்கு வீட்டில் பெரிய ரகளை...

அப்பா கொடுத்த அடியில், நான்கு நாள் கல்லூரிக்கே வரவில்லை, அவள்...

துடித்துப் போய்விட்டான், கதிர். புவனாகூட, அவளைச் சந்திக்க முடியவில்லை.

அப்போதுதான்—

ஒரு கச்சேரி முடிந்து, வேனில் திரும்பிக்கொண்டிருந்த வர்களை, நடுத்தெருவில் வண்டியை நிறுத்தச் சொல்லி ஏறினாள்...

"அபிராமி!!"

அத்தனைப் பேரும் அதிர்ச்சியில் கூவினர்...

"சீக்கிரம்... சீக்கிரம் வண்டியை எடுங்க... எங்க அண்ணனுங்க வர்றதுக்குள் எங்கேயாவது போயிடுவோம்... ஏதாவது ஒரு கோவில்லே வச்சு..."

அவள் உடைந்து போய் அழுதாள்.

நிலைமையை உணர்ந்த பிரேம், வண்டியை அப்படியே திருச்சிக்கு திருப்பச் சொன்னான்...

"வாங்கடா... எல்லாருமாகப் போவோம்... அங்கே, என் பாட்டி வீடு இருக்கு. கோவில்லே வச்சு தாலி கட்டு. அப்புறம் வர்றதை பார்த்துக்கலாம்..."

இவள் இப்படி அடித்துப் புடைத்துக்கொண்டு ஓடி வந்ததற்குக் காரணமே, வீட்டில் திருமணம் நிச்சயிக்க— தேதி குறித்திருந்ததுதான்.

வீட்டில் திருமண ஏற்பாடு தொடங்குவதற்குள், திருவானைக் காவலில் இவர்களது திருமணமே முடிந்துவிட்டது!

உடனே ஊர் திரும்ப முடியாது...

கூடச் சென்றவர்கள் அனைவரும் ஓரிருவராகத்தான்

சென்னை வந்து சேர்ந்தனர்.

புவனாவுக்கு வீட்டில் செமத்தியான அடி... சில மாதங்களுக்கு அவளை, அவளது அக்கா வசிக்கும் மலேசியாவுக்கு அனுப்பி வைத்தனர்.

பிரேம் மீது, அபிராமியின் அண்ணன்கள் பொய்ப்புகார் கூறி, தங்களது செல்வாக்கால் அவனை கம்பி எண்ண வைத்தார்கள்.

மூன்று மாதம் கழிந்தது.

கதிரின் ஆயுளில் மறக்கமுடியாத வசந்த காலம்... ஊர் ஊராகச் சுற்றினார்கள். முருகேசுதான் அவ்வப்போது இவர்கள் இருக்குமிடம் தெரிந்து, பணமோ... தகவலோ அனுப்புவார்.

கடைசியாக வந்தத் தகவல்தான்– கதிரின் அப்பா சிவமூர்த்தி, மரணப் படுக்கையில் கிடக்கிறார் என்பது...

"எங்கே இருந்தாலும் வந்திடுங்க. நான் ஒரு மாதிரியா உங்க அப்பாவைச் சமாதானப்படுத்தி வச்சிருக்கேன். உயிர் போறதுக்கு முன்னால, மகனைப் பார்க்கத் துடிக்கிறாரு..."

இந்தச் செய்திதான், கதிரை அவசர அவசரமாய் ரெயில் பிடிக்கச் செய்தது.

முன்பதிவு செய்யாதப் பெட்டியில், இரவு முழுக்க கதிரின் தோளில் சாய்ந்து உட்கார்ந்தபடியே வந்த அபிராமியை...

சென்டிரல் ரெயில்நிலையத்தில் இறங்கியதும், கழுகுகள் போல அவளது அண்ணன்கள் கொத்திக்கொண்டுப் போவார்கள் என்று கனவிலும் நினைக்கவில்லையே, அவன்.

தோள்பட்டையில் அவள் சாய்ந்திருந்த வலி மட்டுமே மிச்சமிருந்தது, அவனுக்கு.

அதற்குப் பின்... அவளை கண்ணால் பார்க்கக்கூட அனுமதியில்லை.

கதிர், கலங்கிய கண்களைத் துடைத்துக்கொண்டான். பாப்பு, அவனது தோளில்... அபிராமி சாய்ந்த அதே தோளில் சாய்ந்து, தூங்கிப்போயிருந்தாள்.



## 7

வெறுங்குடத்தில் விழித்தாற்போல இருந்தது, கிழவிக்கு. மூலை முடுக்கெல்லாம் சென்று, தன் பேத்தியைத் தேடினாள்.

"பாப்பு எங்கே அருந்ததி?"

வந்ததிலிருந்து இப்படி அருந்ததியிடம் நாலைந்து தரம் கேட்டுவிட்டாள்.

மாமியார் தலையைக் கண்டதுமே சுந்தரத்துக்கு அடிவயிறில் நெருப்பை வைத்துக் கட்டினாற்போல இருந்தது.

'இப்ப எங்கே வந்தா இவ... ஒவ்வொரு மாசமும் முதல் வாரத்துலதானே வருவா...'

கிழவி உள்ளே போய் சிறிது நேரம் கழித்தபிறகே கடையைவிட்டு அவன் எழுந்தான்.

மாமர மேடையைத் தாண்டி, வீட்டுக்குள் நுழைவதற்குள்– கிழவி கேட்கும் கேள்விக்கு தகுந்த பதிலை, மனசுக்குள்ளேயே சொல்லிப் பார்த்துக்கொண்டான்.

'என்னன்று சொல்றது– பஞ்சரான சைக்கிள் மாதிரி மாமரத்தடியிலேயேதானே கிடக்கும் இவ பேத்தி... இப்ப எங்கேன்னு கேட்டா...'

'அக்கா வந்து ஊருக்கு அழைச்சிட்டுப் போயிருக்காள்ன்னு சொல்லலாமா... பெரிசு நம்பாதே. என் அக்கா, தன் பேரன், பேத்தியையே எட்ட இருந்து கொஞ்சுவா... இதைத்தான் அழைச்சிட்டுப் போய் சீராட்டப் போறாளாக்கும்.'

'இந்த அருந்ததிகிட்ட அப்பவே சொன்னேன்; வேணாம் கண்ணு... நாளைக்கு ஆயாவுக்கு யார் பதில் சொல்றதுன்னு... கேட்கலையே மூதேவி... இப்ப இவ என்ன பாட்டுப் பாடி புரட்டப்போறாளோ...'

தொடக்கத்திலேயே தடுக்காதது தன் தவறு என்பது

சுந்தரத்துக்கு புரிந்தது.

என்ன செய்வது... அருந்ததியை எதிர்த்துப் பழக்கமில்லை. அப்படியும் ஓரிரு முறை சொல்லிப் பார்த்தான்.

"தேவையில்லாத சங்கடம்தான். அதோடு ஆயாவுக்குப் பதில் சொல்றது யாரு?"

"நீ சொன்னாக் கேட்கமாட்டாளா?"

"அதில்லே அருந்ததி..."

"இதோ பாரு... அந்தம்மாவுக்கு மட்டும்தான் பாப்பு சொந்தமா... ஏன், உனக்கு அவ மகள் இல்லையா? அவளை எப்படி வளர்க்கணும்கிற உரிமை உனக்கு இல்லையா? என்னமோ பாப்பு யார் பெத்த பொண்ணோங்கிற மாதிரி பேசறீயே?"

சவுக்காய் சுழன்றன வார்த்தைகள்...

அருந்ததி பேசும் விதத்தைப் பார்த்தால், அவளுக்கு எல்லாமே தெரிந்திருப்பது போல...

ஏன்... தெரிந்திருக்காதா என்ன...?

சுந்தரம், அருந்ததியை மணந்து எட்டு ஆண்டாகிறது. முதல் இரண்டு ஆண்டு வேண்டுமானால் அவள், சுந்தரத்தின் பாராமுகத்துக்குக் காரணம், முதல் மனைவியின் மறைவு என நினைத்திருக்கலாம்.

போகப் போக, அவனது இயலாமை தெரிய வந்த பின்புதானே மேடவாக்கம் மாமாவை தைரியமாய் வீட்டுக்கு வரவழைத்தாள்.

'நான் இப்படித்தான் இருப்பேன். உன்னால முடிஞ்சதைப் பார்த்துக்கோ...'

—இப்படியொரு திமிர் அவள் பேச்சிலும், நடவடிக்கையிலும் வந்தன.

ராசுக்குட்டியை அவள் வயிற்றில் சுமந்திருந்த போதுகூட, ஆயிரக்கணக்கில் செலவழித்து, வளைகாப்பு செய்து, இருநூறு பேருக்கு வடை— பாயசத்துடன் விருந்து



போட்டான், சுந்தரம்...

"பரவாயில்லே. நானானாலும் என் பேத்திக்குத் துணையா ஒரு தம்பியையோ, தங்கச்சியையோ கொடுத்தீங்களே... அதுவே போதும்..."

—இப்படி பாப்புவின் பாட்டி உணர்ச்சிப் பெருக்கிட, அன்று கூறியதும்...

"என்னா சுந்தரம்... பெண்சாதி மாசமா இருக்காளாமே... சந்தோசம். யாரோட உபயம்?"

இப்படி அவனது அக்காள் கணவன் நக்கலாகக் கேட்டதும்...

அவனுக்கு அத்தனைச் சுலபத்தில் மறந்துவிடுமா?

அருந்ததி, இன்று வரையில், ராசுக்குட்டியைக் காட்டி 'இந்தாங்க, உங்க மகனைப் பிடியுங்க என்றுதான் சுந்தரத்தை அதட்டுகிறாள்.

அவனும் வாய் பேசாமல், குழந்தையைச் சுமந்து கொண்டுதான் இருக்கிறான்.

மூத்தவள்— எவனுக்கோ பிறந்த குழந்தைக்கு, இவனைத் தந்தையாக நினைத்துப் பார்க்கவும் முடியாமல்— குழந்தையுடன், சொத்துகளையும் இவனிடமே விட்டுப் போனாள்...

இரண்டாமவளோ— எவனுக்கோ பெற்று, 'அதற்கு நீதான் தந்தை... உனக்குப் பிறகு இந்த வீடும், சொத்தும் இவனுக்குத் தான்!' என்று அடாவடியாய் நடந்துகொள்கிறாள்...

அன்று அவள் பச்சையாகச் சொன்னாள்.

"இந்தா, நீ பாட்டுக்கு கடையே கதின்னு கிடக்கே. என் மாமா இருந்திருந்து சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமையில தான் வர்றாரு. உன் மவளுக்கு வயசு ஏறிட்டே வருது... மடியில் பூனையைக் கட்டிட்டு, சகுனம் பார்க்கப் போகிறாப்பல— இது நல்லாவா இருக்கு..."

"அருந்ததி... அவருதான் வாரத்துல மூணுநாள்ய?"

"பேசாதேய்யா, அவர் அப்படித்தான் வருவாரு.

தொட்டுட்டாரில்லே? மடி சுமக்கத் தந்திருக்காரில்லே அந்தப் பாசம் அவரை இழுத்துட்டு வருது... மத்தபடி உ நான் என்னா குறை வச்சேன்?"

"கத்தாதே அருந்ததி... மாடி வீட்டுக்கெல்லாம் கேட் போவுது..."

"ஆங்... அந்த ரோசம் இருக்கில்லே? அப்பப் பேசாதேய் கையாலாகதவன்னு நீ சொல்லி இருந்தா கழுத்தை நீ இருப்பேனா? பொய்ச் சொல்லி, தாலி கட்டி... நான் என்ன பாவம் செஞ்சேன் உனக்கு..."

"குரலைக் குறைச்சுக்க அருந்ததி..."

"அத்தனை கவுரவம் பார்க்கிறவனா இருந்தா முதல் அந்தச் சனியனை, மாடி வீட்டுப் பொண்ணுகூட கச்சேரி அனுப்பு..."

"அருந்ததி... என்ன இருந்தாலும் பாப்பு பெரிய எடத்து பேத்தி..."

"அப்ப அங்கிட்டு கொண்டு வச்சுக்க வேண்டியதுதா பெரிய மனுசி? இங்கே இருந்தா— அது உ பொண்ணுதான். கேட்டாச் சொல்லு. என்ன செஞ்சிடு அந்தக் கிழவி... நானும் பார்க்கிறேன்..."

அவன் பாப்புவைப் பார்த்தான். பவுடர் பூசி, இரட்டை பின்னலை முன் புறம் தவழவிட்டு, மாடிக்கு ஓடுவதிலே குறியாக இருந்தாள்...

வீட்டோடு இருப்பதில் அவளும் சுகப்படவில்லை. அப்ப அவள் இருப்பதால் இவளும் ஆனந்தப்பட போவதில்லை.

ஒழியட்டும்!

விட்டுவிட்டான்... ஆனால், அடுத்த வாரத்தில் கிழ வந்தவிட்டுப் போகும் வரையில் பாப்புவை எங்கேயு அனுப்பாதே என்று மனைவியிடம் மன்றாடிக் கேட்டு கொண்டிருந்தான்.

"பாப்பு... கச்சேரிக்குப் போறேன்னு ஆயாக்கிட்ட



சொல்லிடாதே..."

"உம்..."

"சொன்னா, போக விடமாட்டாங்க..."

இப்படி மகளையும் மிரட்டி வைத்திருந்தான். அப்படியும் சிக்கலில் மாட்ட வேண்டிய சூழ்நிலை...

"மாப்பிள்ளை... பாப்பு எங்கே... அருந்ததியைக் கேட்டா மென்று முழுங்குறா..."

"அ... அது வந்து... மாடியிலப் புதுசாகக் குடி இருக்குது... அவகிட்ட பாப்பு ரொம்பவும் ஒட்டிட்டா... படிச்ச பொண்ணு... பாப்புவுக்கு அவ 'டியூசன்'கூட எடுக்கிறா... இன்னிக்கு ஒரு கல்யாணத்துக்குப் போயிருக்கா... இவளும் கூடவே போவேன்னு ஒரே அடம்... அருந்ததி எவ்வளவோ சொல்லிப் பார்த்தா..."

கிழவியின் முகம், கவலையில் சுருங்கியது. "எதுக்கு வெளியிடங்களுக்கு எல்லாம் வேற்று ஆட்களை நம்பி, பொம்பிளைப் புள்ளையை..."

"எங்களுக்கென்ன ஆசையா? உங்க பேத்திக்கு ஆனாலும் பிடிவாதம். நான் சொல்லி கேட்கிற ரகமில்லே, அவ."

அருந்ததி, நடுவில் ஊசியை ஏற்றினாள். கூடவே இடக்காகக் கேட்டாள்:

"ஆமா... எப்பவும் முதல்தேதிவாக்குலதானே வருவீங்க... இந்த முறை என்னா... பதினெட்டுல வந்து நிக்கிறீங்க?"

கிழவி, இவள் பேச்சில் தொனித்த கிண்டலைப் பொருட்படுத்தவே இல்லை. நீண்ட பெருமூச்சுடன் கூறினாள்:

"யாரு மறந்தாலும், பொண்ணைப் பெத்து, வளர்த்தவ மறக்கமுடியுமா? நாளைக்கு என் மகளோட நினைவு நாள். செத்து ஒம்பது ஆண்டாகுது. ஏதோ, மாப்பிள்ளைகூட வாழத்தான் அவளுக்குக் கொடுத்து வைக்கலே. அவர் கையாலே ஆண்டுல ஒரு முழம் பூவாவது வாங்கிக்கட்டும்!"

கிழவியின் வார்த்தைகளைக் கேட்டதும் 'திக்'கென்றது.

சுந்தரத்துக்கு.

உண்மைதானே. மனைவியின் நினைவு நாளை மாமியார் வந்து நினைவுபடுத்தவேண்டிய நிலையில் அவன் இருக்கிறானே!

அந்த ஒரு கணத்தில், என்றைக்கும் இல்லாத அதிசயமாய் அவனது குரல், அருந்ததியிடம் அனலை வீசிவிட்டது.

"ஏன்டீ... எனக்குத்தான் ஆயிரம் வேலை. வீட்டோட உட்கார்ந்து மாமன், மச்சானோடு பேசிட்டிருக்கியே... நீ இதையெல்லாம் நினைப்புல வச்சுக்க வேணாமா?"

அருந்ததி, கணவனை உறுத்துப் பார்த்தாள். முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. ஆனால், அவள் எதுவுமே பேசவில்லை. 'வெடுக்'கென எழுந்து உள்ளே போய்விட்டாள்.

கிழவி மட்டும் பேத்தி வரும்வரையில் வாசல் திண்ணையிலேயே காத்திருந்தாள்.

தூங்கிய பாப்புவை கதிரிடமிருந்து வாங்கி, அருந்ததியின் வீட்டுக்குள் கொண்டுபோனது அமுதாதான்.

"அருந்ததியக்கா..."

"அவ இல்லே. படுக்கப் போயிட்டா. குழந்தையை இப்படிக் கொடு."

தன்னிடமிருந்து பிடுங்காதக் குறையாக, பாப்புவை வாங்கிக்கொண்ட முதியவளை வைத்த கண் வாங்காமல் பார்த்தாள், அமுதா.

"நீங்க..."

"நான் பாப்புவோட தாய்வழிப் பாட்டி. ஆமா... குழந்தை சாப்பிட்டாளா?"

"ஆச்சு."

"இனிமே இப்படியெல்லாம் எடுத்துட்டுப் போகாதே. வெளியில கண்ட சாப்பாடு... தண்ணி... குழந்தை உடம்புக்கு ஒத்துக்காமப்போச்சுன்னா என்னாகும்? அய்யான்னா வருமா... அப்பான்னா வருமா?"



"........"

"நீதான் மாடியில புதுசா குடிவந்திருக்கிற பாண்ணா?"

"உம்..."

"கல்யாணமாயிடுச்சா?"

"இன்னும் இல்லே."

"அதான், புள்ளயோட அருமை தெரியலே. சீக்கிரமா கல்யாணத்தைச் செஞ்சிட்டு, 'சட்டுபுட்டு'ன்னு ஒண்ணைப் பெத்துக்க. அப்பத் தெரியும்... கண்டவங்கிட்டப் புள்ளையைக் கொடுத்தா— வயிறு எப்படி பதைபதைக்கும்ன்னு."

அங்கேயே நின்றிருந்தால், கிழவி இன்னும்கூட ஏதாவது பேசி இருப்பாள்.

அமுதா 'சட்'டென மாடிப் பக்கம் திரும்பிவிட்டாள். பாட்டியின் வார்த்தைகள், முன்போல நெஞ்சில் உறுத்தினாலும், அவள் கூறிய இன்னொரு வார்த்தை மனசுக்குப் புது உற்சாகத்தை அளிப்பதாய் இருந்தது.

'சீக்கிரம் கல்யாணத்தை செஞ்சிட்டு, 'சட்டுபுட்டு'ன்னு ஒண்ணைப் பெத்துக்க.'

இது வரமா... சாபமா?

எதுவாக இருந்தாலும் பலித்தால் சரி!

இரவு—

முதல்முறையாக, அவன் படுக்கப்போகும்முன் வழிமறித்துக் கேட்டான், கதிர். "பாப்புவை பத்திரமாகக் கொண்டு விட்டுட்டியா அமுதா?"

"உம்..."

"ஏன் இத்தனை நேரம்?"

"அவளோடப் பாட்டி வந்திருக்காங்க. நிறுத்தி வச்சு ஆயிரம் குறுக்கு விசாரணை..."

அவன், அமுதாவையே பார்த்தான். அவளோ, அவனை ஏறிட்டு ஒருமுறை பார்த்துவிட்டு தலைகவிழ்ந்தாள்.

"ரொம்ப நன்றி அமுதா."

"எதுக்கு?"

"பாப்புவை கச்சேரிக்கு அழைச்சிட்டு வர்றியே. எப்படியோ, அவளோட சித்தியை உன் பக்கம் திருப்பிட்டே."

இப்போது அவள், மெதுவாய் தலை நிமிர்ந்து, மெலிதாய் புன்னகைத்தாள். அந்தப் புன்னகையில் குறும்பு கசிந்தது.

"அவளோட சித்தி என்ன... இந்த உலகத்தையே என் பக்கம் திருப்பிட முடியும். ஒரேயொரு ஆளைத் தவிர..."

அவனும் சிரித்தான்.

"அப்படிப்பட்ட கல்மனசுக்காரனை நினைச்சு எதுக்கா உருகுறே அமுதா? 'சரிதான்; போடா'ன்னு தலைமுழுகிட்டேன்."

"சுலபமாகச் சொல்லிடலாம். நடைமுறையில அது சாத்தியமே இல்லை. ஆனா..."

"என்ன ஆனா?"

"எப்படியும் அந்தக் கல்லையும் கனிய வச்சிடுவேன் என்கிற நம்பிக்கை இருக்கு."

அவள் படுக்கையை உதறிப் போட்டுக்கொண்டு, அப்படியே 'தொப்'பென விழுந்தாள்.

அவனோ இளம் சிரிப்புடன் தன் அறைக்குப் போனான். மனசு முழுக்க இனம்புரியாத மகிழ்ச்சியில் திளைத்தான். ஆயிரம் வயலின்களை ஒருசேர இசைத்தாற்போலிருந்தது அவனுக்கு.

எப்போது தூங்கினானோ... காலையில்— அருந்ததி போட்ட கூச்சலில்தான் அந்த வீடே எழுந்தது.

"என்ன... இப்ப என்னங்கிறே? மூத்தாளோடப் படையலுக்கு நான் எதுவும் செய்யமாட்டேன். இப்ப என்னய்யா செய்வே? மூத்தாளாம் மூத்தாள்! நிசத்தைச் சொல்லு. அவளை உன் பெண்டாட்டியா ஒருநாளாவது நடத்தி இருப்பியா நீ?"



"அருந்ததி... என்ன இப்படி கத்துறே? விடிகாலை நேரத்துல நாலு பேர் காதுல விழுந்தா... நீ ஒண்ணும் செய்ய வேண்டாம்மா. என் உடம்புல தெம்பு இருக்கிறவரைக்கும் நான் என் மகளுக்கு செஞ்சிட்டுப் போறேன். செத்துப்போன ஒரு சீவனுக்கு பொறந்த வீட்டிலும் படையல் இல்லாம, புகுந்த வீட்டிலும் இலை போடாம இருந்தா குடும்பத்துக்கு நல்லதில்லேம்மா" —இது கிழவியின் குரல்.

"ஏ கிழவி... எல்லாம் உன்னால வந்தது... உன் மகளுக்கு இந்த ஆள் புருஷனா... உன் பேத்தி இவனுக்குப் பொறந்ததா? யார்கிட்ட நாடகமாடுறே... உன் பொண்ணு எவன்கிட்டயோ போய் வயித்துல வாங்கிட்டு வந்தா. அவளை நீ, சொத்தையும் பணத்தையும் கொட்டி ஒரு வக்கத்தவனுக்குக் கட்டி வச்சே. இப்ப பொண்ணுக்கு படையல்னு இங்கே வாறே. முதல்லே அவளுக்கு இவன் புருஷனே கிடையாது. கொண்டா அந்த போட்டோவை."

கதிர், அலுவலகத்துக்குக் கிளம்பி, மாடிப்படிகளில் இறங்கி வர, அருந்ததி வீசியெறிந்த 'பிரேம்' போட்ட புகைப்படம் அவன் காலடியில் வந்து விழுந்தது. கண்ணாடி உடைந்து சிதறியது.

அவன் குனிந்து புகைப்படத்தை எடுத்தான். அதிர்ச்சியில் கீழே விழுந்துவிடாமலிருக்க, படிக்கட்டு கைப்பிடியை கெட்டியாகப் பிடித்துக்கொண்டான்.

## 8

சுந்தரம் அப்படியே குன்றிப்போய்விட்டான்.

'இதைவிடவும் அவமானம் வேறென்ன இருக்கிறது?'

இத்தனை நாளும் மூடி மூடி மறைத்த எல்லா இரகசியங்களையும் அம்பலத்துக்குக் கொண்டுவந்துவிட்டாள், அருந்ததி.

வீட்டைச் சுற்றியுள்ள, அக்கம்பக்கத்து சன்னல்களில்



எல்லாம் 'ஆ'வென கொத்து கொத்தாய் தலைகள்.

கடையைத் திறக்க வந்த கபாலியும், பொடியன்களும் 'ஆ'வென வாய் பிளந்து நின்றார்கள்.

"இவன் ஒரு நிசமான ஆம்பிளையா இருந்தா, மேடவாக்கம் மாமா ஏன் படியேறி என் வீட்டுக்கு வர்றாரு?

"தா... கிழவி... நீ, சேதாரமானப் பொண்ணை கட்டிக் கொடுத்து இவனை ஏமாத்தினே. இவன், எவளோ பெத்துக் கொடுத்த பொண்ணைக் காட்டி, என்னை ஏமாத்தினான். நான் யாரையும் ஏமாத்தலை. 'வெளியில் சொல்லாதே... மானம் போயிடும்'ன்னு கெஞ்சினான். 'சரிதான்'னுவிட்டேன். ரெண்டு வேளை சோறு போட்டு, நாலு சேலை எடுத்துக் கொடுக்கிறதுக்கு– 'நான் இவன் பெண்டாட்டி. இது, இவனுக்குப் பொறந்த புள்ளை'ன்னு போர்டு எழுதி, கழுத்துல மாட்டிகிட்டு அலையணும் இல்லே?"

அருந்ததி, உக்கிரத்தில் இருந்தாள். எதைச் சொல்லியும் அவள் வாயை அடைக்க முடியாது என்பது புரிந்தது.

இத்தனைக்கும் காரணம்; எதிர்த்து ஒரு சொல்கூட இதுநாள்வரை சொல்லியறியாத சுந்தரம், மூத்த மனைவியின் நினைவு நாளை நினைவூட்டக்கூடாதா என அவளை அதட்டிக் கேட்டதுதான்.

அதுமட்டுமல்ல... கிழவியின் எதிரிலேயே, 'மாமா, மச்சான் வந்ததாகப் பேசுறியே' என இடித்ததும்தான்.

சமீபகாலமாகவே மேடவாக்கம் மாமாவின் உபதேசங்கள், அருந்ததியின் மனசில் அழுத்தமாகப் பதிந்து, வேலை செய்யத் தொடங்கியிருந்தது.

"இந்தா பாரு அருந்ததி... இது அத்தனையும் அந்த ஆத்தாளை முழுங்கிட்டு நிக்குதே அதோட தாய்வழிச் சொத்து. உனக்கு இதுல இருந்து ஒத்தை பைசா கிடைக்காது."

"நிசமாவா... ஏன், எல்லாத்தையும் இவன்தானே பார்த்துக்கிறான்."

"பார்த்துட்டே இருக்கவேண்டியதுதான். பொண்ணு

பெரிசாயிடுச்சுன்னா– கணக்கு கேட்கும். அப்ப நீ, ஒரு பிஸ்கோத்து பொட்டலம் வாங்கணுமானாலும் அவ இட்டத்தான் நிக்கணும்."

"ஐய்யோ... இப்ப நான் என்ன செய்ய?"

"அப்படி கேளு... இன்னும் ஏன், அவன் குறையை மூடி வைக்கிறே? நாலு பேர் மத்தியிலப் போட்டு உடை."

"ச்சீ... அப்புறம் ராசுகுட்டியோடப் பொறப்பு இரகசியமும் வெளியில வரும்?"

"வரட்டுமே... அதுவா இப்ப முக்கியம்? இதோ பாரு... நீ தாலிக்கு அவன்கிட்ட கழுத்தை நீட்டிருந்தாலும், பெண்டாட்டியா இருக்கிறது யாருக்கு? எனக்குத்தானே. அப்பாலே, இதுல நீ என்ன துரோகம் செஞ்சே அவனுக்கு?"

"........."

"பளிச்சுன்னு சொல்லு. கோர்ட்டுலே வழக்கு போடு. எட்டு வருச வாழ்க்கை வீணாயிடுச்சுன்னு வக்கீல் நோட்டீசு விடு... நஷ்டஈடு பத்து லட்சம் வேணும்ன்னு கேளு."

"ஆங்... பத்து லட்சமா?"

"ஆமா... அப்படிக் கேட்டாத்தான் அஞ்சு லட்சமாவது வரும். இவனெல்லாம் கோர்ட்டு படியேறமாட்டான். அத்தனை துணிச்சல் இருந்தா– ஏன் இப்படி செக்குமாடு மாதுரி, கடையையே சுத்திச் சுத்தி வர்றான். எலுமிச்சம்பழம் மாதிரி பெண்டாட்டி இருக்கிறப்ப, எவனாவது 'ஒர்க்ஷாப்'பை கட்டிட்டு அழுவானா? கபோதி..."

அருந்ததிக்கு மாமனின் வார்த்தைகளில் நம்பிக்கை நிறைய... அவன்தான் ஏற்கனவே சொல்லிவிட்டானே.

"தகரப்பெட்டிக்குள் வைரத்தை வைக்கிற மாதிரி, உன்னை நான், இங்கே விட்டுவச்சிருக்கேன், அருந்ததி. நீ என் சொத்து. எப்ப என்கூட வந்தாலும் மடிப்பாக்கத்துல வீடு பார்த்து வச்சிருக்கேன்."

அந்த வார்த்தைகள் கொடுத்த தெம்பும், தைரியமும்தான்



அவளை அந்த ஆட்டம் போடச் செய்தன.

சுந்தரம் பேச்சிழந்து நின்றான். கிழவிதான், குரலெடுத்து எல்லோரையும் விரட்டினாள்.

"அட என்னங்க... காலங்காத்தாலே ஊரான் வீட்டுச் சண்டையை வேடிக்கைப் பார்த்துட்டு நிற்கிறீங்க? அவங்கவங்க வேலையைப் போய்ப் பாருங்க."

"பாப்பூ... சின்னம்மா விட்டெறிஞ்ச உன் அம்மாவோட போட்டோ வாசல்லே கிடக்கும்... போயி எடுத்து வா.

"கபாலி... கடைக்குப் போய் ரெண்டு முழம் மல்லிப்பூவும், தேங்கா, பழம், வெத்தலைப் பாக்கு வாங்கிட்டு வா. இந்த ஆண்டு என் மகளுக்கு இதான் தரமுடிஞ்சது."

இத்தனையையும் சொல்லிவிட்டு நேரே கிணற்றடிக்குப் போய், நாலு குடம் தண்ணீரை இழுத்துத் தலையில் கொட்டிக்கொண்டாள்.

மாடி சன்னல் வழியாக பார்த்துக்கொண்டிருந்த வசந்தா வைப் பார்த்து, ஓட்டைப் பல் தெரிய சிரித்தாள்.

"நீதான் அந்த இளங்குமரிக்கு அக்காவா?"

"........."

"புருஷன் இருக்கானில்லே?"

"வேலைக்குப் போயிருக்காரு."

"அதான்... இருக்கானில்லே... பத்து மணி சுமாருக்கு கொஞ்சம் கீழே எறங்கி வந்து, வெத்தலை பாக்கு தர்றேன. வாங்கிட்டுப் போயிடேன்."

"அதுக்கு எதுக்கு என் புருஷனைப் பத்திக் கேட்டீங்க?"

"அதில்லை... இந்தக் காலத்துல புருஷன் இருக்கிறவளும் ஒரே மாதிரியாத்தான் இருக்குறா... இல்லாதவளும் ஒரே மாதிரியாகத்தான் இருக்குறா... ஒரே வீட்டுல ஒம்பது வருடம் சேர்ந்து இருந்திட்டு, கடைசியில அவனுக்கும் எனக்கும் சம்பந்தமே இல்லேங்கிறா... ஒண்ணுமே விளங்கலே தாயீ எங்க காலம் வேற... உங்க காலம் வேற... நீ வர்றியா

மறந்துடாதே."

இப்படிச் சொன்னவள், பாப்புவையும் அழைத்து உட்கார வைத்து அவள் தலையிலும் நாலு குடம் தண்ணீரை ஊற்றினாள்.

அன்றையப்பொழுது எரிமலையாகிப்போனது. ஆனால், இரவு நெடுநேரம் கிழவி, மாமரத்து மேடையிலேயே அமர்ந்து, வெற்றிலை இடித்துக்கொண்டிருந்தாள்.

சுந்தரம் கடையைப் பூட்டிவிட்டு தயக்கத்துடன் வீட்டுக்குள் நுழையப் போக...

தலையை உயர்த்தாமலேயே அவனை அழைத்தாள், கிழவி.

"யப்பா சுந்தரம்... இங்கே சித்த வந்துட்டுப் போ."

திடுக்கிட்டான், அவன்.

கிழவி இதுநாள் வரையில், அவனை 'மாப்பிள்ளை' என்றுதானே அழைப்பாள்.

அவள் மட்டுமில்லை. மாமியார் வீட்டிலுள்ள அத்தனைப் பேருமே அவனை அப்படித்தானே அழைப்பார்கள்.

இப்போது திடீரெனக் கல்லைத் தூக்கிப்போட்டது போல... இது என்ன?

சஞ்சலத்துடன் வந்தவனை உட்காரச் சொல்லி, திண்ணையைக் காட்டினாள், அவள்.

"என்ன... என் மகளோடப் புருஷனைத்தான் நான் மாப்பிள்ளைன்னு கூப்பிடணும்... உனக்கு எதுக்கு அனாவசிய மரியாதை?"

சுந்தரம் வெகுண்டான். காலையில் நடந்த சண்டைக்குப் பிறகு, இப்போதுதான் வீட்டுப் பக்கமே அடியெடுத்து வைத்திருக்கிறான். வாசலிலேயே கிழவி அவனை வழிமறித்து வம்புக்கு இழுத்தால், எரிச்சல் வராதா?

"உன் மரியாதை எனக்குத் தேவையில்லே. என்ன சொல்லணுமோ, 'சட்டுபுட்டு'ன்னு சொல்லு. பசிக்குது."

"எனக்கென்னவோ அருந்ததியோடக் கோவத்தை குத்தமா



நினைக்க முடியலே... வக்கத்தவன் வீட்டுலப் பொங்கிப் போட்டுகிட்டு, ஏதோ திக்கத்த ஒரு பொண்ணுக்கு வளப்புத் தாயா இருந்தே காலத்தைக் கழிச்சிட எவளாலே முடியும்?"

"அவதான் கள்ளப் புருஷனை வச்சிருக்காளே... அவளுக்கு நீ என்ன வக்காலத்து?"

"தப்புத்தண்டாவாகப் பேசினே... மவனே பொலி போட்டுடுவேன்... நீ கொடுக்கிறதைக் கொடுத்தும் அவ,வேறு ஒருத்தன் கூடப் போயிருந்தா— அதுக்குப் பேருதான்டா நீ சொல்றது. அதைச் சொல்ல உனக்கு உரிமை இல்லே."

"........."

"ஆனா,இப்ப நான் உன்கிட்டப்பேசப்போறது அதில்லே..."

அவன் நிமிர்ந்தான். அரை இருட்டில் கிழவி பிசாசுபோலத் தெரிந்தாள்.

"உன்கிட்ட என் மகளை ஒப்படைக்கிறப்ப, அவ வயித்துல பிள்ளையைச் சுமந்திருந்தது எனக்கு தெரியாமப்போச்சு..."

சுந்தரம் சிரித்தான்.

"இதை என்னை நம்பச் சொல்லுறியா?"

"நம்பினாலும் சரி, நம்பாட்டிலும் சரி. என் நிலைமையைச் சொல்றேன். பாவி மக... இப்படின்னு என்கிட்ட ஒருவார்த்தை சொல்லியிருந்தா— நான் என் உசிரைக் கொடுத்தாவது அவளை, அவ காதலிச்ச பையன் கூடவே சேர்த்து வச்சிருப்பேன். வயித்துல ஒருத்தனோடப் புள்ளை... கழுத்துல வேறு ஒருத்தனோடத் தாலின்னா... என்ன கொடுமை? என் மக்களே என்னை ஏமாத்திட்டாங்களே... நான் என்னா செய்வேன்?"

"இப்ப என்ன... போறவ போயிட்டா. உன் பேத்தி இங்கே நல்லாத்தானே இருக்கா. எதுக்குக் கூப்பாடு போடுறே?"

கிழவியின் இடுங்கிய விழிகள், சுந்தரத்தைத் துளைத்தன.

"இப்ப என்னாவா? என் பேத்தி நிலைமையைக் கொஞ்சமாவது நினைச்சுப் பார்த்தியா? ஏதோ, ஆத்தாதான்

போயிட்டா. அப்பன்காரன் விட்டுடமாட்டான்னு நினைச்சேன். இப்பத்தானே தெரியுது... அதுக்கு அப்பனும் இல்லே; ஆத்தாளும் இல்லேயுன்னு."

சுந்தரம் எரிச்சலுடன் கூறினான்: "ரொம்ப சரி. அவளை உன்கூடவே கூட்டிட்டுப் போ."

அவ்வளவுதான். கிழவி பெரிசாய் சத்தம் போடத் தொடங்கிவிட்டாள்.

"ஏன்டா, செய்யமாட்டேன்னு நினைச்சியா? ஆனா, அவளைக் கூட்டிட்டு, என் மகளைக் கொன்ன என் புருஷன், மக்காகிட்ட போகமாட்டேன்டா... இங்கேயே இருந்துட்டு, ஒரு பைசாவுக்குப் பயனில்லாதவங்களை எல்லாம் அடிச்சு விரட்டுவேன்."

"........."

"என்ன முறைக்கிறே? பாப்புவுக்கு நீ அப்பனே இல்லை. அதாலேதானே அதோடப் பசி உனக்குத் தெரிய மாட்டேங்குது. நீயே இப்படின்னா, அருந்ததிக்கு என்ன முடை? பழைய சோறைத் தவிர வேறு எதையுமே கண்ணாலப் பார்க்கலைடா என் பேத்தி..." கிழவி, குரலுடைந்து அழுதாள்.

காலையில் பாப்பு சொன்னதெல்லாம் மறுபடியும் மனசுக்குள் ஓடியது.

"பாப்பு, முன்னே பின்னே தெரியாதவங்ககூட எல்லாம் வெளியே போகக்கூடாது. எதுக்காகப் போறே?"

"........."

"சொல்லு. எதுக்காகப் போறே?"

"சொன்னா நீ கோவிச்சுக்குவே."

"மாட்டேன்... சொல்லு."

"சத்தியமாக் கோவிக்கமாட்டேன்னு சொல்லு."

சிறுமி, பஞ்சு மிட்டாய் போன்ற தன் உள்ளங்கையை நீட்டியபோது... ஆடிப்போய்விட்டாள், கிழவி.

அபிராமியும் இப்படித்தானே... தயங்கித் தயங் கி, ஆனால்,



மிக சாமர்த்தியமாக, தாயிடம் சத்தியம் வாங்கிய பிறகே நடந்ததைச் சொல்லுவாள்.

"அம்மா... கோவிச்சுக்கமாட்டேன்னு சத்தியம் செய்."

"அதெப்படி? நீ என்ன செஞ்சியோ? விசயம் என்னன்னு தெரியாம எப்படி சத்தியம் செய்வேன்?"

"அப்ப சொல்லமாட்டேன்... போ."

நெஞ்சம் பதைக்க, உயிர் துடிக்க, இவள்தான் மகளின் பின்னால் ஓடுவாள்.

"சனியனே... கையைக் காட்டு. சத்தியமா உன்னைத் திட்டமாட்டேன்டீ மூதேவி..."

"பார்த்தியா... திட்டமாட்டேன்னு சொல்லிட்டே திட்டுறியே? முதல்லே சத்தியம்... அப்புறம்தான் மத்ததெல்லாம்."

பட்டுப்பாவாடை, தாவணி விசிற அபிராமி சுற்றிச் சுற்றி வந்து அவளை ஆட்டம் காட்டிய நாட்கள்...

அண்ணனின் ஸ்கூட்டரை எடுத்துப்போய் உடைத்ததில் இருந்து, கிரிக்கெட் விளையாடி எதிர் வீட்டுக்காரியின் மண்டையைப் பிளந்தது வரையில்... இதுபோல் எத்தனை விசயங்களைச் சத்தியம் வாங்கிக்கொண்டு தாயிடம் சொல்லியிருக்கிறாள்.

அபிராமி பாட்டுக் கச்சேரிக்காகப் போவதைக்கூட அம்மாவிடம் சத்தியம் வாங்கிக்கொண்டு சொல்லியிருக் கிறாள்.

ஆனால், தன் காதலையோ... காதலனுடன் ஓடிப்போய் வயிற்றில் சுமையுடன் திரும்பி வந்ததையோ தாயிடம் சொல்லவே இல்லை.

"யாருடீ அவன்?"

"........."

"கேட்கிறேனில்லே? இத்தனை வருடமா உன்னை ஈ எறும்புகூட மொய்க்காதபடி வளர்த்தேனே... அதுக்கு

நீ எனக்குக் கொடுக்கிற சன்மானமா இது? ஏன்டீ... எடுத்ததுக்கெல்லாம் 'கோவிச்சுக்கக்கூடாது'ன்னு சத்தியம் செய்யச் சொல்லுவியே... இப்பக்கூடச் சொல்றேன்... உன்னைத் திட்டமாட்டேன்... நிசத்தைச் சொல்லு. மூணு மாசமா எவன்கூடப் போய் இருந்துட்டு வர்றே?"

உதட்டைப் பற்களால் கடித்தபடி அழுத்தமாய் நின்றாள், மகள்.

**த**ன் கணவரிடமும், மகன்களிடமும் எத்தனை தடவையோ வாதாடிப் பார்த்துவிட்டாள், கிழவி.

"என்னங்க... பால் திரிஞ்சாச்சு. அதை மறுபடியும் பாலாக்குவேன்னு குதிச்சா எப்படி? பேசாம அந்தக் கழுதையை காதலிச்சவன்கூடவே ஓட்டி விட்டுடுங்க... இன்னொருத்தனுக்கு கட்டி வச்சு... அவன் வாழ்க்கையையும் சீரழிக்க வேண்டாம்."

"நீ சும்மா இரு. எல்லாம் எங்களுக்குத் தெரியும்."

வீட்டு ஆண்பிள்ளைகளின் எகிறல்களுக்கு முன் அவள் எம்மாத்திரம்?

அவள் கண்ணெதிரேயே மகளின் கழுத்திலிருந்தத் தாலி பறிக்கப்பட்டதும், புதுத் தாலி ஏறியதும், மகளின் காதல் கணவன் அவளைத் தேடி வீடு வரை வந்தபோதெல்லாம் அந்த வீட்டு கவுரவமிக்க ஆண்கள், கிழவியை உள்ளே தள்ளிவிட்டு, வாசலில் நிற்கும் அவனை அடித்து விரட்டியதும்...

சுலபத்தில் மறக்கக்கூடிய சம்பவங்களா?

ஒரேயொரு சின்ன ஆறுதல்!

தங்கள் இனத்திலேயே பார்த்துப் பார்த்து– அபிராமிக்கு முடித்த மாப்பிள்ளைக்கு, நடந்த இந்த கதையெல்லாம் தெரியும்.

புதுசாய் சொல்ல ஒன்றுமேயில்லை.

'இருந்தாலும் இது பாவமில்லையா?'

அவளது மனசாட்சி உறுத்தலுக்கு, கணவர் அளித்த பதில்–



"அதுக்குத்தான் வீடு, நிலம், பணம், கடைன்னு எல்லாம் தந்திருக்கோம். பைத்தியமே... இதெல்லாம் சிறுவயசுல எல்லாரது வாழ்க்கையிலும் நடக்கிற தப்புதான். இவ்வளவு சொல்றேனே... நான்கூட, என் வாலிப வயசுல, கோவில் தர்மகர்த்தா பொண்ணைக் காதலிச்சேன்.

அவங்க அய்யரு. நான்? என் சாதியும் ஒசத்தின்னாலும் அவங்க சாதியில் கட்டமுடியாது. ஏழெட்டு மாசம் பித்துப் பிடிச்சாப்பல அலைஞ்சேன்... லட்ச லட்சமா சீதனத்தோடு நீ வந்தே. பிடிக்காமத்தான் கட்டிகிட்டேன். நாலு புள்ளே பெத்துக்கலே... அதுமாதிரி இதுவும் சரியாப்போயிடும். மாப்பிள்ளை தங்கமானவன். ரொம்பவும் பொறுமைசாலி. நம்ம பொண்ணு மனசு கோணாம அவன் நடந்துப்பான்."

"........."

"நீ வேணாப் பார்த்துட்டே இரு. பத்தாம் மாசமே பேரனையோ,பேத்தியையோ பெத்துக்கொடுக்கப்போறா உன் பொண்ணு."

**பா**ப்பு பிறந்தபோதுகூட, தன் கணவனின் வாக்கு பலித்துவிட்டது என்றுதான் நினைத்தாள், கிழவி.

எட்டாம் மாதமே பிள்ளை பிறந்தது பற்றி, கொஞ்சம்கூட சந்தேகப்படவில்லை.

'குறை மாசப் பிள்ளை' என்றுதானே நினைத்தாள்.

இப்பொழுதுதானே விசயம் ஒவ்வொன்றாய் வெளி வருகிறது.

'பாவி மக... சத்தியத்தைக் கேட்டு வாங்கிட்டு, எனக்கு மட்டுமாவது சொல்லியிருக்கலாமே? இப்படி ஒரு விஷ விதையை மனசுக்குள்ளேயே வச்சிட்டுத்தான் மறுகி செத்தியா என் கண்ணே..." அவள், நினைத்து நினைத்து அழுதாள்.

இப்போது, பாப்பு கேட்டபோதுகூட அவளை வாரியணைத்து, உச்சிமுகர்ந்து, அவளது உள்ளங்கையில் அடித்து சத்தியம் செய்தாள்.

"திட்டமாட்டேன்டீ... சொல்லு."

"பாட்டி... நான் நல்லாப் பாடுவேன்."

'திக்'கென்றாகியது, கிழவிக்கு.

"மாடி வீட்டு அக்காவும், அந்த அங்கிளும் பாட்டு பாடுறாங்க. கல்யாணம், கோவில் விழாவெல்லாம் வந்தா, போய் சினிமா பாட்டெல்லாம் ரொம்ப நல்லாப் பாடுவாங்க. அவங்கதான் என்னையும்..."

"ஏன்டீ... இதுக்கா என்கிட்ட கோவிக்காதேன்னு சத்தியம் வாங்கினியா? கடன்காரி... ஆத்தாளைப் போலவே இருக்கியேடி..."

"உஷ்... சும்மா கத்தாதே ஆயா. நல்லாப் பாடினா, எத்தனை பேரு சந்தோசமா கைதட்டுவாங்க தெரியுமா? அதுமட்டுமில்லே... எல்லா இடத்துலேயும் அமுதா அக்காவும், அந்த அங்கிளும் என்னை அன்பாகத் தூக்கிட்டுப் போய் வடை பாயசத்தோடு சாப்பாடு ஊட்டி விடுவாங்க."

"வடை, பாயசத்துக்கு ஏங்கி, ஊர். ஊராகப் போய் பிச்சைக்காரி மாதிரி பாடுறியாடி?"

"யாரு பிச்சைக்காரி... நானா? நான் ராணியாம். அந்தக் குழு வுல முருகேசன்னு ஒரு அங்கிள் இருக்காரு. அவரு என்னை 'குட்டி ராணி'ன்னுதான் கூப்பிடுவார். இங்கே வீட்டுல இருந்தா– எப்ப சோறு கிடைக்கும் தெரியுமா?

பகல் ரெண்டு மணிக்கு மேல்தான். அதுவும் பழைய சோறு... பள்ளிக்கூடம் இருந்தாத்தான் சுடுசோறு. அதுக்காக சனி, ஞாயிறுலகூட பள்ளிக்கூடம் இருந்தா தேவலைன்னு எத்தனை நாள் அழுதிருக்கேன் தெரியுமா?"

கிழவி விக்கித்து நின்றாள்.

"மாசம் ஒரு தடவை கொஞ்சம் அரிசியும், முறுக்கும், வாழைப்பழமும் வாங்கிட்டு வர்றியே... நீ, தாத்தா, மாமா எல்லாரும் தினமும் நல்லா சாப்பிடுவீங்கதானே? நான் மட்டும் எப்படி?"

கிழவி, தன் பேத்தியை மார்போடு சேர்த்தணைத்துக் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.



அதன் எதிரொலிதான், இரவு சுந்தரத்திடம் வெடித்தது.

"நீ என் மகளுக்கே கணவன் இல்லேன்னா, என் பேத்திக்கு எப்படி அப்பனாக முடியும்? நீயும், அந்த மேனாமினுக்கியும் அனுபவிக்கிறதுக்காக வீட்டையும், வாசலையும் நான் சீதனமாக் கொடுக்கலே. எத்தனை சீக்கிரம் வீட்டைவிட்டு காலிபண்ணுவீங்களோ தெரியாது... ஆனா நிச்சயமா போயிடணும்."

அவள் குரலில் இருந்தத் தீவிரம், சுந்தரத்தை பலமாகத் தாக்கியது.

## 9

வீடே இருளில் மூழ்கிக்கிடந்தது. கணேசனுக்கு வியப்பை அளிப்பதாய் இருந்தது.

"என்ன ஆச்சு... விளக்குகூடப் போடாம எல்லாரும் இருட்டுல என்ன செஞ்சிட்டிருக்கீங்க?"

"........"

"என்னாங்கடா... எழவு விழுந்தாப்பல ஆள் ஆளுக்கு இருக்கிறீங்க?"

அமுதா எழுந்து வந்து விளக்கைப் பொருத்தினாள். வசந்தா எழுந்திருக்கவே இல்லை. கூடத்தின் சுவரோரமாய் சுருண்டுப் படுத்திருந்தாள். பிள்ளைகள் இரண்டும் கன்னத்தில் கை வைத்து உட்கார்ந்திருந்தன.

கதிர்...

முகம் பார்க்கச் சகிக்கவில்லை; அழுதிருப்பான் போல.

கணேசனுக்குப் புரியவில்லை.

அவன் தந்தை சிவமூர்த்தி இறந்தபோதுகூட, யாரும் இப்படி துக்கம் கொட்டவில்லை.

'மாமனாருக்குப் பிடிக்கும், பிடிக்கும்' எனச் சொல்லிக் கொண்டே வெங்காய சாம்பாரும், பூண்டு ரசமும்

செய்தவளாயிற்றே, இந்த வசந்தா.

அமுதாதான் நிலைமையை விளக்கினாள்;

"அந்த... பாப்புவோட அம்மா... வேறு யாருமில்லே அத்தான்... அபிராமிதான்."

"யாரு?"

"அபி... அபிராமி... உங்க தம்பியோட..."

"என்னது?"

அதிர்ந்து உட்கார்ந்துவிட்டான், அவன்.

கணேசனைப் பொறுத்தமட்டில்– கதிர், அபிராமியைக் காதலித்ததிலோ, ஓடிப்போய் திருமணம் செய்து கொண்டதிலோ எந்த வருத்தமுமில்லை. ஆனால்...

மனைவியை மீட்டு வருவதற்காக கதிர், ஒவ்வொரு முறையும் அவள் வீட்டுக்குப் போய்விட்டு, செருப்படி பட்டுத் திரும்பியபோதெல்லாம் மனம் நொந்து திட்டியிருக்கிறான்.

"அவளெல்லாம் பணக்காரிடா... கல்யாணங்கிறது காப்பி குடிக்கிற மாதிரி, அவளுக்கு. போய் வீணா அடிபட்டு சாகாதேடா... உன்னை இதுக்காகவா கடனை உடனை வாங்கி நம்ம அப்பா படிக்க வச்சாரு?"

"பணம், பணத்தோடுதான்டா சேரும். உங்க அண்ணி சொல்றாப்பல– நீ, அவளுக்கு மேல வாழ்ந்து காட்டணும். அதுதான்டா சவால்."

இப்படி, தம்பிக்கு எத்தனையோ அறிவுரைகளைச் சொல்லி இருக்கிறான்.

ஆனால், தம்பி ஆசை ஆசையாய் காதலித்து மணந்தவள் செத்துப்போய் ஒன்பது ஆண்டாகிறது என்றால்...

ஆடித்தான் போய்விட்டான்.

"என்னடா சொல்றா இவ?" என்று, தம்பி இருந்த பக்கம் பாய்ந்தான். கதிரோ, தலையிலடித்துக்கொண்டு கதறினான்.

"அண்ணா... அவ இருக்காள்னு நினைச்சிட்டு



இருந்தேன்ணா... செத்துட்டாள்னு நம்பமுடியலே. எத்தனை தரம் அவ வீட்டுக்கு அலைஞ்சிருப்பேன்... பாவி... ஒண்ணுமில்லாத அல்ப விசயத்துக்கு எல்லாம் போன் பண்ணுவாளே... இடையில் பேசலைன்னதும் ஒரேயடியா ஒதுங்கிட்டாள்னு நினைச்சிட்டேன்."

அவன் ஓங்கி ஓங்கி தலையிலடித்துக்கொள்ள, ஓடிவந்து அவனது இரு கைகளையும் இறுகப் பிடித்துக்கொண்டாள், அமுதா.

"சரி... நடந்தது நடந்துபோச்சு... தலையில அடிச்சிகிட்டா திரும்பி வரப்போறாளா? 'மாடியிலதான் மூத்தாள் தூக்கு மாட்டிட்டு செத்தாளாம்'னு ஒருநாள் அருந்ததி சொல்லிட்டு இருந்தா. அது, அபிராமிதான்னு தெரியாமப் போச்சே..."

அமுதாவுமே அடக்கமுடியாமல் அழுதாள்.

கணேசன், தன் மனைவியைப் பார்த்தான். சாதாரணமாய் இதுபோன்ற நேரங்களில் ஆயிரம் பேச்சு கொட்டி முழக்குபவள்... முடங்கிக் கிடக்கிறாளே!

"வசந்தா..."

"உம்..."

"என்ன நீகூட சோர்ந்து படுத்துட்டே?"

அவள் பதிலே பேசவில்லை. முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டு விம்மினாள்.

அப்போதுதான் கதிர், அண்ணனை தனியே அழைத்துச் சொன்னான்:

"பாப்பு... என் குழந்தை அண்ணே..."

"என்னடா சொல்றே?"

அவன் திக்கித் திணறிச் சொன்னான்.

"ரெயிலேறும்போதுதான் சொன்னாள் அண்ணே... நாப்பது நாள் தள்ளிப்போயிருக்குன்னு. இப்ப... என் குழந்தையை அநாதையாக்கிட்டு..."

அதைக்கேட்டு, வசந்தா குலுங்கி அழுதாள்.

தன் மனைவியின் மனசு இத்தனை இளகியது என்பதே அப்போததுதான் புரிந்தது, கணேசனுக்கு.

"அழாதே வசந்தா... உன் நல்ல மனசு எனக்குப் புரியுது. ஆனா..."

"ஐயோ... என்னைக் கொல்லாதீங்க. அன்னிக்கு அப்பாவுக்கு உடம்பு மோசமானப்ப, முருகேசுகிட்டச் சொல்லி, கதிர் எங்கே இருந்தாலும் பெண்டாட்டியோடு புறப்பட்டு வரச்சொன்னீங்க இல்லையா? முருகேசு மறுநாள் காலையில சென்டிரல் ஸ்டேஷனுக்கு போய் கதிரையும் அந்தப் பொண்ணையும் அழைச்சிட்டு வர்றதா சொன்னான்... நான்... நான்..." அவள் முகத்தை மூடிக்கொண்டு குலுங்கினாள்.

"நான்தான்... அந்த அபிராமி வீட்டுக்கு போன் செஞ்சு, இத்தனை மணி வண்டியில் வர்றாங்கன்னு சேதி சொன்னேன். போன் நம்பர் கதிரோட டைரியில் இருந்தது."

"அடிப் பாவி..."

அலறிய கணேசன், மனைவியின் கன்னத்தில் ஓங்கி அறைய... அவள் குரலெடுத்து அழுதாள்.

"என் தங்கை வாழவேண்டிய இடத்துக்கு எவளோ வந்துட்டாளேன்னு தப்புபண்ணிட்டேனே... அய்யோ, அந்தப் பொண்ணை வாழவிடாம சாகடிச்சிட்டேனே..."

அமுதா ஒருபக்கம் அக்காவிடம் சீறினாள்: "பாரு... நீ அவளை ஒழிச்சுக்கட்டினே... நான் இங்கே ரொம்பத்தான் ஆனந்தமா இருக்கேன்."

**அ**ன்றிரவு–

யாருமே தூங்கவில்லை. கீழ் வீட்டில்கூட வெகு நேரம் விளக்கெரிந்துகொண்டிருந்தது. கிழவி, வாசல் திண்ணையிலேயே உட்கார்ந்து 'டொக்... டொக்' என்று பாக்கு இடித்துக் கொண்டிருந்தாள்.



கதிர், அந்தக் கணமே ஓடிப்போய் பாப்புவைத் தூக்கி வந்துவிடவேண்டுமெனத் தவித்தான்.

வசந்தாவும் புலம்பினாள்: "இனிமே அந்தக் குழந்தை அங்கே இருக்கவேண்டாங்க. கடவுள் நமக்கு ரெண்டு ஆம்பிளைப் பசங்களைத்தானே தந்திருக்காரு! பொண்ணில்லாதக் குறை தீர, அவளை நானே வளர்க்கிறேன். போய் அந்தம்மா காலில் விழுந்து, நடந்ததைச் சொல்லி..."

கணேசன்தான் அவளை இழுத்து மூலையில் தள்ளினான்.

"வச்சாக் குடுமி; சிரைச்சா மொட்டையா? நீ அன்னிக்கு அப்படி செஞ்சிருக்கவும் வேண்டாம். இப்ப இப்படி கழனிப் பானையில விழுந்த பல்லி மாதிரி துள்ளவும் வேண்டாம். 'கம்'முன்னு கிட."

"அண்ணே..."

கதிர்தான் தயக்கத்துடன் தமையனை அழைத்தான்.

"அண்ணி சொல்லுறதுல என்னண்ணே தப்பிருக்கு? நம்ம குழந்தையை நாம கேட்கிறோம். அவங்க பணம், காசு எதுவுமே எனக்கு வேண்டாம்."

"அது சரிப்பா... திடீர்ன்னு போய் நின்னு, பாப்புவுக்கு அப்பன் நானதான்னு சொன்னால், கிழவி விளக்குமாறைத் தூக்கிட்டு வருவா. உன்கிட்ட என்ன ஆதாரம் இருக்கு?"

"அபியும் நானும் மாலையும் கழுத்துமாச் சேர்ந்து எடுத்துகிட்ட படம் இருக்கு அண்ணே."

"அதுமட்டும் போதாது கதிர். குழந்தை உன்னதுதான்னு நிரூபிக்க ஆயிரம் பரிசோதனை செய்யணும்பாங்க. மேலும் பாப்பு ஒண்ணும் குப்பையில கிடக்கிற குன்றிமணியில்லே. இன்னிய தேதிக்கு இந்த வீடு, மெக்கானிக் கடை, பத்து ஆட்டோ... எல்லாம் சேர்த்து நாப்பது, அம்பது லட்சத்துக்கு சொந்தக்காரி. சுந்தரம், இத்தனையையும் அத்தனை சுலபமா விட்டுடுவான்னா நினைக்கிறே? மாட்டான்."

"எனக்குத்தான் ஒண்ணுமே வேண்டாம்... பாப்பு மட்டும்

போதும் என்கிறேனே..."

கதிர் வெறிபிடித்தவன் போலக் கத்தினான். கண்ணும், முகமும் மிளகாய் பழம் போலச் சிவந்துவிட்டன.

அமுதா, அவனெதிரில் வந்து நின்று முறைத்தாள்.

"ஏன் நிறுத்திட்டீங்க? இன்னும் சத்தமாகக் கத்த வேண்டியதுதானே? உங்களுக்கென்ன, கிறுக்கு பிடிச்சிடுச்சா? நான் ஒருத்தி இருக்கேனில்லே? உங்களையும் பாப்புவையும் ஒண்ணுசேர்க்காம அப்படியே விட்டுடுவேனா... சொல்லுங்க."

"........."

"அவ யாரு, என்னன்னு தெரியாதபோதே நீங்க, அவகூடப் பேசணும்ன்னு ஆசைப்பட்டப்ப, உங்களுக்குத் தெரியாம, கச்சேரியில் கொண்டுவந்து நிறுத்தலே... அதுமாதிரி, இப்பவும் ஏதாவது செஞ்சு, அவளை உங்களோடு சேர்த்து வைப்பேன்."

"அது வந்து... அமுதா..."

"பாருங்க... இருபத்திமூணு வயசுல அபிராமியை இழுத்துட்டு, ஊரைவிட்டு ஓடினப்ப, எப்படி அறிவு கெட்டத்தனமா நடந்துகிட்டீங்களோ, அதேமாதிரிதான் இப்பவும் நடந்துக்கிறீங்க. வயசு ஏறினதுக்கு ஒண்ணும் உங்ககிட்ட விவேகத்தைக் காணோம்."

"அமுதா..."

அவன் திகைத்து நின்றான். ஏன், கணேசனும், வசந்தாவும்கூட அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்தார்கள்.

"பொறுமையா இருங்க. நம்ம பக்கம் உண்மை இருந்தாலும், அதைச் சொல்லவேண்டிய நேரம் வந்தாத்தான் சொல்லணும். எங்கேயோ இருந்த உங்களை, உங்க அபிராமி, தன் வீட்டுக்கே கொண்டுவந்து சேர்த்திருக்கா. எதுக்காக? தன்னோட வாழ்க்கைதான் இப்படி அல்ப ஆயுசுலே போயிடுச்சு; தன் மகளாவது பெத்த தகப்பனோடு சேர்ந்து இருக்கணும்ன்னு தானே! அந்த எண்ணமும் தானாக நடக்கும். நிச்சயம் உங்க



அபிராமி நடத்தி வைப்பா."

"அமுதா... அமுதா..."

கதிர், அவளது உள்ளங்கைகளில் முகம் புதைத்து, சிறு குழந்தை போல அழுதான்.

கணேசனும், வசந்தாவும் இந்தக் காட்சியைக் காணச் சகிக்காமல், தங்கள் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டனர்.

அடுத்த நாலைந்து நாளில்...

கீழ் வீட்டில் என்னென்னவோ நடந்துவிட்டது.

அருந்ததியைப் பார்க்க மேடவாக்கம் மாமன் வர– கிழவி, மாமர மேடையிலேயே உட்கார்ந்து அவனை வழிமறித்து, பேசவேண்டியதைப் பேசித் தீர்த்தாள்.

"ஏம்பா... எத்தனை நாளைக்குத்தான் உன் பொருளை இரவல் கொடுத்து வைப்பே? அழைச்சிட்டுப் போயிடேன்."

"அ... அருந்ததி... இவங்க என்ன சொல்றாங்க?"

"ஏம்பா, நான் என்ன, இங்கிலிசுலேயா சொல்றேன்? தமிழிலேதானே சொல்றேன்? அருந்ததி உன்னோட வைப்பு... அந்தக் குழந்தை உனக்குப் பொறந்தது... ஆக, அவங்களுக்கு இங்கே என்ன வேலை?"

"ஏய் கிழவி, மரியாதையாகப் பேசு. அருந்ததி என் அக்கா மக. அவளைப் பார்க்க வந்துட்டுப்போறேன். எனக்குன்னு பெண்டாட்டி, குழந்தைங்க மேடவாக்கத்துல இருக்கு."

"தூ... இதைச் சொல்ல உனக்கு வெட்கமாயில்லே? என் வீட்டுல இந்த கண்ணறாவியெல்லாம் நடந்தா, எனக்கு நாக்கைப் பிடுங்கிட்டு, நாண்டுகிட்டு சாகலாம் போல இருக்குடா... முதல்லே இடத்தைக் காலிபண்ணு. இனி இந்தப் பக்கம் காலை வச்சே... வெட்டிடுவேன்."

கிழவி லேசுபட்டவளில்லை. அந்த மிரட்டலும், விரட்டலும் அடேயப்பா... உட்கார்ந்த இடத்திலிருந்தே ராஜாங்கம் செய்தாள்.

அருந்ததி அழுதுகொண்டே வெளியே வர, ராசுகுட்டியும் பின்னால்...

முதல் தடவையாய் பிள்ளையைத் தூக்கி, மேடவாக்கம் மாமன் கையில் 'ணக்'கெனத் திணித்தாள், அவள்.

"புள்ளையைப் பிடியுங்க. சாமானெல்லாம் கட்டி வச்சிருக்கேன். எடுத்துட்டு வர்றேன்."

"அடியேய்... பெட்டி, சட்டி எல்லாத்தையும் திறந்து காட்டிட்டு எடுத்திட்டுப் போ. உனக்கு அந்த சுந்தரம் வாங்கிப் போட்ட நகையைத் தவிர, என் பொண்ணோடது ஒரு திருவாணிகூட குறையக்கூடாது. எல்லாத்தையும் என் கையில கொடு."

"அப்ப, நான் இங்கே இத்தனை காலம் குப்பை கொட்டினதுக்கு என்னதான் லாபம்?" அருந்ததியும் கத்தினாள்.

"அதை, அந்த சுந்தரத்துகிட்ட கேளு. நான், வீடு தந்தேன். நீ அதை 'லாட்ஜ்' ஆக்கினே. மகாலட்சுமி மாதிரி என் பேத்தியைப் பார்த்துக்கிற பொறுப்பை ஒப்படைச்சேன். நீ, அவளை பழைய சோறு தின்ன வச்சே... உன்னை சொல்லிக் குத்தமில்லேடீ... என் வீட்டு ஆம்பிளைங்களைச் சொல்லணும். சாதி, சாதின்னு சகதியில போய் விழுந்தாங்க இல்லே... அதான்..."

அருந்ததி கிளம்பும்போது– மகள் அபிராமியின் நகைகளை கணக்குப் பார்த்து எடுத்து வைத்தாள், கிழவி. பிறகு, அவளிடம் இருபதாயிரம் ரொக்கத்தைக் கொடுத்தாள்.

"இந்தா வச்சுக்க. என் வீட்டுக்கு வந்தவங்களை நான், வெறுங்கையா அனுப்பினதில்லே. எல்லாத்தையும் உன் மாமன்கிட்ட கொடுத்துட்டு, ஏமாந்து நிற்காதே... புத்தியோடு பிழைச்சுக்க."

அருந்ததி போகும்போது, சுந்தரம் இல்லை. கடையை பூட்டிவிட்டு எங்கோ போய்விட்டான்.

இரண்டு நாள் அந்தப் பக்கமே தலைகாட்டாமல்



இருந்தவன் பூனை போல ஒருநாள் மாலை வந்து சேர்ந்தான்.

அருந்ததி பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

மாமரத்தடியில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருந்த பாப்புவை இழுத்து, தன் மடியில் இருத்திக்கொண்டான்.

பழக்கமில்லாதக் காரணத்தால், குழந்தை திமிறினாள்.

"இந்தா, குழந்தையை விடு."

கிழவி உறும, வலிய வரவழைத்துக்கொண்ட சிரிப்புடன் அவன் சொன்னான்:

"அவ என் மக. இதை யாராலேயும் மாத்த முடியாது. அவளோட பிறப்பு சான்றிதழில்கூட தகப்பன் நான்தான்னு போட்டிருக்கு."

"சரிதாம்ப்பா. ஆனா, உனக்கும் என் மகளுக்கும் கல்யாணமாகி எட்டாம் மாச தொடக்கத்துலேயே என் பேத்தி பொறந்துட்டா. அதுமட்டுமில்லே... குழந்தை முழு வளர்ச்சியோடுதான் பொறந்ததுன்னு டாக்டரம்மா எழுதிக் கொடுத்திருக்காங்க."

"........."

"சுந்தரம்... நீ ஆண்மை இல்லாமப்போனது உன் தப்பில்லே; அது கடவுள் தந்த தண்டனை. அதைக்கூட நான் பெரிசா நினைக்கலேப்பா. உன் மகளே இல்லாத பாப்பு மேல கொஞ்சமாவது நீ பரிவோ, பாசமோ காட்டியிருந்தா... உனக்கு தங்கரதம் செஞ்சு, என் கையாலே தெருவெல்லாம் இழுத்து வந்திருப்பேன். உனக்குத் தேவை பணம். வெளிப் பார்வைக்கு ஒரு குடும்பம்..."

"........."

"எல்லாத்தையும் கபாலி சொன்னான். அவனை யாருன்னு நினைச்சே? நான் வச்ச ஆளுப்பா. ஒவ்வொரு தடவையும் நீ பாப்புவை அடிக்கிறப்ப ஓடிவந்து தடுப்பானே... என்கிட்ட சொல்லி என்னமாய் அழுவான்."

"இப்ப என்னை என்ன செய்ய சொல்றே?"

"அப்படிக் கேளு. அது புத்திசாலித்தனம். உன் பேருல பத்து ஆட்டோ ஓடுது. எடுத்துக்க. நடையைக்கட்டு."

"இது அநியாயம்... கோர்ட்டுக்கு போவேன்."

"போ... அப்ப அந்த ஆட்டோ ஆர்.சி. புத்தகம் எல்லாத்தையும் பிடுங்கி வைக்கச் சொல்றேன். எந்த கோர்ட்டுக்கு வேணுமானாலும் போ. உன்னால ஆனதைப் பார்த்துக்க."

வெகுநேரம் வரை வாசலில் நின்று கத்திவிட்டுப் போனான், அவன்.

கிழவிக்குத் துணை இப்போது கபாலியும், மற்ற இரு பையன்களும்தான்.

வாசல் கடையில் உட்கார்ந்தபடி, கதிர் அலுவலகத்துக்குப் போவதையும், வருவதையும் பார்ப்பாள். மாமரத்து மேடையில் பாப்பு இருந்தால், அவளை அப்படியே பூங்கொத்து போல அவன் அள்ளிக்கொண்டு மாடிக்குப் போவதையும் கவனிப்பாள்.

**எ**ங்குமே அசையாதக் கிழவி, அன்று மாடியேறி– மூச்சிரைக்க வந்து நின்றாள்.

கதிர், தன் தட்டில் இருந்த தோசையைப் பிய்த்து பாப்புவின் வாயில் ஊட்டிவிட்டுக்கொண்டிருந்தான்.

கிழவியைப் பார்த்ததும் பதறி எழுந்தான்.

"அடடா... நீங்க உட்காருங்க. அமுதா இல்லே?"


இதற்குள் அமுதா வர, பின்னாலேயே வசந்தாவும், கணேசனும்.

"இங்கேயே தினமும் சாப்பிட்டுடுறாளா... அதான் வீட்டுல சாப்பிடவேமாட்டேங்கிறா."

அமுதா, சமாளிப்பது போலச் சிரித்தாள்.

"அவளுக்கு நான் தோசை சுட்டுப் போட்டாப் பிடிக்கும். சாப்பிடுறப்ப அவருக்கும் பாப்பு வேணும். தப்பா நினைச்சுக்காதிங்க."





கிழவி, கதிரைப் பார்த்துப் புன்னகைத்தாள். ஆனால், கேள்வி என்னவோ அமுதாவிடம்தான்:

"இவருதான் பாட்டு கச்சேரி செய்யுறவரா?"

"........."

"பாப்பு, இவரைப் பற்றியேதான் பேசிட்டிருக்கும். தாய், தகப்பனில்லாதப் பொண்ணுதானே? பாசத்துக்கு ஏங்கிப் போயிருக்கு."

கதிர், விம்மி வெடித்துவிடுபவன் போல ஆகிவிட்டான்.

கிழவி பெருமூச்செறிந்தாள்.

"என் மககூட நல்லாப் பாடுவா. ஒரு பாட்டுக்காரப் பையனோடுதான் ஓடிப்போனா. அது பிடிக்கலே, என் வீட்டு சனங்களுக்கு. எப்படியோ, ஊருக்குத் திரும்புகையிலே, ரெயில்வே ஸ்டேஷன்லே வச்சி கோழியை அமுக்குறாப்பல அமுக்கி, இழுத்துட்டு வந்துட்டாங்க."

"........."

"அது என்னா பெரிய இடி... அய்யோ... இப்ப நினைச்சாலும் என் ஈரல்குலை நடுங்கும்."

கதிர், பாப்புவின் வாயைத் துடைத்து விளையாட அனுப்பிவிட்டு, மூத்தவளின் அருகில் பரிவுடன் வந்தமர்ந்தான்.

"அப்ப பாப்பு..."

"அநாதை தம்பீ... தாத்தா, பாட்டி, மாமாக்காரனுங்க தடித் தீவட்டி மாதிரி மூணு பேர்... எல்லாரும் இருந்தும் யாருமில்லாத பாவியா நிக்கிறா..."

"அய்யோ... அப்படிச் சொல்லாதீங்க... பாப்புவுக்கு நானிருக்கேன்."

கிழவி, இடுங்கிய கண்களில் நம்பிக்கைச் சுடர்விட, அவனைப் பார்த்தாள்.

"இந்த வார்த்தையே எத்தனைத் தெம்பா இருக்கு



தெரியுமா? நான், ரெண்டு நாளு இங்கே இருந்து, என் மகளோட நினைவு நாளைச் செஞ்சிட்டுப் போகத்தான் வந்தேன். அரை மணி நேரம் பிந்தி போனாலும் வாசல்லே நிற்க வைச்சு கேள்வி கேட்பாரு என் புருஷன்.

நான் வாங்கிட்டு வந்த வரம் அப்படி. இந்தத் தடவை பத்து நாளாயிடுச்சு. போன் செஞ்சு, விவரமெல்லாம் சொன்னேன். 'புள்ளையைத் தூக்கிட்டு வந்தே, கொன்னுபோட்டுடுவேன்'னு சொல்லிட்டாரு. அவரு செய்தாலும் செய்வாரு. நாளைக்கு நான் போனாலே– எத்துவாரு. அவரு மேல்சாதி இல்லே?"

"........."

"ஆனா, அதுக்கெல்லாம் பயப்படுறவ நானில்லே. நானும் அதே சாதிதானே? அந்தத் திமிரும், கோவமும், பிடிவாதமும் எங்கே போகும்? கொடுக்கிற அடியை வாங்கிட்டு– ஒரு வாரம், பத்து நாளு அங்காளப் பரமேசுவரி அம்மனை நெனச்சிட்டு– அங்கேயே இருந்துட்டு– மறுபடியும் கிளம்பி இங்கேதான் வருவேன்."

அமுதா வியப்புடன் மூத்தவளைப் பார்த்தாள்.

"ஆமா தாயீ. பணம், காசு, ஆளு எதுக்கும் பஞ்சமில்லே. ஆனா, இந்த ஒரு பிஞ்சுக்கு அங்கே இடமில்லே. நான், அன்னிக்கு மகளுக்குப் பரிஞ்சுப் பேசாதப் பாவியாயிட்டேன். அவளும் வாயைத் திறந்து, 'வயித்துல வந்துடுச்சும்மா'ன்னு ஒரு வார்த்தை சொல்லாம இருந்துட்டா. இனிமே அதைப் பற்றிப் பேசி பயனில்லே."

"........."

"நான் போயிட்டு திரும்பிவர ஒரு வாரம்... இல்லே ஒரு மாசமும் ஆகலாம். அதுவரைக்கும் பாப்புவை நீ பார்த்துக்குவியா, அமுதா? உங்க வீட்டுல இருக்கட்டும். பாட்டும் பாடட்டும், பள்ளிக்கூடமும் போவட்டும். அதுக்கு செலவாகிற காசை..."

கதிர், கிழவியின் இரு கைகளையும் சேர்த்துப் பிடித்துக்

கொண்டு அழதேவிட்டான்.

இதற்குத்தானே காத்துக்கொண்டிருக்கிறான், அவன்.
"இதுக்குமேல ஒரு வார்த்தை பேசாதீங்க. பாப்புவை நானே
வளர்க்கிறேன். தயவுசெஞ்சு, அந்த உரிமையை மட்டும்
எனக்குக் கொடுங்க."

கிழவி, ஓட்டைப் பல் தெரிய சிரித்தாள்.
"நல்லாயிருக்கு. நான், அமுதாவை இல்லே கேட்க
வந்தேன். நீங்க என்னென்னவோ சொல்றீங்க, சரிதான்.
ஆனா, நாளைக்கு உங்களுக்கு கல்யாணமாகி, ஒருத்தி
வந்தாச்சுன்னா... முதல்லே என் பேத்தியைத்தானே
விரட்டுவா."

இப்போது, அமுதா– கதிரை முந்திக்கொண்டு அவசர
மாகச் சொன்னாள்:

"அப்படி எதுவும் நடக்காது ஆயா. அவர் என்னைத்தான்
கட்டிக்கப்போறாரு. எனக்கு முதல் குழந்தையே பாப்புதான்.
கவலையேபடாதீங்க."

அவள் கதிர் பக்கம் திரும்பாமலேயே சொன்னாலும்,
கதிர் அவளை ஒருமுறை திரும்பிப் பார்த்துத் தலை
குனிந்தான்.

"ஆமாங்க. என்னையே அவதான் பார்த்துக்கிறா. இனிமே
பாப்புவையும் சேர்த்துப் பார்த்துப்பா" என்றான்.
"அது போதும் தம்பீ. ஆனா, நான் இங்கே வராம
இருக்கமாட்டேன். என் உசிரு இங்கேதானே இருக்கு"
இப்படிச் சொல்லிவிட்டு எழுந்தவள், கதிரைப் பார்த்துப்
புன்னகைத்தாள்.

"என் மக, ஒரு பாட்டுக்காரப் பையனோடு ஓடினாள்ன்னு
சொன்னேனில்லையா... அந்தப் பிள்ளை பேரு கதிரேசனாம்.
அப்படி என் வீட்டு ஆம்பிளைங்க பேசிப்பாங்க. உங்களுக்கு
அந்த ஆளைத் தெரியுமா தம்பீ?"

கதிர் என்ன பதிலைச் சொல்வது எனத் தெரியாமல்



திகைத்தான். கிழவி, பதிலுக்குக் காத்திராமல் கேட்டாள்:
"இத்தனை நேரம் பேசிட்டு... தம்பி பேரைக் கேட்டுக்கவே
இல்லே... உங்க பேரு என்ன தம்பி?"

"கதிரேசன்தாங்க... கதிருன்னு கூப்பிடுவாங்க" அமுதா
தான் 'பளிச்'செனக் கூறினாள்.

கிழவி, அப்படியே சுவரைப் பிடித்துக்கொண்டு நின்றாள்.
மெள்ளத் திரும்பி, கதிரின் முகத்தை கூர்ந்து பார்த்தாள்.
அழுகையும் ஆனந்தமுமாய் ஒரு நிமிடம் திணறினாள்.

உடனே சுதாரித்துக்கொண்டுவிட்டாள். "ரொம்ப
சந்தோசம். என் வீட்டு ஆம்பிளைங்க இங்கே வரமாட்டா
னுங்க. அப்படி வந்து, ஏதாவது தகராறு செஞ்சா,
'போங்கடா, போக்கத்தப் பசங்களா... பாப்பு என்
பொண்ணுடா'ன்னு தைரியமாகச் சொல்லுங்க.

அதெல்லாம் எதுவும் பேசமாட்டானுங்க. சொந்தத்
தங்கச்சியையே தொலைச்சுத் தலைமுழுகின– சாதியைக்
கட்டிட்டு அழற ஊமை மனுசங்க அவங்க... நான்
வரட்டுமா?"

அவள் படியிறங்கினாள். அந்த நடையில், தெம்பு
இருந்தது. உரிமைக்காரனிடம் உடைமையைச் சேர்த்த
நிம்மதியும் இருந்தது.

"சாயந்தரம் கச்சேரி இருக்கு. பாப்புவுக்குப் புதுப் பாட்டு
தயாரா வச்சுக்குங்க."

அமுதா சொல்ல, அவள் குரலிலுள்ள இனிமையை,
இன்றுதான் முழுமையாய் உணர்ந்தான், கதிர்.

**(முடிந்தது)**

---

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: அ.மா. சாமி,
86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: இ. கல்யாண
சுந்தரம், ராணி பிரஸ், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.